# உயர்கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 - 2025

### மானியக் கோரிக்கை எண். 20


**முனைவர் க. பொன்முடி**

**உயர்கல்வித் துறை அமைச்சர்**



©
தமிழ்நாடு அரசு
2024

## உயர்கல்வித் துறை
## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024-25
## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்புகள் | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1-8 |
| 2. | தொழில்நுட்பக் கல்வி | 10-51 |
| 3. | கல்லூரிக் கல்வி | 52-75 |
| 4. | பல்கலைக்கழகங்கள் | 76-161 |
| 5. | தமிழ்நாடு ஆவணக் காப்பகம் | 162-169 |
| 6. | தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் | 170-175 |
| 7. | தேசிய உயர் கல்வித் திட்டத்திற்கான (RUSA) மாநில இயக்குநரகம் | 176-188 |
| 8. | அறிவியல் நகரம் | 189-196 |
| 9. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் | 197-210 |
| 10 | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் | 211-226 |
| 11. | தமிழ்நாடு மாநில உருது கழகம் | 227-228 |
| 12. | தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றம் | 229-230 |
| 13. | தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் | 231-234 |

## கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண்.20

## உயர்கல்வித் துறை

## 2024–25

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

(திருக்குறள் 400)

மாணவச் செல்வங்கள் படிப்பதற்கு, சமூகமோ, பொருளாதாரமோ, அரசியல் சூழ்நிலையோ எதுவும் தடையாக இருக்கக் கூடாது என்பதே திராவிட மாடல் ஆட்சிக் கொள்கையாகும்.

(மாண்புமிகு முதலமைச்சர் உரை)

### 1. முன்னுரை

இளைஞர்கள், தங்களுக்கு பொருத்தமான மற்றும் சூழலுக்கேற்ற கனவுகளை அடையும் வகையிலான உயர்கல்வியை வழங்குவதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. அதே வேளையில்,

சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் உலகதரத்திலான உயர்கல்வியினை வழங்குவதிலும் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. மக்கள் அனைத்து வளர்ச்சியினையும் பெறுவதற்காக, விளிம்பு நிலை மற்றும் பின்தங்கிய பிரிவினருக்கும் சமமான வாய்ப்பு மற்றும் வழிவகைகள் செய்யப்பட்டு, அனைவரும் உயர்கல்வி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இலண்டன் பல்கலைக்கழகத்தினை மாதிரியாகக் கொண்டு 1857–ஆம் ஆண்டு இந்திய சட்ட மேலவையின் சட்டத்தால் நிறுவப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம், இந்தியாவில் பிற பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு அடித்தளமாக அமைந்துள்ளது.

உயர்கல்வியில் மாணவர் சேர்க்கையில் அகில இந்திய உயர்கல்வி நிறுவனத்தின் (AISHE) கூற்றுப்படி உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது.



இது அகில இந்திய சாரசரியைவிட இரண்டு மடங்கு அதிகம்.

மாநில அரசின், தர மேம்பாடு மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகள் மூலம் மாணவர்களுக்கு உயர்தர உயர்கல்வியை வழங்குவதனால், தேசிய உயர்கல்வி நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பில் (NIRF) 2023–இல், தமிழ்நாட்டின் உயர்கல்வி நிறுவனங்கள் தேசிய அளவில் சிறந்து விளங்குகின்றன.

6 மாநிலப் பல்கலைக்கழகங்கள் ஒட்டுமொத்தப் பிரிவில் முதல் 100 இடங்களிலும், 8 மாநிலப் பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழகங்கள் பிரிவில் முதல் 100 இடங்களிலும் உள்ளன. 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் முதல் 100 இடங்களிலும், மாநிலக் கல்லூரி தொடர்ந்து 3–ஆவது ஆண்டாக 3–ஆவது இடத்திலும் உள்ளன. அண்ணா பல்கலைக்கழகம் (13), பாரதியார்

பல்கலைக்கழகம் (38) மற்றும் அழகப்பா பல்கலைக்கழகம் (43) ஆகிய 3 மாநிலப் பல்கலைக்கழகங்கள் சிறந்த 50 ஆராய்ச்சி நிறுவனங்களின் பிரிவில் இடம்பெற்றுள்ளன.

பாடத்திட்டம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, வேலைவாய்ப்பு மற்றும் புதுமை ஆகியவற்றில் சீர்திருத்தங்களை உள்ளடக்கிய உயர்கல்வியில் தரமான மேம்பாட்டிற்கான வழியினை அரசு வகுத்துள்ளது. தமிழ்நாடு அரசு உயர்கல்வியில் செயல்படுத்தியுள்ள முக்கிய திட்டங்கள் பின்வருமாறு:–

- ❖ 2021–22 முதல் அனைத்துத் தொழிற்கல்வி படிப்புகளிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு.
- ❖ அறிவாற்றல் திறன்களை மேம்படுத்துவதற்கான விளைவுகளின் அடிப்படையிலான பாடத்திட்டம். அதாவது, அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மை (KSA). இது விமர்சன சிந்தனை, பிரதிபலிப்பு, திட்ட அடிப்படையிலான கற்றல், உள்ளூர் மற்றும் உலகளாவிய தேவைகள் மற்றும் தரத்திலான சிக்கலைத் தீர்ப்பது.
- ❖ "புதுமைப் பெண்" மாதாந்திர உதவித்தொகை திட்டத்தின் மூலம், ரூ.1,000/– வழங்கி, அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் பயின்று, தேர்ச்சி பெறும் மாணவிகளை உயர்கல்வி பயில ஊக்கப்படுத்துதல்.
- ❖ நடப்புக் கல்வியாண்டு (2024–25) முதல் அரசுப் பள்ளிகளில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு உயர்கல்வி பயில தமிழ்ப் புதல்வன் மாதாந்திர உதவித் தொகை ரூ.1,000/– வழங்கும் திட்டம் அறிமுகம்.

❖ கல்விசார் ஆராய்ச்சி, தொழில் முனைவோர்களை ஊக்குவித்தல் மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றத்திற்கு உகந்த கல்வி ஆராய்ச்சி சூழலை முன்னெடுப்பதற்காக, ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கான தேவைகள் உள்ள புலங்களில் ஆராய்ச்சியினை மேற்கொண்டு வரும் ஆசிரியர்களுக்கு முதலமைச்சர் ஆராய்ச்சி மானியம் (CMRG) வழங்குதல்.

❖ இளம் மாணவ ஆராய்ச்சியாளர்கள், தங்களுக்கு விருப்பமான படிப்புத் துறைகளில் ஆராய்ச்சித் திட்டங்களைத் தேர்வு செய்து தொடர்வதை ஊக்குவிப்பதற்காக முதலமைச்சர் ஆராய்ச்சி ஊக்கத்தொகை (CMRF) வழங்குதல்.

❖ "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில் சார்ந்த திறன் பாடப்பிரிவுகளினால் இளைஞர்களின் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளது.



❖ 13 மாநிலப் பல்கலைக்கழகங்களில், 6 மாநிலப் பல்கலைக்கழகங்கள் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று தர நிர்ணயக் குழுவின் தரமதிப்பீட்டில் (NAAC) A++ தரத்தினையும், 2 மாநிலப் பல்கலைக்கழகங்கள் A+ தரத்தினையும், 4 மாநிலப் பல்கலைக்கழகங்கள் A தரத்தினையும் பெற்றுள்ளன.

❖ அழகப்பா பல்கலைக்கழகம், மனிதவள அமைச்சகத் துறையினால் வகை–I பல்கலைக்கழகங்களில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

❖ அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை தொழில்துறை 4.0 தரத்திற்கு ஏற்ப திறன்மிகு மையங்களாக மாற்றும் திட்டமானது ரூ.3,014.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிலிருந்து உயர்கல்வியின் தரம் பிரிக்க முடியாத ஒன்றாகும். ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் (TIDCO) இணைந்து அரசு, சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தொழிற்துறை சார்ந்த ஆராய்ச்சிப் பூங்காக்களை நிறுவும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

கல்வியில் தரத்தை உயர்த்துவது, சரியான அங்கீகாரத்தை உள்ளடக்கியது. உயர்கல்வி நிறுவனங்களை தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று குழுவின் (NAAC) அங்கீகாரத்திற்குச் செல்லவும், தேசியக் கல்வி நிறுவனத் தரவரிசையில் (NIRF), Times Higher Education மற்றும் QS தரவரிசையில் பங்கேற்கவும் தேசிய மற்றும் சர்வதேச அளவுக்கு இணையாக மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



## நிதி ஒதுக்கீடு 2024–25

**மானியக் கோரிக்கை எண்.20, உயர்கல்வித்துறை என்ற தலைப்பின் கீழ் மொத்த செலவினத் தொகை ரூ.8,211.78 கோடி ஆகும்.**

| வ. எண் | துறைத் தலைமையின் பெயர் | வரவு செலவு ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | உயர்கல்வித் துறை, தலைமைச் செயலகம் | 8.22 |
| 2. | கல்லூரிக் கல்வி இயக்ககம் | 4,470.50 |
| 3. | தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் | 2,711.65 |
| 4. | பல்கலைக்கழகங்கள் | 892.27 |
| 5. | தமிழ்நாடு ஆவணக் காப்பகம் | 29.80 |
| 6. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் | 0.83 |
| 7. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் | 5.04 |
| 8. | அறிவியல் நகரம் | 1.85 |
| 9. | தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் | 91.62 |
| 10. | தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றம் | 0.0001 |
| | **மொத்தம்** | **8,211.78** |

# 2. தொழில்நுட்பக் கல்வி

## 2.1. முன்னுரை

திறமையான மனிதவளத்தை உருவாக்குதல், உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவதற்கு தொழில்நுட்பக் கல்வி கருவியாக உள்ளது. தொழில்நுட்பக் கல்வியின் முக்கிய நோக்கம், திறன் மற்றும் அறிவைப் பெறுவதன் மூலம் தனிநபரை வேலைவாய்ப்பு மற்றும் வணிகத்திற்கு தயார்ப்படுத்துவதாகும். விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் தற்போதைய சூழ்நிலையில், சமூகம் மற்றும் தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப திறமையான மற்றும் அறிவுள்ள மனிதவளத்தை உருவாக்குவது காலத்தின் தேவையாகும். ஒரு நாட்டின் விரைவான தொழில்மயமாக்கல், தொழில்நுட்பக் கல்வியைப்



பெறுவதை பொறுத்தது. திறன்கள், அணுகுமுறை, அறிவு மற்றும் சிந்தனை முறைகளை தொடர்ந்து மாற்றுவதன் மூலம் நாட்டின் சமூக வளர்ச்சியில் தொழில்நுட்பக் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது.

உலகின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் பொறியியல் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. இது பல்வேறு தொழிற்சாலைகளில் வடிவமைக்க, மேம்படுத்த மற்றும் புதுமைப்படுத்த, தேவையான அறிவு மற்றும் திறன்களை மாணவர்களுக்கு வழங்குகிறது. பட்டயக் கல்வி, தத்துவார்த்த அறிவை உலக பயன்பாடுகளுடன் இணைந்து செயல்பட உதவுகிறது. நடைமுறைப் பயிற்சி அளிப்பதோடு மட்டுமல்லாமல், பட்டயப் படிப்புகள் மாணவர்களுக்கு தொழிற்துறை அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் பெறுவதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது.

இம்மாநிலத்தின் தொழிற்கல்வியை மேம்படுத்த முக்கிய பங்குவகிக்கும் தொழில்நுட்பக் கல்வி

இயக்ககம், 1957–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14–ஆம் நாள் உருவாக்கப்பட்டது. இவ்வியக்ககம், பட்டம் மற்றும் பட்டயப் படிப்புகளை மேம்படுத்தி, கண்காணித்து ஒருங்கிணைப்பு செய்வதோடு, புதிய பாடப்பிரிவுகளை உருவாக்குவதற்கும், பாடத்திட்டங்களை வகுக்கவும், ஆராய்ச்சி மேம்பாட்டிற்கான பணிகள் போன்றவற்றை செய்வதிலும் முக்கியப் பொறுப்பு வகிக்கிறது. மேலும் இவ்வியக்ககம் தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல், வணிகவியல் மற்றும் அலுவலகத்தில் கணினி பயன்பாடு குறித்த சான்றிதழ் படிப்பு ஆகியவற்றிற்கான தேர்வுப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.



2023–24–ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் 506 பொறியியல் கல்லூரிகளும், 492 பாலிடெக்னிக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:–

**தமிழ்நாட்டில் உள்ள தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை (2023–24)**

| வகைப்பாடு | பட்டப்படிப்பு கல்லூரிகள் | பட்டயப் படிப்பு கல்லூரிகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | பொறியியல் கல்லூரிகள் / கட்டடக்கலை கல்லூரிகள் | பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்பப் பயிலகங்கள் | |
| அரசு கல்லூரிகள் | 11 | 54 | – | 65 |
| அரசு உதவி பெறும் கல்லூரிகள் | 3 | 32 | – | 35 |
| சுயநிதி கல்லூரிகள் | 472 | 401 | 1 | 874 |
| இணைவு கல்லூரிகள் | – | 4 | – | 4 |
| அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகள் | 20 | – | – | 20 |
| **மொத்தம்** | **506** | **492** | | **998** |

## 2.2. தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் மற்றும் பாடப்பிரிவுகள்

### 2.2.1. அரசு தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள்

தமிழ்நாட்டில் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டு பாட்டில், 11 அரசினர் பொறியியல் கல்லூரிகளும், 54 அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. தற்சமயம், 54 அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 45,204 பட்டயப்படிப்பு மாணாக்கர்களும், 11 அரசினர் பொறியியல் கல்லூரிகளில் 14,761 இளநிலை பட்டப்படிப்பு மாணாக்கர்களும், 7 அரசினர் பொறியியல் கல்லூரிகளில் 452 முதுநிலை பட்டப்படிப்பு மாணாக்கர்களும் பயின்று வருகின்றனர்.

### 2.2.2. தொழில்நுட்பப் பாடப்பிரிவுகள்

54 அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 41 வகையான பட்டயப்படிப்பு



பாடப்பிரிவுகளும், 11 அரசினர் பொறியியல் கல்லூரிகளில் 11 வகையான இளநிலை பொறியியல் பட்டப்படிப்புகளும், 7 அரசினர் பொறியியல் கல்லூரிகளில் 18 வகை முதுநிலை பொறியியல் பட்டப்படிப்பு பாடப்பிரிவுகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. பயிற்றுவிக்கப்படும் அனைத்து பொறியியல் பாடப்பிரிவுகளும், மாணாக்கர்களுக்கு, பொறியியல் தொடர்பான அடிப்படை அறிவினை வலுப்படுத்துவதுடன், தொழிற்சாலைகளின் தற்போதைய தேவைக்கேற்ப மாணாக்கர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தி, மாணாக்கர்களை வேலைவாய்ப்பு பெற தகுதி உள்ளவர்களாக உருவாக்க உதவுகிறது.

## 2.3. நலத்திட்டங்கள் மற்றும் புதிய முயற்சிகள்

### 2.3.1. கட்டணமில்லா பாடப் புத்தகங்கள் வழங்குதல்

பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணாக்கர்கள் சேர்க்கையை அதிகரிக்கவும்,

அவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவதற்கும் 2007–08–ஆம் கல்வி ஆண்டிலிருந்து முத்தமிழறிஞர் கலைஞர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு பட்டயப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு கட்டணமில்லாமல் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், ஆங்கிலம், பொறியியல் இயற்பியல், பொறியியல் வேதியியல் மற்றும் பொறியியல் கணிதம் ஆகிய பாடங்களுக்கான புத்தகங்கள் கட்டணமில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன. 2022–23–ஆம் கல்வியாண்டில் 12,398 மாணாக்கர்களுக்கு ரூ.42.31 இலட்சம் செலவினத்தில் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 2.3.2. கட்டணமில்லாப் பேருந்து பயணச் சலுகை

மாணாக்கர்கள் எவ்வித நிதிச் சுமையுமின்றி தங்களது பயிலகங்களுக்கு சென்றடைய 2007–08–ஆம் கல்வியாண்டிலிருந்து அரசு பலவகை



தொழில்நுட்பக் கல்லூரிகளில், பட்டயப்படிப்பு பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் கட்டணமில்லாப் பேருந்து பயண அட்டை வழங்கும் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2023–24–ஆம் கல்வியாண்டில் 40,231 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

### 2.3.3. பட்டயப் படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டண விலக்கு

பட்டயப் படிப்பு பயிலும் மாணாக்கர்களில் பெரும்பாலானோர் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினை சேர்ந்தவர்களாவர். இப்பிரிவினை சேர்ந்த மாணாக்கர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, 2008–09–ஆம் கல்வியாண்டிலிருந்து அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு கல்வி கட்டணம் செலுத்துவதிலிருந்து முத்தமிழறிஞர் கலைஞர்

அரசால் விலக்களிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், 2023-24-ஆம் கல்வியாண்டில் 45,204 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

### 2.3.4. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம்

உயர்கல்வியில், ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணாக்கர்களின் மொத்த சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சுயநிதி கல்வி மற்றும் சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் உள்ளடங்கலான கல்வி நிறுவனங்களில் அரசு ஒதுக்கீடு மற்றும் நிர்வாக ஒதுக்கீடு ஆகியவற்றின் கீழ் சேர்க்கை பெற்ற பொறியியல் மற்றும் பட்டயப்படிப்பு படிக்கும் மாணாக்கர்களுக்கு, கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டாய மற்றும் திருப்பி அளிக்க இயலாத கட்டணங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன.



இம்மாணாக்கர்களுக்கு கல்வி உதவிப்படியும் வழங்கப்படுகிறது. 2022-23-ஆம் கல்வியாண்டில் 80,075 பொறியியல் கல்லூரி மாணாக்கர்களும் 46,604 பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணாக்கர்களும் பயனடைந்துள்ளனர்.

### 2.3.5. முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்குக் கல்விக் கட்டணச் சலுகை

முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கும் திட்டமானது, பட்டதாரிகளற்ற குடும்பத்தில் உயர்கல்வியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் முத்தமிழறிஞர் கலைஞர் அரசால் துவங்கப்பட்டது. அவ்வாறு தொழிற்முறைப் படிப்புகளில் ஒற்றைச் சாளர முறையில் சேரும் முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கான கல்விக் கட்டணம் முழுவதையும் மாநில அரசே ஏற்கிறது. சாதி மற்றும் வருமானத்தை பொருட்படுத்தாமல் இந்த உதவித்

தொகையானது மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகிறது. 2023-24-ஆம் கல்வியாண்டில், 1,57,342 முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கு ரூ.379.31 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.6. புலம்பெயர்ந்த இலங்கை தமிழ் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்

தமிழ்நாட்டில் உள்ள புலம்பெயர்ந்த இலங்கை தமிழ் மாணாக்கர்களும் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை மூலம் பி.இ. / பி.டெக். பட்டப்படிப்புகள் மற்றும் எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. / எம்.இ. / எம்.டெக். போன்ற முதுநிலை பட்டப்படிப்புகளில் சேர்ந்து பயில்வதற்கு ஏதுவாக ஒற்றைச் சாளர கலந்தாய்வில் கலந்து கொண்டு கல்லூரிகளில் சேர்க்கை பெற தமிழக அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஒற்றைச் சாளர முறை கலந்தாய்வின் மூலம் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் தகுதியுள்ள இலங்கை தமிழ் புலம்பெயர்ந்த மாணாக்கர்களுக்கும், முதல்



தலைமுறை பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் கல்விக் கட்டணச் சலுகை நீட்டிக்கப்பட்டுள்ளது. 2023-24-ஆம் கல்வியாண்டில் 29 மாணாக்கர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர்.

### 2.3.7. முதுநிலை பட்டப்படிப்பு மாணாக்கர்களுக்கான உதவித்தொகை

அரசு பொறியியல் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு பயிலும் 600 மாணக்கர்களுக்கு, 2017-18-ஆம் ஆண்டு முதல் மாதாந்திர உதவித்தொகையாக ரூ.6,000 வழங்க தமிழக அரசால் நிதி ஒதுக்கப்பட்டது. 2021-22-ஆம் ஆண்டு முதல், பொறியியல் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு நிதியுதவி பெறும் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணாக்கர்களின் எண்ணிக்கை 600-லிருந்து 1,200-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு பொது நுழைவுத் தேர்வு மதிப்பெண் (TANCET) அடிப்படையில், அரசு பொறியியல் கல்லூரிகளில் மட்டும் சேர்க்கை பெறும் முதல் 300 மாணாக்கர்கள்

மற்றும் பொது நுழைவுத் தேர்வில் (TANCET) தேர்ச் பெற்று, அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரி, அண்ணா பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரிகள், அண்ணாமலை பல்கலைக்கழகம், தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NITTTR), மத்திய பெட்ரோல் இராசயன பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பயிலகம் (CIPET) மற்றும் மேற்காணும் அனைத்து பயிலகங்களிலும் உள்ள முதுநிலை சுயநிதி பாடப்பிரிவுகளில் சேர்க்கை பெறும் முதல் 300 மாணாக்கர்கள் இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.6,000/- நிதியுதவி பெற தகுதியுடையவர்கள். இத்திட்டத்திற்காக அரசு ரூ.8.64 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. 2023-24-ஆம் கல்வியாண்டில், 973 மாணாக்கர்களுக்கு ரூ.7.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.



### 2.3.8. தொழிலக உட்பயிற்சி

மாணாக்கர்கள் வகுப்பறைகளில் பயின்ற தத்துவார்த்த அறிவைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக தொழிற்சாலைக்கு சென்று தொழில்நுட்பங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் விதமாக, அரசு பொறியியல் கல்லூரி மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணாக்கர்களுக்கு தொழிற்பயிற்சி அளிப்பதற்காக அரசு தொடர் செலவினமாக ரூ.16.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அரசு பொறியியல் கல்லூரிகளிலிருந்து 2,500 மாணாக்கர்கள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலிருந்து 7,500 மாணாக்கர்கள் என ஒவ்வொரு ஆண்டும் 10,000 மாணாக்கர்களுக்கு தொழில்நுட்பத் திறனை மேம்படுத்த 25 நாட்களுக்கு தொழிலக உட்பயிற்சி அளிப்பதற்கு ஒரு மாணாக்கருக்கு ரூ.16,600/- வீதம் வழங்கப்படுகிறது.

**2.3.9. அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 7.5 விழுக்காடு உள்ஒதுக்கீடு**

அரசு பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்த உறுதியான நடவடிக்கை எடுப்பதற்காக, இளநிலை தொழிற்கல்வி படிப்புகளில் முன்னுரிமை அடிப்படையில் அரசு பள்ளி மாணாக்கர்கள் சேர்க்கை பெறுவதற்காக "தமிழ்நாடு அரசு பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கை சட்டம்–2021" இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் மாணாக்கர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் உள்ளிட்ட அனைத்துக் கட்டணத்தையும் அரசே ஏற்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2022–23–ஆம் கல்வியாண்டில் ரூ.129.08 கோடி 8,719 முதலாமாண்டு மற்றும் 6,278 இரண்டாமாண்டு மாணாக்கர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. 2023–24–ஆம் கல்வியாண்டில், ரூ.185.59 கோடி 9,795 முதலாமாண்டு, 8,375 இரண்டாமாண்டு மற்றும் 6,162 மூன்றாமாண்டு மாணாக்கர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.



**2.3.10. முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற அரசு பள்ளி மாணாக்கர்களுக்கு உதவித் தொகை**

இந்திய தொழில்நுட்பக் கழகம், இந்திய அறிவியல் கழகம் மற்றும் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் போன்ற முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில் அரசுப் பள்ளி மாணாக்கர்களின் சேர்க்கையை ஊக்குவிக்கும் வகையில், முழுச் செலவையும் அரசே ஏற்று அனைத்து ஆண்டுகளுக்கான அனைத்து கட்டணத் தொகையையும் மாணாக்கர்களுக்கு அரசால் வழங்கப்படுகிறது. 2021–22–ஆம் மற்றும் 2022–23–ஆம் கல்வியாண்டுகளில், சென்னை

இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் தலா ஒரு மாணவர் சேர்க்கை பெற்றுள்ளனர்.

### 2.3.11. முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி

பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணாக்கர்கள் இளநிலை பொறியியல் பட்டப்படிப்புகளை மேற்கொள்ள ஊக்குவிக்கவும், தொடர்ந்து பயில்வதற்கும் ஏதுவாகவும் அரசால் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. 2023–24–ஆம் கல்வியாண்டில் 24 மாணாக்கர்களுக்கு நிதி உதவித் தொகையான ரூ.50,000/–, ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.12. தமிழ் வழியில் பட்டயப் படிப்புகளை அறிமுகப்படுத்துதல்

சென்னை, மைய பாலிடெக்னிக் கல்லூரி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், அமைப்பியல் மற்றும்



இயந்திரவியல் துறைகளில் தமிழ் வழியில் பட்டயப் படிப்புகள் 2022–23–ஆம் கல்வியாண்டு முதல் அரசால் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணாக்கர்கள் பாடங்களின் கருத்துகள் மற்றும் பயன்பாடுகளை தமிழில் தெளிவாக புரிந்து கொள்ளமுடியும். மேலும், இது மாணாக்கர்களுக்கு மாநில அரசு வேலைகளை, தமிழ்வழியில் கல்வி பயின்றோருக்கான உள் ஒதுக்கீட்டு பிரிவில் (PSTM) பெற உதவும்.

### 2.3.13. மகளிருக்கான பட்டயப் படிப்புகள் அறிமுகப்படுத்துதல்

மாணவியர்களின் மொத்த சேர்க்கையினை அதிகரிப்பதற்கும், சிறந்த வேலை வாய்ப்புகளை பெறுவதற்காக உயர்கல்வியில் மாணவியர்கள் அதிக அளவில் சேர்வதை ஊக்குவிப்பதற்கும், மகளிருக்காக (1) சென்னை, மைய பாலிடெக்னிக் கல்லூரியில் இயந்திரவியல் (கணினி கொண்டு வடிவமைத்தல்) பாடப்பிரிவு (2) சென்னை, மாநில

வணிகப் பயிலகத்தில் அலுவலக மேலாண்மை மற்றும் கணினி பயன்பாடுகள் பாடப்பிரிவு (3) கோயம்புத்தூர், அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் இதயத் துடிப்பு பதிவி தொழில்நுட்பப் பாடப்பிரிவு (4) மதுரை, தமிழ்நாடு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் இணையவலை வடிவமைப்பு தொழில்நுட்பப் பாடப்பிரிவு (5) நாகர்கோவில், அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் உயிர் மருத்துவ மின்னணுவியல் பாடப்பிரிவு (6) சென்னை, டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் அகவனப்பியல் பாடப்பிரிவுகளும் 2022-23-ஆம் கல்வியாண்டு முதல் துவங்கப்பட்டுள்ளது.

### 2.3.14. தொழில்துறை தேவைகளுக்கு ஏற்ப பாடத்திட்ட சீரமைப்பு

பல்லாண்டுகளாக தொழில்துறைக்குத் தேவையான அதிக எண்ணிக்கையில் தொழில்நுட்பவியலாளர்களைத் தமிழ்நாடு உருவாக்கி



வருகிறது. பெரும் தொழில்மயத்திற்குத் தேவையான, திறன் வாய்ந்த தொழில்நுட்பப் பட்டயதாரிகளை பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் உருவாக்கி, மாநிலத்தின் திறன் உருவாக்கத்திற்கு முக்கிய பங்காற்றுகின்றன.

குறைந்த ஊதியம் மற்றும் அதிக உடல் உழைப்பு சார்ந்த தொழிலாளர்களை உருவாக்குவதற்கு பதிலாக, ஆழமான தொழில்நுட்ப அறிவு மற்றும் அறிவுத்திறன் சார்ந்தவர்களை உருவாக்குவதை தமிழ்நாடு, பொருளாதார நோக்கமாக கொண்டிருக்கிறது. தொழில்நுட்பம் வளர்ந்ததால் தொழில்துறையின் தேவைகளும் மாறிக்கொண்டே வருகிறது. தொழில்துறை - கல்வி நிறுவனங்களை இணைக்கும் திறன் சார்ந்த பட்டயதாரிகளே தற்போதைய தேவை. அடுத்துவரும் தலைமுறையை தொழில்நுட்பத்திறன் வாய்ந்தவர்களாக உருவாக்கவும், தொழில்நுட்பத்தின் பயனை அறுவடைசெய்யவும், புதிய கண்டுபிடிப்புகளை

உருவாக்க ஊக்குவிக்கவும், தொழில்நுட்பக் கல்லூரிகளின் பாடத்திட்டமானது மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு தொழிற்சாலைகள் மற்றும் தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் ஆகியோரிடமிருந்து கருத்துக்களை பெற்று, பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் பாடத்திட்ட மறுசீரமைப்பு தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாடத்திட்ட மறுசீரமைப்பானது, மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனையும் தொழில்முனையும் திறனையும் மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது. இப்புதிய பாடத்திட்டமானது 2023–24–ஆம் கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

### 2.3.15. போட்டித் தேர்வுகளுக்கு தீவிர பயிற்சி

2021–22–ஆம் ஆண்டிலிருந்து 11 அரசு பொறியியற் கல்லூரிகளில் பயிலும் 500 மாணாக்கர்களுக்கு போட்டித் தேர்வுகளான,



CAT / GMAT / GRE / IELTS மற்றும் TOEFL தேர்வுகளுக்கு தீவிர பயிற்சி அளிக்க ரூ.42.12 இலட்சம் தொடர் செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்தீவிர பயிற்சியானது மாணவர்களை போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறச் செய்வதோடு மட்டுமல்லாமல், அம்மாணாக்கர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான நற்பெயர் மிக்க நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறுவதை அதிகப்படுத்துகிறது.

### 2.3.16. தொழில் முனைப்பு மேம்பாடு மையங்கள் நிறுவுதல்

சென்னையிலுள்ள தமிழ்நாடு தொழில் முனைப்பு மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்துடன் (Entrepreneurship Development Innovative Institute (EDII–TN)) இணைந்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழில்முனைப்பு மேம்பாடு மற்றும் புத்தாக்கத் திட்டத்திற்காக (Entrepreneurship Development and Innovation Programmes) 5 பலவகை

தொழில்நுட்பக் கல்லூரிகளில் 5 தொழில்முனைவோர் மேம்பாடு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இம்மையங்கள் மூலம், 5 தொழில்முனைவோர் மேம்பாடு மையங்களின் கீழ் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் அக்டோபர் 2023 முதல் நான் முதல்வன் திட்டத்துடன் இணைக்கப்பட்டு தற்போது அந்தந்த மாவட்ட ஆட்சியர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.

### 2.3.17. முதலமைச்சரின் ஆராய்ச்சி மானியத் திட்டம்

ஆராய்ச்சி அறிஞர்கள், பட்டதாரி மற்றும் முதுகலை மாணவர்களை தற்போதைய சவால்களில் ஆராய்ச்சி செய்ய ஊக்குவிப்பதற்காக, 2023-24-ஆம் கல்வியாண்டிலிருந்து "முதலமைச்சரின் ஆராய்ச்சி மானியத் திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் மாநிலப் பல்கலைக்கழகங்களுக்காக தொடர் மானியமாக ரூ.50.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2023-24-ஆம் ஆண்டில், தொழில்நுட்பப் பிரிவில் 61 திட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அத்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கல்லூரிக் கல்வி பிரிவில், திட்டங்களைத் தேர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 2.3.18. உலக திறன் அகாடெமி மற்றும் நவீன தொழில்நுட்ப உற்பத்தி மையம் அமைத்தல்

மின் உபகரணங்களை நிறுவுதல், தொழிலக கட்டுப்பாடுகள், தொழிலக தன்னியக்கமாக்கல், கட்டட தன்னியக்கமாக்கல் போன்ற உலகத் திறன்களுக்கு ஏற்ப, திறன்களை மாணாக்கர்களுக்கு வழங்கி, மேம்படுத்துவதற்கு ஏதுவாக, சென்னை, கோயம்புத்தூர், தருமபுரி, மயிலாடுதுறை, திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள 6 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், ஸ்னைடர் எலக்ட்ரிக் நிறுவனத்துடன்

இணைந்து ரூ.10.00 கோடி செலவில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் நிதியுதவியுடன் உலக திறன் அகாடெமி மற்றும் நவீன தொழில்நுட்ப உற்பத்தி மையம் அமைக்கப்பட்டு வருகிறது.

### 2.3.19. புதுமைப் பெண் திட்டம்

அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த உயர்கல்வி படிக்கும் மாணவிகளுக்கு, புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் சமூக நலத்துறை மூலம் மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படுகிறது. 2023–24–ஆம் கல்வியாண்டில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளைச் சேர்ந்த 4,039 மாணவிகளும், அரசு பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்த 12,135 மாணவிகளும் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.



### 2.3.20. திறமையான இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் விஞ்ஞானிகளின் பெயரில் கல்வி உதவித்தொகை

தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த பத்து இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (ISRO) விஞ்ஞானிகளுக்கு, அவர்களின் குறிப்பிடத்தக்க சாதனைக்காக தலா ரூ.25.00 லட்சம் ரொக்கத் தொகையை வழங்கி அவர்களை அரசு கௌரவித்துள்ளது.

மாணாக்கர்களுக்கிடையே அறிவியல் கண்டுபிடிப்புகளில் ஆர்வத்தை ஏற்படுத்த, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட 7.5 சதவீத ஒதுக்கீட்டின் கீழ் அனுமதிக்கப்பட்டு, இளங்கலைப் பொறியியல் படிப்பை முடித்து முதுகலை பொறியியல் படிப்பைத் தொடரும் 10 மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் போன்ற அனைத்துக் கட்டணங்களுக்கும் சேர்த்து மொத்தக் கட்டணத்தையும் உதவித்தொகையாக, சாதனை

படைத்த ISRO விஞ்ஞானிகளின் பெயரில் தமிழக அரசு வழங்க தீர்மானித்துள்ளது. இந்த உதவித்தொகைக்காக ரூ.10.00 கோடியில் தொகுப்பு நிதி ஒதுக்கப்படும்.

**2.3.21. தொழிலகங்களின் தேவைகளுக்கேற்ப புதிய தொழிலிடைக் கல்வி பட்டயப் படிப்புகள்**

மாணாக்கர்களின் மொத்த சேர்க்கை விகிதத்தை அதிகரிக்க புதிய சாண்ட்விச் டிப்ளமோ பாடத் திட்டங்கள் அதாவது, (1) மைய பாலிடெக்னிக் கல்லூரியில் ECE (SWC) டிப்ளமோ மற்றும் (2) அரசு பாலிடெக்னிக் கல்லூரி, கோயம்புத்தூர், (3) டெக்ஸ்டைல் டிப்ளமோ (SWC) அரசு பாலிடெக்னிக் கல்லூரி, கரூர், (4) கோயம்புத்தூரில் உள்ள பெண்களுக்கான அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் கணினி அறிவியல் தொழில்நுட்பம் டிப்ளமோ (SWC) மற்றும் (5) விழுப்புரம் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் டிப்ளமோ (SWC) ஆகியவை அந்தந்த



பகுதிகளில் உள்ள தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் உதவியுடன் தொழில்துறைகளின் தேவைகள் அடையாளம் காணப்பட்டு 2023–24–ஆம் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**2.3.22. மாணாக்கர்கள் கல்வி பயிலும் பொழுதே வருமானம் ஈட்டும் பட்டயப் படிப்புகள் அறிமுகம்**

கல்விப் பயிலும்பொழுதே வருமானம் ஈட்டும் பட்டயப் படிப்புகள், அதாவது Diploma in Digital Manufacturing Technologies 2023–24–ஆம் கல்வியாண்டு முதல் ஜோலார்பேட்டை, ஊத்தங்கரை, வனவாசி, கடத்தூர் மற்றும் கெலமங்கலம் ஆகிய 5 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழில்துறையின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், உழைக்கும் மக்கள் தங்கள் தகுதியை ஒரே நேரத்தில் வேலை செய்து கொண்டே மேம்படுத்துவதற்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### 2.3.23. மேம்படுத்தப்பட்ட உற்பத்திக்கான சிறப்பு மையம் அமைத்தல்

மாணவர்களை மேம்பட்ட உற்பத்தி செயல்முறைகளில் மேம்படுத்துவதற்காக தொழில் கூட்டாளர்களுடன் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை (MSME) உடன் இணைந்து அனைத்து அரசு பொறியியல் கல்லூரிகளிலும் மேம்பட்ட உற்பத்திக்கான சிறப்பு மையத்தை (CoE) நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் வேலைவாய்ப்பு, ஆராய்ச்சி, தொழில் நிறுவன ஒத்துழைப்பு, புது கண்டுபிடி கள் மற்றும் புது நிறுவனங்களின் தொடக்கங்கள் ஆகியவற்றை ஊக்குவிக்கப்படும்.

### 2.3.24. தனித்துவ இணைய இணைப்பு வசதி

தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்த 7 அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் 31 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 100 Mbps தனித்துவ



இணைய இணைப்பு 2024–ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட உள்ளது.

### 2.3.25. மாற்றுத்திறனாளி மாணவர்களின் நலனுக்கான புதிய திறன் பயிற்சி மையம்

மைய பாலிடெக்னிக் கல்லூரியில் மாற்றுத்திறனாளி மாணவர்களின் நலனுக்கான புதிய திறன் பயிற்சி மையம் ரூ.50.00 லட்சம் செலவில், அவர்கள் தொழில்நுட்ப வேலைகளில் ஈடுபடும் வகையில் நிறுவப்பட உள்ளது.

### 2.3.26. மின்சார வாகனங்கள் நடமாடும் மையம்

FaMe–TN மற்றும் Smart e–Mobility (SSeM) உடன் இணைந்து கோவையில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் மின்சார நடமாடும் வாகனங்கள் மையம் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 2.3.27. நான் முதல்வன் பாடப்பிரிவுகளுக்கான பாடத்திட்ட மறுசீரமைப்பு

அனைத்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் 2023–24–ஆம் கல்வியாண்டில் இருந்து மாணவர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதோடு, தொழில்துறைகளுக்கு திறமையான மனிதவளத் தேவையை பூர்த்தி செய்வதற்காகவும் நான் முதல்வன் பாடத்திட்டங்களைக் கொண்டு பாடத்திட்டம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இதுவரை, 1,75,739 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

## 2.4. உட்கட்டமைப்பு வசதிகள்

### 2.4.1. திறன்மிகு வகுப்பறைகள் அமைத்தல்

தரமிக்க கல்வியை மாணாக்கர்களுக்கு வழங்குவதற்கு, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய திறன்மிகு வகுப்பறைகள் கூடுதலாக தேவைப்படுவதால், தமிழ்நாட்டிலுள்ள உள்ள 50 அரசு



பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் ரூ.10.00 கோடி செலவில் திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய திறன்மிகு வகுப்பறைகள், புத்தகம் மூலம் பெற்ற அறிவும், கோட்பாடு உள்ளடக்கமும், மாணாக்கர்களின் வாழ்க்கை பயன்பாட்டிற்கும் கற்றலுக்கும் உதவக்கூடும். மேலும், மென்பொருள் மற்றும் தூண்டுதலை ஏற்படுத்தும் உள்ளடக்கங்கள் மூலம் இணைய பாதுகாப்பு (Cyber Security) பயிற்சி, எரிவாயு வெட்டும் செயல்முறை (Gas Cutting Process), ஃபோர்க் லிப்ட் (Forklift) பயிற்சி, லீன் மேனுபாக்சரிங் (Lean Manufacturing), கட்டடப் பாதுகாப்பு, கியர்பாக்ஸ் (Gear Box), பவர் ஜெனரேடர் (Power Generator) போன்றவை திறன்மிகு வகுப்பறைகள் மூலம் வழங்கப்படுகின்றன.

### 2.4.2. கூடுதலாக விடுதி கட்டடங்கள் கட்டுதல்

மாணாக்கர்கள் விடுதிகளில் தங்கி பயிலும் தேவை அதிகரித்திருப்பதை கருத்திற் கொண்டு அவர்களுக்கு தகுந்த சூழலுடன் போதுமான

தங்குமிடம் வழங்கவும், கோயம்புத்தூர், சேலம், காரைக்குடி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள 4 அரசு பொறியியல் கல்லூரிகளில், ரூ.34.10 கோடியில் கூடுதல் விடுதி கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது.

**2.4.3. பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்**

2.4.3.1. தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு பொறியியல் / பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டும் மற்றும் மொத்த மாணாக்கர்கள் சேர்க்கை விகிதத்தை அதிகப்படுத்தவும், கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், பணிமனைகள், கழிவறை வசதிகள் மற்றும் விடுதி வசதிகள் போன்ற பணிகள் ஏற்படுத்துவதற்கு அரசால் பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.176.97 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2.4.3.2. தொழில்திறன் அடிப்படையிலான புதுப்பிக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி அனைத்து அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் சுற்றுச்சூழல் ஆய்வகம், பொருட்களின் இணைய ஆய்வகம், கணினி ஆய்வகம் மற்றும் பிற ஆய்வகங்களை நவீனப்படுத்துவதற்காக பல்வேறு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ரூ.50.00 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

**2.4.4. விளையாட்டு வசதிகள் மேம்படுத்துதல்**

மாணாக்கர் சமூகத்தை ஒருங்கிணைக்கவும், பலப்படுத்தவும், நெறிப்படுத்தவும், மேலும் மாணாக்கர்களை கல்வி சாராத விளையாட்டு செயல்களில் ஊக்குவிக்கவும், மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில்

பங்கேற்கவும், அவர்களின் சாதனைகளை மேம்படுத்தவும், 10 அரசு பொறியியல் கல்லூரிகளிலும் உள்விளையாட்டு அரங்கத்துடன் கூடிய விளையாட்டு வசதிகள் ரூ.80.00 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

### 2.4.5. செய்கலைஞர் ஆய்வகம் (FAB MAKERSPACE LAB) நிறுவுதல்

மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களின் தனித்திறமைகள், கற்றல் உத்திகள், படைப்பாற்றல், ஆக்கப்பூர்வமான சிந்தனைகள் ஆகியவற்றை செயல்முறை அறிவுத்திறனுடன் செயல்படுத்த காரைக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் ஆகிய நான்கு பொறியியல் கல்லூரிகளில் மற்றும் மதுரையில் உள்ள தமிழ்நாடு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழிற்சாலைகளுடன் இணைந்து செய்கலைஞர் ஆய்வகம் (Fab Makerspace Lab) நிறுவப்பட்டுள்ளது.



தமிழ்நாடு புதுமை மற்றும் புத்தாக்க பணி நிறுவனத்துடன் (TANSIM) இணைந்து "Innovation Mentor" என்ற தலைப்பில் அரசு பொறியியல் கல்லூரி மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கான தொழில்துறை பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.

### 2.4.6. இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல்

அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் புதிதாக தொடங்கப்பட்ட 30 பாடப்பிரிவுகளுக்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை ரூ.8.74 கோடியில் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 2.4.7. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை தொழில் துறையின் 4.0 தரநிலைகளுக்கு ஏற்ப திறன்மிகு மையங்களாக தரம் உயர்த்துதல்

2024–25–ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் போது, மாண்புமிகு நிதி மற்றும்

மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் "அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை தொழில்துறை 4.0 தரத்திற்கு ஏற்ப திறன்மிகு மையங்களாக மாற்றும் திட்டமானது ரூ.3014 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்" என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம், தொழில்துறையினர்களுடன் இணைந்து, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை தொழில்துறை 4.0 தரத்திற்கு ஏற்ப திறன்மிகு மையங்களாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு, உட்கட்டமைப்பினை நவீனமயமாக்குதல், தொழில் சம்பந்தப்பட்ட பாடத்திட்ட உள்ளடக்கத்தை உருவாக்குதல், மாணாக்கர்களுக்கான வேலை வாய்ப்புகளை அதிகரிக்க ஆசிரியர் திறனை மேம்படுத்துதல் போன்றவை இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும். மேற்காணும் அறிவிப்பின் அடிப்படையில், இந்த முன்னோடி திட்டத்தை



செயல்படுத்த ரூ.2358.53 கோடிக்கு நிருவாக அனுமதியும் மற்றும் தொழில்துறையினருடன் இணைந்து 44 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை தொழில் துறை 4.0 தரத்திற்கு ஏற்ப திறன்மிகு மையங்களாக மேம்படுத்த ஆயத்த கட்டமைப்புகள் அமைக்கும் பணிகளுக்காக ரூ.283.29 கோடிக்கு நிதி ஒப்பளிப்பும் செய்யப்பட்டுள்ளது.

### 2.5. மின்–ஆளுமை

#### 2.5.1. தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை

2019–20–ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை, தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்பட்டுவருகிறது. கொரோனா பெருந்தொற்று காரணமாக 2020–21–ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் சேர்க்கை தொடர்பான விண்ணப்பப்பதிவு, சான்றிதழ் பதிவேற்றம், சான்றிதழ் சரிபார்ப்பு, பதிவு செய்த மாணவர்களுக்கு ரேண்டம்

எண் (Random Number) வழங்குதல், தரவரிசைப்பட்டியல் வெளியீ , சிறப்பு பிரிவினர்களுக்கான கலந்தாய்வு, பொதுக் கலந்தாய்வு, தொழில்முறைக் கலந்தாய்வு, துணைக் கலந்தாய்வு, SCA காலியிடத்திற்கான SC வகுப்பு கலந்தாய்வு, தற்காலிக ஒதுக்கீடு பட்டியல் வெளியிடுதல் போன்ற அனைத்தும் இணையவழி மூலமாக நடத்தப்பட்டு வருகிறது. 2023–24–ஆம் கல்வியாண்டில், 1,07,262 மாணாக்கர்கள் அரசு ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெற்றுள்ளனர். மேலும் B.Arch. பட்டப்படிப்பிற்கான முதலாம் ஆண்டு சேர்க்கை, B.E. / B.Tech. படிப்பிற்கான இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை மற்றும் பகுதிநேர சேர்க்கை, MBA / MCA பட்டப் படிப்புகளுக்கான முதலாம் ஆண்டு சேர்க்கை, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு / இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை / பகுதி நேர பட்டயப்படிப்பு சேர்க்கை ஆகிய



அனைத்தும் இணையவழி மூலமாக நடத்தப்பட்டு வருகிறது.

### 2.5.2. நிறுவன வள திட்டமிடல் மென் பொருளுடன் (ERP & LMS) ஒருங்கிணைந்த கற்றல் மேலாண்மை அமைப்பை நிறுவுதல்

தமிழ்நாட்டில் உயர்கல்வித் துறையில், அரசின் இலக்குகளை அடைவதற்காக, சமூகத்தின் தேவைக்கு ஏற்ப கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குமுறைகளை வகுத்து, பல்வேறு திட்டங்களை வகுப்பதற்கு ஏதுவாக, நிறுவன வள திட்டமிடுதல், மென்பொருளுடன் (LMS & ERP) ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் மேலாண்மை அமைப்பானது அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் நிறுவப்படவுள்ளது. இது தொடர்பான திட்டத்தினை செயல்படுத்துவதற்கான திட்ட மேலாண்மை ஆலோசகரை நியமித்து வடிவமைப்பு மற்றும் திட்டச் செயல்பாட்டிற்கான வளச் செலவுக்காகவும், தமிழகத்தில் உள்ள நிறுவன

வள திட்டமிடல் தீர்வுடன் ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் மேலாண்மை அமைப்பின் தேர்வு மற்றும் அறிமுகம் போன்றவற்றிற்காகவும், 2021–22–ஆம் ஆண்டில் அரசு ரூ.4.09 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

உயர்கல்வித் துறையில் நிறுவன வள திட்டமிடல் மென்பொருளுடன் ஒருங்கிணைந்த கற்றல் மேலாண்மை அமைப்பைச் (LMS & ERP) செயல்படுத்த ரூ.172.50 கோடி செலவில் அரசு பொறியியல், பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகள், கல்லூரிக் கல்வி இயக்குநரகம் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் ஆகியவற்றில் மின்ஆளுமை மாற்றத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு கல்லூரிகளிலும் உள்ள கணினி உபகரணங்களின் தேவைகளை, மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ள குழு இறுதி செய்யும். அதனடிப்படையில் படிப்படியாக அனைத்துக்



கல்லூரிகளுக்கும் கணினி உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, நிறுவப்படும். நிருவன வள திட்டமிடல் மென்பொருள் மற்றும் மேகக் கணினி (Cloud Hosting) தமிழ்நாடு மின் ஆளுமை நிறுவனத்தால் (TNeGA) நிறுவப்படும்.

## 3. கல்லூரிக் கல்வி

3.1. கல்லூரிக் கல்வியைத் தனித்துவமாக நிர்வகிக்கும் நோக்கத்துடன், முந்தைய பொதுக் கல்வி இயக்ககத்தை, பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம் என்று 1965–ஆம் ஆண்டில் இரண்டாகப் பிரித்துக் கல்லூரிக் கல்வி இயக்ககம் உருவாக்கப்பட்டது. பல்வேறு துறைகளில் நவீன கலை, அறிவியல் தொழில்நுட்பப் பாடப் பிரிவுகளை அறிமுகப்படுத்தி உயர்கல்வித் துறையில் தமிழ்நாட்டை மிகவும் முன்னேறிய மாநிலமாக மாற்றி, முதல் நிலைப்படுத்தும் நோக்கி , தற்போதைய அரசு ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. தற்போது 949 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 11 உடற்கல்விக் கல்லூரிகள், 4 கீழ்த்திசைக் கல்லூரிகள், 2 சமூகப்பணிப் பள்ளிகள் மற்றும் 660 கல்வியியல் கல்லூரிகள் என மொத்தம்



1,626 கல்லூரிகள், கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

### 3.2. கட்டணமில்லாக் கல்வி

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் கல்விக் கட்டணத்தை 2007–08–ஆம் கல்வியாண்டு முதல் முத்தமிழறிஞர் கலைஞர் அரசால் தள்ளுபடி செய்து அரசு கட்டணமில்லாக் கல்வியை வழங்குகிறது. மேலும் 2010–11–ஆம் கல்வியாண்டு முதல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலைப் பட்டப்படிப்புப் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் கல்விக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள ஏழை மாணவர்களின் பெற்றோரின் நிதிச்சுமை பெருமளவில் குறைந்துள்ளது.

2023-24-ஆம் கல்வியாண்டில் 5,30,564 மாணாக்கர்கள் கட்டணமில்லாக் கல்வித் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

**3.3. கல்லூரி மாணாக்கர்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்துப் பயணச்சலுகை வழங்குதல்**

அனைத்து அரசு கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கும் கட்டணமில்லாப் பேருந்து அட்டை வழங்கும் திட்டம் 2007-08-ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. கல்லூரியில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் மாணாக்கர்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டை வழங்கப்படுகிறது. 2023-24-ஆம் கல்வியாண்டில் 4,60,558 மாணாக்கர்கள் கட்டணமில்லாப் பயணச்சலுகைத் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.



**3.4. மாணாக்கர் சேர்க்கைக்கான விண்ணப்பத்தினை இணையவழியில் பதிவு செய்தல்**

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கைபெற ஒவ்வொரு கல்லூரிக்கும் தனித்தனியே விண்ணப்பிக்கும் முறை மாற்றியமைக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கைபெற இணையதளம் மூலம் விண்ணப்பம் பதிவுசெய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு, மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டு வருகிறது. இதனால் விண்ணப்பதாரர்களுக்கு இடர்ப்பாடுகள் ஏதுமின்றித் தங்களது கைப்பேசி மூலமே விண்ணப்பங்களைப் பதிவு செய்துகொள்ளும் வாய்ப்பு விளைவித்துள்ளது. 2023-24-ஆம் கல்வியாண்டில் இணையவழியாக 2,78,897 விண்ணப்பங்கள் பதிவுசெய்யப்பட்டு, மாணாக்கர் சேர்க்கை நடத்தப்பட்டது.

2024–25–ஆம் கல்வியாண்டுக்கான மாணாக்கர்கள் சேர்க்கைக்காக இணையவழியாக மொத்தம் 2,11,012 மாணாக்கர்கள் பதிவு செய்துள்ளனர்.

### 3.5. பாரதி இளம் கவிஞர் விருது

இந்த மாநிலத்தின் மகத்தான மாமனிதர்களைப் போற்றுவதில் இவ்வரசு உறுதியாக உள்ளது. அதன்படி, மகாகவி பாரதியின் நூற்றாண்டு விழாவை நினைவு கூறும் வகையில் 2021–ஆம் ஆண்டு முதல் கல்லூரி மாணாக்கர்களுக்கு மாநில அளவிலான கவிதைப் போட்டியை நடத்தி, ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் "பாரதி இளம் கவிஞர்" என்ற விருதுடன் தலா ரூ.1.00 இலட்சம் பரிசுத் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு 2022–23–ஆம் கல்வியாண்டு முதல் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது.



### 3.6. வேலைவாய்ப்பு முகாம்

கல்லூரிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்கள் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படுகின்றன. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் தங்கள் படிப்பு நிறைவுற்றதும், வேலைவாய்ப்புப் பெறச் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த இலக்கை அடையக் கல்லூரிகளிலுள்ள வேலைவாய்ப்பு மையங்கள் புத்துயிரூட்டப்பட்டு ஆர்வமுள்ள கல்லூரி ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு மையப் பொறுப்பாளர்களாக்கப்பட்டுள்ளனர்.

### 3.7. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணாக்கர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்

அரசு கல்லூரிகளில், குறிப்பாக கிராமப் புறங்களைச் சார்ந்த ஆதிதிராவிடர் / பழங்குடியினர்

மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணாக்கர்களுக்கு, ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் பல்கலைக்கழகத் தேர்வுகளை எதிர்கொள்வது கடினமாக உள்ளது. இந்தப் பாடங்களை அவர்கள் முழுமையாகப் புரிந்துகொண்டு பயில வேண்டும் என்ற நோக்கில், வகுப்பு நேரங்கள் முடிந்தவுடனும், வார இறுதி நாட்களிலும் சிறப்பு வகுப்புகள் மூலம், மாணாக்கர்களுக்குக் கூடுதலாகச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இச்சிறப்பு வகுப்புகள் மூலம் பயிற்சி பெறும் மாணாக்கர்கள் பிற மாணாக்கர்களுடன் போட்டியிட முடியும் என்ற தன்னம்பிக்கையையும் திறனையும் பெறுவர். மேலும், பல்கலைக்கழகத் தேர்வுகளில், அதிக மதிப்பெண்கள் பெறவும், இப்பயிற்சி வகுப்புகள் உதவுகின்றன. 2023-24-ஆம் ஆண்டில், 20 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ.10,000/- வீதம் ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2023-24-ஆம் கல்வியாண்டில் 7,623 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

### 3.8. முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித்தொகைத் திட்டம்

முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித்தொகைத் (CMRF) திட்டத்தின் நோக்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முழுநேர ஆராய்ச்சிப் படிப்புப் பயிலும் 120 மாணாக்கர்களுக்கு ஆராய்ச்சி உதவித் தொகை வழங்குவதாகும்.

கலைப் பாடப்பிரிவில் தகுதியான 60 மாணாக்கர்களுக்கும் மற்றும் அறிவியல் பாடப்பிரிவில் தகுதியான 60 மாணாக்கர்களுக்கும் மாதாந்திர உதவித்தொகையாக ரூ.25,000/-மும் கலைப் பாடப்பிரிவு மாணாக்கர்களுக்கு எதிர்பாராச் செலவுக்கான மானியமாக ரூ.10,000/-மும் அறிவியல் பாடப்பிரிவு மாணாக்கர்களுக்கு ரூ.12,000/-மும் அதிகபட்சமாக 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

இத்திட்டத்திற்காக, 2023–24–ஆம் நிதியாண்டில் ரூ.1.60 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 3.9. புதுமைப்பெண் திட்டம்

அரசு பள்ளிகளில் பயிலும் ஏழை எளிய மாணவிகளின் உயர்கல்வி கனவினை நனவாக்குதல், இடைநிற்றலின்றி அவர்கள் தொடர்ந்து கல்வி பயில ஊக்கப்படுத்துதல் மற்றும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கை எண்ணிக்கையை உயர்த்துதல் ஆகிய உன்னத நோக்கங்களை கருத்தில் கொண்டு அரசு பள்ளிகளில் 6 முதல் 12–ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்விக்குச் செல்லும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/– இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. 2023–24–ஆம் கல்வியாண்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயின்று வரும் 2,71,710 மாணவிகள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டம் தற்போது



உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் மாணவியருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### 3.10. நான் முதல்வன்

இளைஞர்களுக்கு தொழில் சார்ந்த திறன்களை அவர்கள் படிக்கும் போது வழங்கிடும் உன்னத திட்டமே நான் முதல்வன் திட்டம் ஆகும். மாணவர்கள் தங்களின் சொந்த ஆர்வங்களையும் திறன்களையும் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து அவர்களின் தொழில் வாழ்க்கைக்கு வலுவான அடித்தளம் அமைத்து தருவதே இத்திட்டத்தின் சிறப்பு அம்சம் ஆகும். இத்திட்டத்தில் கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் உள்ள கல்லூரிகளில் பயிலும் 8,67,947 மாணாக்கர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டதில் 63,665 மாணாக்கர்கள் கலந்து கொண்டு 15,753 மாணாக்கர்கள் முகாமிலேயே வேலைவாய்ப்பு கடிதம் பெற்று பயனடைந்துள்ளனர்

### 3.11. அரசு கல்லூரிகளில் காலியாக உள்ள 4,000 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புதல்

தரமான உயர்கல்வியை வழங்குவது, உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கியது மட்டுமல்லாமல், தகுதி வாய்ந்த ஆசிரியர்களையும் சார்ந்தது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அனைத்துத் தரப்பினருடனும் நடைபெற்ற விரிவான கலந்துரையாடலுக்குப் பிறகு, 2019–20–ஆம் ஆண்டு வரை உள்ள காலிப்பணியிடங்களின் மதிப்பீட்டைக் கருத்தில் கொண்டு, அரசு கல்லூரிகளில் 4,000 உதவிப் பேராசிரியர் பணியிடங்களைப் போட்டி தேர்வு மூலம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண்.2, நாள் 14.03.2024–இன்படி எழுத்துத் தேர்வு ஆகஸ்டு மாதம் 2024–இல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



### 3.12. பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டு மாணாக்கர்கள் சேர்க்கை அதிகரித்துள்ளதால், ஆய்வகங்கள், வகுப்பறைகள், கழிவறைகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியமாகிறது. இதன் பொருட்டுப் பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2023–24–ஆம் நிதியாண்டில் 34 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குத் தேவையான ஆய்வகங்கள், வகுப்பறைகள், கழிப்பறைகள் மற்றும் இதர வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள ரூ.100.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுக் கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2024–25–ஆம் ஆண்டில் மேலும், ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் அடுத்த கட்டமாக பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

### 3.13. புதிய கல்லூரிகளுக்கான கட்டடம் கட்டுதல்

2017–18–ஆம் கல்வியாண்டு முதல் 2020–21–ஆம் கல்வியாண்டு வரை தொடங்கப்பட்ட 14 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் பல ஆண்டுகளாக தற்காலிக கட்டடத்தில் இயங்கி வந்தன. அரசு துரித நடவடிக்கை எடுத்து நிலங்கள் தேர்வு செய்து 13 கல்லூரிகளுக்கு நிரந்தரக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.159.60 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது, இதில் மூன்று கல்லூரிகளின் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு புதிய கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 10 கல்லூரிகளுக்கு கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், ஒரு கல்லூரிக்கு நிலம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.



மேலும், 2022–23 கல்வியாண்டில் 21 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. இதில் கீழ்க்கண்ட 4 கல்லூரிகளுக்கு ரூ.49.84 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு புதிய கட்டடத்தில் இயங்கி வருகின்றன:–

| | | | |
|---|---|---|---|
| 1. | திருப்பூர் மாவட்டம் | – | தாராபுரம் |
| 2. | திண்டுக்கல் மாவட்டம் | – | ஒட்டன்சத்திரம் |
| 3. | ஈரோடு மாவட்டம் | – | தாளவாடி |
| 4. | விருதுநகர் மாவட்டம் | – | திருச்சுழி |

இத்துடன் கீழ்க்காணும் 13 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு, கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்நிலங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.182.93 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு கட்டடம் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன :–

1. கள்ளக்குறிச்சி மாவட்டம் – திருக்கோவிலூர்

2. திருநெல்வேலி மாவட்டம் – மானூர்
3. புதுக்கோட்டை மாவட்டம் – ஆலங்குடி
4. வேலூர் மாவட்டம் – சேர்காடு
5. திருச்சி மாவட்டம் – மணப்பாறை
6. விழுப்புரம் மாவட்டம் – செஞ்சி
7. கிருஷ்ணகிரி மாவட்டம் – தளி
8. புதுக்கோட்டை மாவட்டம் – திருமயம்
9. தஞ்சாவூர் மாவட்டம் – திருக்காட்டுப்பள்ளி
10. திண்டுக்கல் மாவட்டம் – ரெட்டியார்சத்திரம்
11. கடலூர் மாவட்டம் – வடலூர்
12. காஞ்சீபுரம் மாவட்டம் – ஸ்ரீபெரும்புதூர்
13. திருப்பத்தூர் மாவட்டம் – நாட்றாம்பள்ளி

இவை தவிர, கீழ்க்காணும் 4 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு நிலங்கள் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது

1. திருவாரூர் மாவட்டம் – கூத்தாநல்லூர்
2. தர்மபுரி மாவட்டம் – ஏரியூர்
3. கரூர் மாவட்டம் – அரவக்குறிச்சி
4. ஈரோடு மாவட்டம் – அந்தியூர்



### 3.14. தளவாட வசதிகள் ஏற்படுத்துதல்

25 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் (அரசு கல்லூரிகளாக மாற்றப்பட்ட 14 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் உட்பட) பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி மாணவர்களுக்கான 2,469 எண்ணிக்கையிலான இருக்கைகளுடன் கூடிய மேசைகள், 371 எண்ணிக்கையிலான ஆசிரியர் மேசைகள் மற்றும் 125 எண்ணிக்கையிலான செராமிக் பலகைகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்வதற்கு அரசால் ரூ.3.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட தளவாட இனங்கள், சார்ந்த கல்லூரிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு மாணாக்கர் பயன்பாட்டில் உள்ளன.

மேலும், கூடுதலாக 28 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு வகுப்பறைகளுக்குத் தேவையான 6,690 எண்ணிக்கையிலான மாணாக்கர்கள் அமரும் இருக்கையுடன் கூடிய

மேசைகள், 446 எண்ணிக்கையிலான ஆசிரியர் மேசைகள், 446 எண்ணிக்கையிலான செராமிக் பலகைகள் ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்கு அரசால் ரூ.10.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. மேற்காணும் பொருட்களைக் கல்லூரிகளுக்கு விநியோகம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுதவிர, 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குத் தேவையான ஆய்வக உபகரணங்களைக் கொள்முதல் செய்ய ரூ.5.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆய்வக உபகரணங்கள் அனைத்தும் கொள்முதல் செய்து சார்ந்த கல்லூரிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு மாணாக்கர்களின் பயன்பாட்டில் உள்ளன.



**3.15. மாணாக்கர் சேர்க்கை குறைவாக உள்ள பாடப்பிரிவுகளை நீக்கம் செய்து, மாற்றாகப் புதிய பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்துதல்**

சில குறிப்பிட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள சில பாடப்பிரிவுகளில் கடந்த சில ஆண்டுகளாகக் குறைவான எண்ணிக்கையில் மாணாக்கர் சேர்க்கை நடைபெறுவதாகக் கண்டறியப்பட்டது. எனவே, மாணாக்கர் சேர்க்கை குறைவாக உள்ள 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள பாடப்பிரிவுகளை நீக்கம் செய்ய முடிவெடுக்கப்பட்டு, அப்பாடப்பிரிவுகளுக்கு மாற்றாக அப்பகுதி மாணாக்கர்களின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு 2023–24–ஆம் ஆண்டு முதல் தமிழ், தாவரவியல், விலங்கியல், கணினி அறிவியல், உயிர்த் தொழில்நுட்பவியல், வணிக நிர்வாகவியல், பொருளியல் (தமிழ் வழி) முதலான புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## 3.16. முதுகலை வணிக மேலாண்மை (எம்.பி.ஏ.) மற்றும் முதுநிலை கணினிப் பயன்பாட்டியல் (எம்.சி.ஏ.) பாடப்பிரிவுகளை அறிமுகம் செய்தல்

முதுகலை வணிக மேலாண்மை (MBA) மற்றும் முதுநிலைக் கணினிப் பயன்பாட்டியல் (MCA) போன்ற தொழில்முறைப் படிப்புகள் பெரும்பாலான அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் நடத்தப்படுகின்றன. குறைந்த செலவில் எம்.பி.ஏ., மற்றும் எம்.சி.ஏ படிக்க விரும்பும் ஏழை, எளிய மாணாக்கர்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதற்காக 5 அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் முதுகலை வணிக மேலாண்மை (MBA) படிப்பும், 5 அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் முதுநிலைக் கணினி பயன்பாட்டியல் (MCA) படிப்பும் 2023–24 கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணாக்கர்களுக்குப் பரவலான வாய்ப்பு கிடைத்துள்ளது.



## 3.17. இந்திய தேதிய இராணுவக் கல்லூரி (RIMC) உதவித்தொகை

டேராடூனில் உள்ள ராஷ்டிரிய இந்திய ராணுவக் கல்லூரியில் படிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணாக்கர்களுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது.

2016–ஆம் ஆண்டிலிருந்து இந்த உதவித்தொகை ஆண்டுக்கு ரூ.12,000/–லிருந்து ரூ.40,000/–ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

பயனாளிகள் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | வருடம் | சாதனைகள் | |
|---|---|---|---|
| | | பயனாளிகள் | நிதி ஒப்பளிப்பு (ரூ. லட்சத்தில்) |
| 1 | 2021–22 | 6 | 2.4 |
| 2 | 2022–23 | 4 | 1.6 |
| 3 | 2023–24 | 7 | 2.8 |
| **மொத்தம்** | | **17** | **6.8** |

## 3.18. தமிழ்ப் புதல்வன் திட்டம்

உயர்கல்வியில் மாணவிகளின் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட புதுமைப் பெண் திட்டம் மகளிர் கல்வியில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுபோலவே, அரசு பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்விக்குச் செல்ல மாணவர்களை ஊக்கப்படுத்திட தமிழ்ப்புதல்வன் திட்டம் 2024–25 முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் அரசு பள்ளி மாணவர்களின் உயர்கல்விச் சேர்க்கை விகிதம் குறிப்பிடத்தக்க அளவு உயரும். இத்திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கப்படும். உயரிய நோக்கம் கொண்ட இத்திட்டத்தை நிறைவேற்றிட 2024–2025–ஆம் நிதியாண்டில் 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.



## 3.19. தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்று) சட்டம் மற்றும் விதிகள், 1976–இல் திருத்தங்கள் மேற்கொள்ளுதல்

தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்று) சட்டம் மற்றும் விதிகள் 1976–ஆனது 1976 ஏப்ரல் 17 அன்று இயற்றப்பட்டது. அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் அரசு உதவி பெறாத தனியார் கல்லூரிகள் இச்சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்டவையாகும். இச்சட்டம் மற்றும் அதன்கீழ்க் கொண்டுவரப்பட்ட விதிகளில் சில பிரிவுகள் வழக்கொழிந்தவையாகவும், சில பிரிவுகள் திருத்தம் செய்யப்பட வேண்டியவையாகவும் உள்ளன. எனவே மேற்குறித்த சட்டம் மற்றும் விதிகளில் 2024–25–ஆம் ஆண்டில் தேவைப்படும் திருத்தங்களைக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளும்போது அரசு உதவி பெறும் மற்றும் தனியார் கல்லூரிகளை முறையாக நிர்வகிப்பதற்கும்

அங்கு பயிலும் மாணாக்கர்கள் மற்றும் பணிபுரியும் பணியாளர்களுக்குப் பயன்தரத்தக்கதாக அமையும்.

### 3.20. தமிழ்வழியில் பயிலும் மாணாக்கர்களுக்கு உதவித்தொகை

1971–72–ஆம் ஆண்டில், தமிழ் வழியில் சேரும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது. ஆண்டுக்கு ரூ.400/– வீதம் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை 2018–19–ஆம் கல்வியாண்டு முதல் ரூ.900/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2024–25–ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக அரசு ரூ.4.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 3.21. கற்றல் மேலாண்மை அமைப்பு மற்றும் நிறுவன வளம் திட்டமிடல் ஒருங்கிணைந்த மென்பொருள் செயல்படுத்தல்

நவீன கல்வியின் அனைத்துக் கிளைகளிலும் மாணவர்களுக்குச் சிறந்த பயிற்சியையும்,



தேர்ச்சியையும் ஏற்படுத்துவதற்காகக் கற்றல் மேலாண்மை அமைப்பும் நிறுவன வளத் திட்டமிடலும் ஒருங்கிணைந்த மென்பொருள் அமைப்பும் செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்து அரசு பொறியியல் / பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் / கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக 25,027 கணினிகள், தடையில்லா மின்வழங்கி (UPS), அச்சுப்பொறி, ஒளிவருடி (Scanner), உள்ளக இணைய வசதி (LAN) மற்றும் கணினி மேசை நாற்காலிகள் உள்ளிட்ட தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கு ரூ.172.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 4. பல்கலைக்கழகங்கள்

உயர்கல்வித்துறை ஆளுகையின் கீழ் பின்வரும் பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன :-

1. சென்னைப் பல்கலைக்கழகம்
2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
3. அண்ணா பல்கலைக்கழகம்
4. பாரதியார் பல்கலைக்கழகம்
5. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
6. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
7. அழகப்பா பல்கலைக்கழகம்
8. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
9. பெரியார் பல்கலைக்கழகம்
10. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
11. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
12. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
13. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்



## 4.1. சென்னைப் பல்கலைக்கழகம்

4.1.1. சென்னைப் பல்கலைக்கழகம் 1857–இல் நிறுவப்பட்டது. சென்னை மாகாணத்திற்குட்பட்ட கல்லூரிகளை இணைக்கும் அதிகாரமிக்க பல்கலைக்கழகமாக இருந்தது. தற்போது, இப்பல்கலைக்கழகம் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களை வரம்பெல்லையாகக் கொண்டுள்ளது.

4.1.2. இப்பல்கலைக்கழகத்தில் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியை உள்ளடக்கிய 72 துறைகளும், 22 ஆராய்ச்சி மையங்களும் மற்றும் 138 இணைப்புக் கல்லூரிகளும் உள்ளன. தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று குழுவில் (National Assessment and Accreditation Council – NAAC) 3.59 மதிப்பெண்களைப் பெற்று 'ஏ++' தரத்தைப் பெற்றுள்ள இப்பல்கலைக்கழகத்தை, பல்கலைக்கழக மானியக்குழு (UGC) 'சிறந்து விளங்கும் திறன்

கொண்ட பல்கலைக்கழகம்' என்று அங்கீகரித்திருக்கிறது. இப்பல்கலைக்கழகம் இணைப்புக் கல்லூரிகளில் தன்னாட்சி முறையினை முதன்முதலில் அறிமுகப்படுத்திய பெருமையை உடையது. 23 தன்னாட்சி கல்லூரிகள் இப்போது சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றைப் பல்கலைக்கழக மானியக்குழு "சிறந்து விளங்கும் திறன் கொண்ட கல்லூரி" என்று அடையாளம் கண்டுள்ளது. தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு 2023 (National Institutional Ranking Framework 2023 – NIRF) இல் நாட்டின் சிறந்த பல்கலைக்கழகங்களில் இப்பல்கலைக்கழகம் 50–ஆவது இடத்தில் உள்ளது.

4.1.3. உயர்கல்வியை அனைவருக்கும் வழங்குவதற்காக இப்பல்கலைக்கழகம் 1981–இல் தொலைதூரக் கல்வி நிறுவனத்தை (Institute of Distance Education – IDE) உருவாக்கியது. இது தற்போது 17 இளங்கலை படிப்புகள், 21 முதுகலை படிப்புகள்,



19 பட்டயம் / முதுகலை பட்டயப் படிப்புகள் மற்றும் 17 சான்றிதழ் படிப்புகளை வழங்குகிறது. இந்த அனைத்துப் படிப்புகளையும் பல்கலைக்கழக மானியக்குழுவின் தொலைதூர கல்வி குழுமம் [Distance Education Bureau–DEB] அங்கீகரித்துள்ளது.

4.1.4. பல்கலைக்கழக மானியக்குழுவின் இன்ஃப்லிப்நெட்டின் (INFLIBNET) மின்னணு தகவல் வைப்பான ஷோத்கங்காவில் (Shodhganga) முனைவர்பட்ட ஆய்வேடுகளைப் பதிவேற்றுவதில் 720 பல்கலைக்கழகங்களில் சென்னைப் பல்கலைக்கழகம் இரண்டாவது இடத்தில் உள்ளது. இதுவரை 14,759 ஆய்வேடுகளைப் பதிவேற்றியுள்ளது.

4.1.5. ஸ்கோபஸால் பட்டியலிடப்பட்ட மதிப்பாய்வு செய்யப்பட்ட இதழ்களில் சென்னைப் பல்கலைக்கழகம், 3,063 (2022 ஜூலை முதல் ஜூன் 2023 வரை) வெளியீடுகளை 27 எச்–இன்டெக்ஸ்களுடன் வெளியிட்டுள்ளது.

4.1.6. QS உலகப் பல்கலைக்கழக தரவரிசை 2024–இல், சென்னைப் பல்கலைக்கழகம் உலகளவில் உள்ள பல்கலைக்கழகங்களில் 526–ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

4.1.7. மாநிலத்திலுள்ள இளைஞர்களின் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் [NMS] சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் அதன் இணைப்புக் கல்லூரிகளையும் சேர்த்துள்ளது.

4.1.8. நான் முதல்வன் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் 2023, ஜூன் 10 அன்று சென்னை மாவட்டத்திற்கான மாநில அளவிலான வேலைவாய்ப்பு முகாம் திட்டத்தை நடத்தியது. இதன்மூலம் 200 மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றனர்.



4.1.9. சென்னைப் பல்கலைக்கழகத்தின் இணைப்புப் பெற்ற கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் இளங்கலை மற்றும் ஒருங்கிணைந்த ஐந்தாண்டுப் பட்டப்படிப்பினைப் பயிலும் மாணவர்களுக்கென "சமூக நீதி" மற்றும் இளங்கலை பயிலும் மாணவர்களுக்கு "திருக்குறள் காட்டும் தொழில்நெறி" ஆகிய புதிய தாள்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

4.1.10. மெல்போர்ன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, சென்னைப் பல்கலைக்கழகத்தில் புதிய "மூன்றாண்டு கூட்டு இளங்கலை அறிவியல் பாடப்பிரிவை" தொடங்கி, அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றி அறிமுகப்படுத்தியுள்ளார். இது உலக அளவில் நமது மாநில மாணவர்களுக்கு வாய்ப்புகளை விரிவுபடுத்தும்.

4.1.11. பல்கலைக்கழகத்தின் மெரினா வளாகத்தில் புதிய விடுதி கட்டுவதற்கு ரூ.28.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

4.1.12. புகழ்பெற்ற மற்றும் பாரம்பரியமிக்கச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழா அரங்கத்தை புதுப்பிப்பதற்கு ரூ.26.32 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**4.2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

4.2.1. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 1965–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம், கற்பித்தலில், புதுமையான ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நடவடிக்கைகளில் அதன் அளப்பரிய பங்களிப்பின் மூலம் தென் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குக் காரணமாகத் திகழ்கிறது. மதுரை, தேனி, விருதுநகர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 117 இணைப்புக் கல்லூரிகள், 5 மாலை நேரக் கல்லூரிகள் மற்றும் 16 அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் உயர்கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி வருகின்றன.

4.2.2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மார்ச் 2021–இல் 4–ஆவது சுழற்சியில் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று குழுவால் ஏ++ (மதிப்பெண் 3.54) தகுதியினைப் பெற்றது. தற்போது, இப்பல்கலைக்கழகம் இந்தியப்

பல்கலைக்கழகங்களில் வகை–I என்ற நிலையில் உள்ளது. கியூஎஸ் உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை ஆசியா – 2024–இல், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 261–270 தரவரிசையில் உள்ளது.

### 4.2.3. ஆராய்ச்சி திட்ட மானியங்கள்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இரண்டு கட்டங்களாக பல்கலைக்கழக அறிவியல் தொழில்நுட்பவியல் துறை – ஆராய்ச்சி மற்றும் அறிவியல் சிறப்பை மேம்படுத்துதல் போன்ற சிறப்பு ஆராய்ச்சித் திட்டங்கள், அறிவியல் தொழில்நுட்பவியல் துறை – பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான நிதி பல்கலைக்கழக மானியக்குழு – சிறப்பு உதவித் திட்டம் என புலங்களுக்கு தொடர்ந்து திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டங்களைத் தவிர,



இந்தப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் ரூ.11.44 கோடி மதிப்பிலான தனிப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்களைப் பல்வேறு அரசு நிதியளிப்பு நிறுவனங்களிடமிருந்து பெற்றுள்ளனர். இந்தத் திட்டங்களின் மூலம், சுமார் 2,419 மாணவர்கள் முனைவர் பட்டப் படிப்புகளுக்குச் சேர்ந்துள்ளனர். ஐந்து காப்புரிமைக் கண்டுபிடிப்புகள் இந்தப் பல்கலைக்கழகத்தின் அறிவுசார் சொத்துரிமைகள் மையத்தால் அடையாளம் காணப்பட்டு, அவற்றில் இரண்டு, நடப்பு கல்வியாண்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சுமார் 461 ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

### 4.2.4. பாடத் திட்டங்கள்

2023–24 கல்வியாண்டில், சைபர் பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு சிறப்புடன் கூடிய கணினி அறிவியல் படிப்புகள், தொழில்முனைவோர் சிறப்புடன் வணிக நிர்வாகத்தில் முதுகலை, தரவு

அறிவியல், செயற்கை நுண்ணறிவு மற்றும் சைபர் பாதுகாப்பு ஆகியவற்றில் நிபுணத்துவத்துடன் கணினி அறிவியலில் இளங்கலை படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தத் துறைகளில் உலகளாவிய கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மாணவர் சமூகத்தை மேம்படுத்துவதற்கு திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது, பல்கலைக்கழகத்தில் 2,398 மாணாக்கர்கள் பயின்றுவருகின்றனர். புதிய பாடப்பிரிவுகளின் அறிமுகத்தால் ஒட்டுமொத்த மாணவர் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. செயலில் உள்ள ஆய்வு வலைகள் – இளம் ஆர்வமுள்ள மனங்களுக்கான கற்றல் தளத்தில் உள்ள படிப்புகள் மற்றும் 16 திறந்த ஆன்லைன் படிப்புகள் (MOOCS courses) தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.



### 4.2.5. நான் முதல்வன் திட்டம்

இப்பல்கலைக்கழகம், நான் முதல்வன் திட்டத்தின் கீழ் இளங்கலை படிப்புகளுக்கு மொழி கற்றல் மற்றும் திறன் மேம்பாட்டுப் படிப்புகளை அறிமுகப்படுத்தியது. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 2023–ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் நான்கு கட்டங்களாகப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பாடங்களை ஆசிரியர்கள் கையாளுவதற்கு பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டத்தை நடத்தியது. இதில் 660 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### 4.2.6. தொழில் முனைவோர் மேம்பாடு & புத்தாக்க நிறுவனம் மையம்

இப்பல்கலைக்கழகத்தின் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம், 10 புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தொழில்முனைவோர் தலைவர்கள் பயிலரங்கம்,

தொழில்முனைவு குறித்த ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம், வடிவமைப்பு சிந்தனைப் பட்டறை, பிரிண்டிங் கிளஸ்டர்களுக்கான கிளஸ்டர் மேம்பாட்டுத் திட்டம், பெண்கள் கைத்தறிக் குழுமம், தமிழ்நாடு மாணவர் கண்டுபிடிப்பாளர்கள் முகாம், மாணவர்களுக்கான சிந்தனை முகாம் ஆகியவற்றை ஏற்பாடு செய்துள்ளது. இத்திட்டங்கள் மூலம், பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 5,203 மாணவர்களும், 364 ஆசிரியர்களும், பிரிண்டிங் துறையைச் சேர்ந்த 25 பங்கேற்பாளர்களும், 35 பெண் கைத்தறித் தொழிலாளர்களும் தொழில்முனைவோர் ஆவதற்கு ஊக்கமளிக்கப்பட்டுள்ளனர்.

**4.2.7. மனிதவள மற்றும் ஆசிரிய மேம்பாட்டு மையம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் மனிதவளம் மற்றும் ஆசிரிய மேம்பாட்டு மையத்தை 14 ஆகஸ்ட் 2023 அன்று இணையவழியில் திறந்து



வைத்தார். மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில் பல்வேறு ஆசிரியர் மற்றும் திறன் மேம்பாட்டு திட்டங்களை நடத்துவதற்காக இந்த மையம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**4.2.8. மகாகவி பாரதியார் சிலை நிறுவுதல்**

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலம் முன்பாக 11.12.2023 அன்று மகாகவி பாரதியார் சிலை நிறுவப்பட்டது.

**4.2.9. தேசிய உயர்கல்வித் திட்டம் (ரூசா)**

தேசிய உயர்கல்வி திட்டத்தின் கீழ் மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆசிரியர்களால் மொத்தம் 45 ஆராய்ச்சி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு. பயன்பாடு சார்ந்த ஆராய்ச்சி முதன்மை மையமாக உள்ளது. இவற்றுள் குறிப்பிடத்தக்க பகுதிகளாக i) பண்டைய மரபியல், ii) உயிரியல் மருத்துவ மரபியல், iii) மூலக்கூறு கண்டறிதல், iv) பல்வேறு உயிரியல், உயிரியல், உயிரி தொழில்நுட்பம், இரசாயன, ஆற்றல்

மற்றும் சுற்றுச்சூழல் பயன்பாடுகளுக்கான சென்சார்கள், இரசாயனங்கள், ஃப்ளோரோக்ரோம்கள் மற்றும் உயிரியல் வளர்ச்சி, v) கணக்கீட்டு நுண்ணறிவு மற்றும் தரவுகளின் பயன்பாடு பல்வேறு பயன்பாடுகளுக்கான பகுப்பாய்வு உள்ளன. நுண்ணுயிர் மரபியல், மருந்துப் பரிசோதனை, சந்தை மதிப்பு மதிப்பீடு மற்றும் ஆற்றல் தணிக்கை ஆகிய துறைகளில் ஆசிரிய உறுப்பினர்கள் ஆலோசனை சேவைகளை வழங்குகின்றனர்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் – ரூசா திறன் மையம் ஆனது வேலைவாய்ப்புக்கான தொடர்ச்சியான திறன் மேம்பாட்டுப் படிப்புகளை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வளாகத்தில் உள்ள முதுகலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழங்கிவருகிறது. கடந்த பருவத்தேர்வில் 1,500 மாணவர்கள் திறன் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு படிப்புகள் மூலம் பயிற்சி பெற்றனர். தற்போதைய பருவத்தேர்வில் ஆசிரிய உறுப்பினர்கள்



55 திறன் படிப்புகளை மாணவர்களுக்கு வழங்குகிறார்கள்.

மதுரை காமராசர் பல்கலைக்கழக ரூசா தொழில்முனைவோர் திட்டங்களின் கீழ் பாரம்பரிய மருத்துவ தாவரங்களுக்கான நாற்றங்கால், நிறுவுதல், டோபமைனின் ஸ்மார்ட்போன் அடிப்படையிலான எலக்ட்ரோகெமிக்கல் கண்டறிதல், Li–S பேட்டரி பொருத்தப்பட்ட போர்ட்டபிள் பவர் சேமிப்புகள், சணல் அடிப்படையிலான உற்பத்தியில் தொழில்துறை மேம்பாடு போன்ற 15 திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### 4.2.10. இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனத்துடன் (ZSI) புரிந்துணர்வு ஒப்பந்தம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகமும் இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனமும் வகை பிரித்தல் மற்றும் கணக்கெடுப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

### 4.2.11. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சி பூங்காவை நிறுவுதல்

மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில் 8.23.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் மதுரை காமராசர் பல்கலைக்கழகமும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும் இணைந்து ஆராய்ச்சி பூங்காவை உருவாக்கி வருகின்றன. ஆராய்ச்சியில் 16 தயாரிப்பு அடிப்படையிலான தீவிர செயலில் உள்ள பகுதிகளை பல்கலைக்கழகம் அடையாளம் கண்டுள்ளது.



## 4.3. அண்ணா பல்கலைக்கழகம்

4.3.1. அண்ணா பல்கலைக்கழகம் நன்கு அறியப்பட்ட நான்கு தொழில்நுட்ப நிறுவனங்களான கிண்டி பொறியியல் கல்லூரி (1794), அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி (1944), சென்னைத் தொழில்நுட்ப நிறுவனம் (1949) மற்றும் கட்டிடக்கலை மற்றும் திட்டமிடுதல் பள்ளி (1957) ஆகியவற்றை ஒருங்கிணைத்து செப்டம்பர் 4, 1978–இல் துவங்கப்பட்டது. இப்போது இது மாநிலத்தின் அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் அதன் குடையின் கீழ் இணைக்கும் பல்கலைக்கழகமாக செயல்படுகிறது. இந்தியாவின் மிகப்பெரிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகமான அண்ணா பல்கலைக்கழகம் உயர் தொழில்நுட்ப அறிவு மதிப்பீடுகள் கொண்ட வல்லுநர்களை உருவாக்கி வருகிறது.

4.3.2. பல்கலைக்கழகத்தில் 4 வளாகங்கள் (CEG, ACT, MIT மற்றும் SAP), 13 உறுப்புக் கல்லூரிகள் (ஆரணி, காஞ்சிபுரம், திண்டிவனம், விழுப்புரம், திண்டுக்கல், அரியலூர், இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, பண்ருட்டி, பட்டுக்கோட்டை, திருக்குவளை, நாகர்கோவில், தூத்துக்குடி) மற்றும் 3 மண்டல வளாகங்கள் (திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர்) செயல்படுகிறது. அண்ணா பல்கலைக்கழகத்துடன் 488 இணைக்கப்பட்ட கல்லூரிகள் (தன்னாட்சி அல்லாத கல்லூரிகள் 392 மற்றும் தன்னாட்சி கல்லூரிகள் 96) உள்ளன. இதில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி கல்லூரிகளும் அடங்கும். அண்ணா பல்கலைக்கழகத் துறைகளில் 31 இளநிலை மற்றும் 89 முதுநிலை பாடப் பிரிவுகளில் 12,139 மாணவ / மாணவிகள் தற்போது பயின்று வருகின்றனர். அண்ணா பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளில் 2,77,691 இளநிலை மாணவ / மாணவிகள் 52 பாடப்



பிரிவுகளில் பயின்று வருகின்றனர். தற்போது 27,808 முதுநிலை மாணவ / மாணவிகள் 63 பாடப் பிரிவுகளில் பயின்று வருகின்றனர். மேலும் அண்ணா பல்கலைக்கழகத்தில் மொத்தம் 13,434 ஆராய்ச்சி மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

4.3.3. QS உலக தர வரிசை 2023 பட்டியலின் அடிப்படையில், உலகளவில் அண்ணா பல்கலைக்கழகம் 551–560 எனும் இடைப்பட்ட வரிசையில் இருந்து 2024–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பட்டியலில் 427–ஆவது இடத்தை அடைந்துள்ளது. 2023–ஆம் ஆண்டு NIRF தரவரிசையில் அண்ணா பல்கலைக்கழகம் பொறியியல் கல்லூரிகளில் 13–ஆவது இடத்தையும், இந்திய அளவிலான பல்கலைக்கழகங்களில் 14–ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. அண்ணா பல்கலைக்கழகம் NAAC ன் மூலம் 3–ஆவது சுழற்சியில் A++ உயர் தரம் எனும் அங்கீகாரம் பெற்றுள்ளது. Times Higher Education (THE) World

University Ranking (WUR) அடிப்படையில், அண்ணா பல்கலைக்கழகம் பொறியியல் பிரிவில் உலகளாவிய கல்வி நிறுவனங்களில் 301–400 என்ற இடைப்பட்ட வரிசையில் இடம் பெற்றுள்ளது. பல்கலைக்கழகத்தின் 'h' குறியீடு 194 (07.02.2024 வரை) ஆக உள்ளது. ஆராய்ச்சி கட்டுரைகளின் எண்ணிக்கை 33,130 ஆகும். முதல் 20,000 ஆவணங்களில் மட்டும் இதுவரை 4,65,696 ஆராய்ச்சி கட்டுரைகள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. 2022–23–ஆம் கல்வியாண்டில் அண்ணா பல்கலைக்கழகம் பெற்றுள்ள காப்புரிமைகளின் எண்ணிக்கை 26 ஆகும். 2023–24–ஆம் கல்வியாண்டில், அண்ணா பல்கலைக்கழகம் ரூ.14.00 கோடி நிதியுதவி பெற்று 38 ஆராய்ச்சி திட்டங்கள் மற்றும் 685 ஆலோசனை பணிகளில் ஈடுபட்டுள்ளது.

4.3.4. இந்தியாவின் முதல் தொலை நிலை விமானி பயிற்சி அமைப்பு (Remote Pilot Training



Organisation (RPTO)) என்பது சிறிய மற்றும் நடுத்தர வகையான ஆளில்லா வான்வழி வாகன பயிற்சி மையம் ஆகும். இது UAS விதிகள் 2021–இன் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இது DGCA, இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு 2022–ஆம் ஆண்டில் MIT, அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆளில்லா வான்வழி வாகனக் கழகத்தை (TNUAVC) நிறுவியுள்ளது. டிரோன் விமானிகளுக்கு பயிற்சி அளிப்பதில் RPTO இன் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இந்தியா முழுவதும் பயிற்சி பெற்ற 9,514 விமானிகளில் மொத்தம் 1,613 விமானிகள் RPTO மூலம் பயிற்சி பெற்றுள்ளனர்.

4.3.5. ரூசா ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புத் திட்டத்தின் கீழ் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு ரூ.6.50 கோடி (ரூசா 1.0) வழங்கப்பட்டுள்ளது. "நிலையான ஆற்றல் தொழில்நுட்பங்கள் – புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தியுடன்

ஆற்றல் சேமிப்பு முறையினை ஒருங்கிணைப்பது மற்றும் அதை நிலையான மைக்ரோ கிரிட்டில் செல்லுவது" என்ற தலைப்பில் ஆராய்ச்சி திட்ட முன்மொழிவை செயல்படுத்துவதற்காக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. "ஆராய்ச்சி கண்டுபிடிப்பு மற்றும் தர மேம்பாடு–தொழில் முனைவோர் மையம்" என்பதன் கீழ் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு ரூ.15.00 கோடி (ரூசா 2.0) அனுமதிக்கப்பட்டுள்ளது. கிடைத்த மானியத்தைப் பயன்படுத்தி, பல மேம்பட்ட திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. பி.இ. கணினி அறிவியல் மற்றும் பொறியியல் மாணவர்களுக்கு அவர்களின் அறிவு, திறன், தொழில்முனைவு மற்றும் தொழில் வாய்ப்புகளை மேம்படுத்தும் விதமாக புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. "ஆராய்ச்சி கண்டுபிடிப்பு மற்றும் தர மேம்பாடு" திட்டத்தின் கீழ் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு ரூ.35.00 கோடி (ரூசா 2.0) அனுமதிக்கப்பட்டுள்ளது. "மின்சார வாகன



தொழில்நுட்பங்கள் – பொருள்களின் சிறந்த பண்புகள், உற்பத்தி மற்றும் கட்ட மேலாண்மை" என்ற தலைப்பில் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

4.3.6. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, (DST) அண்ணா பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு மையத்திற்கு FIST திட்டத்தின் கீழ் ரூ.1.15 கோடியை அனுமதித்துள்ளது. இதில் ரூ.1.00 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

4.3.7. தேர்வுக்கு முன்பும், தேர்வுக்குப் பிறகும், வினாத்தாள்கள் மதிப்பீட்டின் போதும் மற்றும் விடைத்தாள்களை அனுப்புவதை ஒழுங்கமைக்கும் முறையிலும் மேம்பட்ட தளவாட மேலாண்மை அமைப்பு தேவைப்படுகிறது. தற்போதைய நேரடி மதிப்பீட்டு முறையினால் முடிவுகளை வெளியிடுவதில் தாமதம், அதிகரித்த செலவுகள் மற்றும் அதிக கையேடு பிழைகள் ஏற்படுகின்றன. எனவே, மதிப்பீட்டில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது இன்றியமையாததாகிறது. தமிழ்நாடு

அரசின் தமிழ்நாடு புதுமை முயற்சிகள் (TANII) திட்டத்தின் கீழ், இலக்க மதிப்பீட்டு முறைக்கு செயல்வடிவம் கொண்டு வரப்பட்டுள்ளது.

4.3.8. நான் முதல்வன் திட்டம் மூலம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (TNSDC) நிதியுதவியுடன் அண்ணா பல்கலைக்கழகத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அண்ணா பல்கலைக்கழகத்தில் பயிலும் அனைத்து முழுநேர பி.இ./பி.டெக். மாணவர்களுக்கும் (4,60,734) திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 24 மேம்பட்ட தொழில்நுட்பம் தொடர்பான பாடப்பிரிவுகளில் சுமார் 1,500 ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

4.3.9. அண்ணா பல்கலைக்கழகத்தின் துறைகளில் 7.5 விழுக்காடு இடஒதுக்கீட்டின் கீழ் 299 மாணவர்கள் இளநிலை படிப்பில் சேர்க்கப்பட்டு பயின்று வருகின்றனர். இத்திட்டத்தினை செயல்படுத்த தமிழக அரசு ரூ.1.99 கோடி நிதியினை



ஒதுக்கீடு செய்துள்ளது. சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த 1,413 மாணவர்கள், முதல் தலைமுறை பட்டதாரி சலுகைத் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். அண்ணா பல்கலைக்கழகத்தில் முதல் தலைமுறை பட்டதாரி இடஒதுக்கீட்டில் சேரும் மாணவர்களுக்காக ரூ.2.12 கோடி நிதியுதவி பயன்படுத்தப்படுகிறது. தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த 153 மாணவிகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக ரூ.18.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதுநிலை பட்டப்படிப்பில் பயிலும் மாணவர்களுக்கு உதவி தொகை வழங்கும் திட்டத்தின் மூலம் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த 469 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக ரூ.3.59 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.3.10. ஆராய்ச்சி மாணவர் செயல்பாடுகள் மற்றும் புதுமை மேம்பாடு ஆகியவற்றில் இரு பல்கலைக்கழகங்களுக்கும் இடையிலான உறவை மேம்படுத்த இங்கிலாந்தை சார்ந்த நாட்டிங்காம் பல்கலைக்கழகத்துடன் அண்ணா பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

மேலும், பல்கலைக்கழகம் பல்வேறு நிறுவனங்களுடன் (அரசு மற்றும் தனியார் துறை) 16 தேசிய அளவிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

4.3.11. அண்ணா பல்கலைக்கழக எம்.ஐ.டி. வளாகத்தில் உள்விளையாட்டு மைதானம் மற்றும் அரங்கம், திறன் அடிப்படையிலான ஆய்வகங்கள் உள்ளடக்கிய அனுபவமிக்க கற்றல் மையம் மற்றும் பவள விழா பூங்கா ஆகியவற்றின் கட்டுமானம் "2024–25–ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும்."



## 4.4. பாரதியார் பல்கலைக்கழகம்

4.4.1. பாரதியார் பல்கலைக்கழகம் 1982–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தற்போது பல்கலைக்கழகத்தில் 13 பள்ளிகள், 38 துறைகள் உள்ளன. இந்த துறைகள் மூலம் 5 இளங்கலை பாடங்கள், 45 முதுகலை பாடங்கள் மற்றும் 36 முனைவர் பட்ட ஆய்வாளர் (Ph.D.) பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

4.4.2. பாரதியார் பல்கலைக்கழகம் தேசிய தர மதிப்பீடு மற்றும் நிர்ணயக் குழுவின் (NAAC) 4–ஆவது சுழற்சியில் (2023 – 2030) 3.63 CGPA மற்றும் "A++" கிரேடு அங்கீகாரம் பெற்றுள்ளது.

4.4.3. 2023–ஆம் ஆண்டிற்கான இந்திய அரசின் கல்வி அமைச்சகம் (MoE), தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் (NIRF) மூலம், பாரதியார் பல்கலைக்கழகம், இந்தியப் பல்கலைக்கழகங்களில் 21–ஆவது இடத்திலும், ஒட்டு மொத்த வரிசையில்

36–ஆவது இடத்திலும், ஆராய்ச்சி வகைகளில் 38–ஆவது இடத்திலும் உள்ளது.

4.4.4. பாரதியார் பல்கலைக்கழகம் 2024–ஆம் ஆண்டிற்கான QS, UK தரவரிசையில் ஆசிய பல்கலைக்கழகங்களில் 171–ஆவது இடத்திலும், தெற்கு ஆசிய அளவில் 24–ஆவது இடத்திலும் உள்ளது.

4.4.5. பாரதியார் பல்கலைக்கழகம் 2023–ஆம் ஆண்டுக்கான UK TIMES உயர்கல்வி தரவரிசையில் உலகப் பல்கலைக்கழக தரவரிசையில் 601–800 தரவரிசையிலும், இந்திய நிறுவனங்களில் 9–ஆவது இடத்திலும், உலக இளம் பல்கலைக்கழகங்களில் 251–300 இடங்களிலும் இடம்பெற்றுள்ளது.

4.4.6. பாரதியார் பல்கலைக்கழகத்தில் 142 இணைப்புக்கல்லூரிகள் உள்ளன. இதில், 30 கல்லூரிகள் தன்னாட்சி தகுதி பெற்றுள்ளன.



4.4.7. இந்த ஆண்டு 85,918 இளங்கலை, முதுகலை, ஆய்வியல் நிறைஞர் (M.Phil) முனைவர் பட்ட ஆய்வாளர்கள் Ph.D., ஆய்வு மாணவர்கள், இணைக்கப்பட்ட கல்லூரிகளிலும், பல்கலைக்கழகத் துறைகளில் 1,643 மாணவர்களும் மற்றும் தொலைதூரக்கல்வி வாயிலாக 3,402 மாணவர்களும் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட நிறுவனங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

4.4.8. பாரதியார் பல்கலைக்கழகம் SCOPUS தரவுத்தளத்தின்படி 12,009 வெளியீடுகள், 1,91,754 மேற்கோள்களுடன், "h" Index–இல் 144 குறியீடுகளைக் கொண்டுள்ளது.

4.4.9. முன்னணி அறிவியல் ஆராய்ச்சி தரவுத்தளமான SCOPUS அடிப்படையில் உலகின் சிறந்த 2% விஞ்ஞானிகளின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள 18 பேராசிரியர்களை

கொண்டிருப்பதில் பல்கலைக்கழகம் பெருமை கொள்கிறது.

4.4.10. பாரதியார் பல்கலைக்கழக பேராசிரியர்களில் இருவர் கிளாரிவேட் அனலிட்டிக்ஸில் "மிகவும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட ஆராய்ச்சியாளர்கள்" என்று பட்டியலிடப்பட்டுள்ளனர்.

4.4.11. பல்கலைக்கழக பேராசிரியர்களில் ஒருவர் இந்தியாவின் தேசிய அறிவியல் அகாடமியின் நபராக (Fellow) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பல்கலைக்கழக பேராசிரியர்களில் ஒருவருக்கு வணிகத்தில் சிறந்து விளங்கும் மானுபாய் எம் ஷா நினைவு விருது வழங்கப்பட்டுள்ளது.

4.4.12. பாரதியார் பல்கலைக்கழகத்தின் பெயரில் 22 காப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 13 காப்புரிமைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன மற்றும் 22 பதிப்புரிமைகள் பாரதியார்



பல்கலைக்கழகத்தின் பெயரிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

4.4.13. DRDO–Bharathiar University Center for Life Sciences (DRDO–BU CLS) தற்போது DRDO – Industry–Academia Centre of Excellence பாரதியார் பல்கலைக்கழகம் (DIA–CoE BU) ஆக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. DRDO மற்றும் BU இடையே அடுத்த 25 ஆண்டுகளுக்கு (2047 வரை) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. பாதுகாப்புத் தொழில்நுட்பங்கள் மற்றும் தேவைகள் ஆகியவற்றில் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு இப்பகுதியில் தொழில்துறை அகாடமியா ஒத்துழைப்புகளை அதிகரிக்க இந்த மையம் உதவுகிறது. DRDO–IA–CoE–BUஐ நிறுவுவதற்கு DRDO உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.4.14. பல்கலைக்கழகத்தின் துறைகள் அவற்றின் கல்வித் திறமைகள் அங்கீகரிக்கப்பட்டு, சிறப்பு உதவித்திட்டம் (SAP) மற்றும் பல்கலைக்கழக மானியக்குழுவினால் சிறப்புப் பகுதியில் சிறந்து விளங்குவதற்கான மையம் (CPEPA) மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இந்திய அரசின் DST–FIST ஆகியவற்றின் மூலம் மானியம் பெற அங்கீகரிப்பட்டுள்ளது.

4.4.15. தேசியக் கவிஞரான பாரதியாருக்கு மரியாதை செலுத்தும் வகையில், பாரதியாரின் வாழ்க்கை மற்றும் சாதனைகளை நினைவுகூறும் வகையில், பாரதியார் உயராய்வு மையத்தை பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது. பாரதியார் நூற்றாண்டு விழா மற்றும் இந்திய சுதந்திரத்தின் 75–ஆம் ஆண்டு விழாவினை முன்னிட்டும் மணிக்கூண்டு ஒன்று அமைக்கப்பட்டது.



4.4.16. நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பாரதியார் பல்கலைக்கழகத்தில் 'கல்லூரிகனவு' நிகழ்வின் போது, பாரதியார் பல்கலைக்கழகத்தின் 61 இணைப்புக்கல்லூரிகள் 110 பள்ளிகளை தத்தெடுக்க முன்வந்து கல்வி மற்றும் வேலை வழிகாட்டுதலுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) கையெழுத்தானது. இந்த முயற்சியின் மூலம், அரசு, அரசு உதவிபெறும் மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் எஸ்.எஸ்.எல்.சி முடித்த மாணவர்கள், உயர்கல்வியில் உள்ள பல்வேறு பிரிவுகளைப்பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

4.4.17. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி பாரதியார் பல்கலைக்கழகத்தில் "அறிவு ஆராய்ச்சிப் பூங்கா" அமைக்கும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது.

4.4.18. பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் 3KLD திறன் கொண்ட உயிர் வாயு ஆலை

நிறுவப்பட்டுள்ளது. மாணவர்களின் விடுதியில் இருந்து, சமையலறை மற்றும் உணவுக் கழிவுகளை மூலப்பொருளாகக் கொண்டு உயிர்வாயு மற்றும் உயிர் உரமாக மாற்றப்படுகிறது.



### 4.5. பாரதிதாசன் பல்கலைக்கழகம்

4.5.1. 1982–ஆம் ஆண்டு புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. பாவேந்தர் பாரதிதாசனின் கவிதையில் இருக்கும் புதியதோர் உலகம் செய்வோம் என்னும் அடியினை இலச்சினை மொழியாகக் கொண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகம் செயல்படுகிறது.

4.5.2. இப்பல்கலைக்கழகத்தில் 4 புலங்கள், 16 பள்ளிகள், 37 துறைகள், 1 முதுநிலை விரிவாக்க மையம், 33 சிறப்பு ஆய்வு மையங்கள், உள்தர மதிப்பீட்டு மையம், அறிவுசார் சொத்துரிமைகள் களம், பாலியல் வன்கொடுமைத் தடுப்பு மையம், மனிதவள மேம்பாட்டு மையம் உட்பட அனைத்து வளங்களுடன் இயங்கும் 12 மையங்கள் உள்ளன. 41 முதுநிலைப் பாடப்பிரிவுகள், 6 இளநிலை பாடப்பிரிகள் தெரிவுமுறைத் தரக்கல்வியில் பருவ அடிப்படையில்

நடத்தப்படுகின்றன. 44 முனைவர் பட்ட ஆய்வுப் படிப்புகள், 5 சான்றிதழ்ப் படிப்புகள் ஆகியன பயிற்றுவிக்கப்படுகின்றன. இப்பல்கலைக்கழகத்தில் 258–க்கும் மேற்பட்ட பேராசிரியர்களும் 315–க்கும் மேற்பட்ட நிர்வாகப் பணியாளர்களும் பணிபுரிகின்றனர். பல்கலைக்கழகத்தில் 3,190–க்கும் மேற்பட்ட மாணவர்களும் பயின்று வருகின்றனர். தொலைதூரம் மற்றும் இணையவழிக் கல்வி மையம் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் தொலைநிலைக் கல்விச் செயலகத்தின் அனுமதியுடன் 39 பாடப்பிரிவுகளைக் கூடுதலாக வழங்குகிறது (20 இளநிலை பாடப்பிரிவுகள், 19 முதுநிலை பாடப்பிரிவுகள்) 10 இணைய வழிப் பாடப்பிரிவுகள்).

4.5.3. இப்பல்கலைக்கழகம் 155 இணைவு பெற்ற கல்லூரிகளைக் கொண்டுள்ளது (36 அரசுக் கல்லூரிகள், 15 அரசு உதவிபெறும் கல்லூரிகள்,



92 சுயநிதிக் கல்லூரிகள், 1 ஒற்றை–பாடப்புலம் மற்றும், 11 அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்).

4.5.4. 2023–ஆம் கல்வியாண்டில் இந்திய அளவிலான NIRF தரவரிசையில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் இந்தியப் பல்கலைக்கழக அளவில் 41–ஆவது இடத்தையும் தமிழகப் பல்கலைக்கழக அளவில் 4–ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. 2023–24 உலகக் கல்வியியல் விருதில் 8–ஆவது இடத்தை பெற்றுள்ளது.

### 4.6. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

4.6.1. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், பெண்கல்வியை மேம்படுத்தும் ஒரு சிறந்த கல்வி நிலையமாக விளங்குகிறது. தமிழ்நாடு அரசால் 1984–ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இப்பல்கலைக்கழகம், மாநிலத்திலேயே ஒரே ஒரு மகளிர் பல்கலைக்கழகம் என்ற பெருமையையும், தேசத்தில் மூன்றாவது பல்கலைக்கழகம் என்ற தனித்துவத் தகுதியும் பெற்றுள்ளது. கொடைக்கானலில் அமைந்துள்ள இப்பல்கலைக்கழகம் பெண் ஆர்வலர்களுக்கு கல்வி மற்றும் ஆராய்ச்சி முயற்சிகளுக்கு உகந்த சூழலை வழங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகம் "சரி நிகர் சமானத்தை நோக்கி" என்ற குறிக்கோளுடன், கல்வியின் மூலம் பெண்கள் மேம்பாடு மற்றும் சமத்துவ சமுதாயம் ஆகியவற்றை உருவாக்கும் உயர்ந்த இலக்குடன் செயல்பட்டு வருகிறது. இங்கு பயிலும் மாணவியரை, உயர்தரமான உயர்கல்வியின்



வழியாக சவாலான பணிகளை மேற்கொள்வதன் வழியாக நீடித்த தேசிய வளர்ச்சிக்காக பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

4.6.2. பல்கலைக்கழகத்தில் 16 துறைகளும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் முதுகலை மற்றும் விரிவாக்க ஆய்வு மையங்களும் பள்ளப்பட்டியில் உள்ள சிப்காட் வளாகத்தில் மகளிர் மேம்பாட்டு மையமும் உருவாக்கப்பட்டுள்ளன. 2002–ஆம் ஆண்டு முதல் தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள மகளிர் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளாக இணைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 3 அரசு கலைக் கல்லூரிகள், 1 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, 2 தன்னாட்சி மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் 7 தனியார் கல்லூரிகள் என மொத்தம் 13 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

4.6.3. பல்கலைக்கழகத்தின் முக்கியமான சாதனைகள்

- ❖ எல் செவியரின் ஆய்வுச் சுருக்கம் மற்றும் மேற்கோள் (Scopus) தரவுத்தளத்தின்படி, 2022–ஆம் ஆண்டுக்கும் 2024–ஆம் ஆண்டுக்கும் இடையில் 181 ஆய்வு வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

- ❖ மொத்தம் 26 ஆராய்ச்சி திட்டங்களுக்கான, அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறப்பட்டன.

- ❖ ஆராய்ச்சி முறை, அறிவுசார் சொத்துரிமை (IPR) தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாடு போன்ற தலைப்புகளை உள்ளடக்கிய 24 பட்டறைகள் / கருத்தரங்குகளை இப்பல்கலைக்கழகம் நடத்தி உள்ளது.



- ❖ பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள் மற்றும் மாணவர்கள் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளுக்காக ஆறு விருதுகள் மற்றும் அங்கீகாரம் பெறப்பட்டன.

- ❖ ஒன்பது காப்புரிமைகள் வழங்கப்பட்டன.

- ❖ தேசிய / சர்வதேச மாநாட்டு நடவடிக்கைகளில் கட்டுரைகளுடன் 35 புத்தகங்கள் மற்றும் திருத்தப்பட்ட தொகுதிகள் / புத்தகங்களில் அத்தியாயங்கள் வெளியிடப்பட்டன.

- ❖ அரசு அங்கீகாரம் பெற்ற அமைப்புகளிடமிருந்து விரிவாக்க நடவடிக்கைகளுக்காக ஒரு விருது மற்றும் அங்கீகாரம் பெறப்பட்டது.

- ❖ பல்கலைக்கழகம் என்.எஸ்.எஸ் / ஒய்.ஆர்.சி / அரசு மற்றும் அரசு அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள் உட்பட 67 விரிவாக்க மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியது, இதில் மொத்தம் 4,906 மாணவர்கள் பங்கேற்றனர்.

- 23 எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் மற்றும் மாணவிகளின் ஆராய்ச்சி மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக பிற நிறுவனங்கள் / ஆராய்ச்சி நிறுவனங்கள் / தொழில்துறைகளுடன் கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்கள் / தொழில்துறைகளுடன் உள்ளுரைப்பயிற்சி, பணிசார் பயிற்சி, திட்டப்பணி, மாணவர் / ஆசிரியப் பரிமாற்றம் மற்றும் கூட்டு ஆராய்ச்சி ஆகியவற்றிற்காக பன்னிரெண்டு செயல்பாட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நிறுவப்பட்டன.

- அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் மாணவர் தன்னார்வலர்களால் பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்புச் சங்கம் (VAWC) நிறுவப்பட்டது.



- புவியியல் குறியீட்டிற்காக (GI) 'கொடைக்கானல் மலைப்பூண்டு' மற்றும் 'உடன்குடி பனங் கருப்பட்டி' ஆகிய இரண்டு தயாரிப்புகளை அடையாளம் கண்டு வெற்றிகரமாக பதிவு செய்திருப்பது பங்குதாரர்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவந்தது மற்றும் புவிசார் குறியீடு குறித்த விழிப்புணர்வை மாணவர்களிடையே அதிகரித்தது.

## 4.7. அழகப்பா பல்கலைக்கழகம்

4.7.1. அனைத்து வழிமுறைகளிலும் தரமான கல்வி வழங்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு அழகப்பா பல்கலைக்கழகம் ஒரு மாநிலப் பல்கலைக்கழகமாக 1985–ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் 4 புலங்கள், 45 துறைகள், 10 இயக்குநரகங்கள், 63 அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி மையங்கள் மற்றும் 2 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மேலும், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் அமைந்துள்ள 45 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும் இணைப்புக் கல்லூரிகளாக கொண்டுள்ளது.

4.7.2. அழகப்பா பல்கலைக்கழகம், பல்கலைக்கழகத் துறைகள் வாயிலாக 112 பட்டப் படிப்புகளையும், இணைப்புக் கல்லூரிகள் மூலம்



81 பட்டப் படிப்புகளையும் தொலைநிலை மற்றும் இணையவழிக் கல்வி வாயிலாக 25 பட்டப் படிப்புகளையும், இணைந்த கல்வி முறையின் கீழ் 118 பட்டப் படிப்புகளையும் வழங்கி வழங்குகிறது. ஏறத்தாழ 1.59 இலட்சம் மாணவர்கள் மேற்குறிப்பிட்ட கல்வி முறையின் வாயிலாக உயர்கல்வி பயின்று வருகிறார்கள்.

### 4.7.3. முக்கிய சாதனைகள்

QS தெற்காசிய பல்கலைக்கழகங்களின் தர வரிசை 2024–இல், 59–வது இடத்தினையும், QS ஆசிய பல்கலைக்கழகங்களின் வரிசைக் கோர்வையில் 271–280 நிலையிலும் அழகப்பா பல்கலைக்கழகம் இடம் பெற்றுள்ளது. Times Higher Education (THE) டைம்ஸ் 2024–ஆம் ஆண்டு தர மதிப்பீட்டில் ஆசிய அளவில் 111–ஆம் இடத்தினையும், உலக அளவிலான இளமைப் பல்கலைக்கழகங்களுக்கான தர வரிசையில்,

அழகப்பா பல்கலைக்கழகம், 101–150–ஆவது இடத்திலும் மற்றும் பொதுப்பிரிவில், 2023–ஆம் ஆண்டு தரவரிசையில் 601–800 தொகுப்பிலும் அழகப்பா பல்கலைக்கழகம் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

கல்வி மற்றும் ஆராய்ச்சியின் தர மேம்பாட்டிற்காக ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தால் இந்திய அளவில் தேர்வு செய்யப்பட்ட 10 பல்கலைக்கழகங்களில் இப்பல்கலைக்கழகமும் ஒன்று. இதனை அங்கீகரிக்கும் விதமாக ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகம் ரூசா 2.0 திட்டத்தின் கூறு 4–இன் கீழ் ரூ.100 கோடி தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலப் பல்கலைக்கழகங்களின் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியின் தரத்தை மேம்படுத்த அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. 60:40 என்ற விகிதத்தில், ஒன்றிய கல்வி அமைச்சகமும் மற்றும் தமிழ்நாடு அரசும் பகிர்ந்து,



அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு இதுவரை ரூ.69.25 கோடி பெறப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

### 4.7.4. மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் / செயல்பாடுகள்

**நான் முதல்வன் திட்ட செயல்பாடுகள்**

தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின்படி, மாணவர்களுக்குத் தொழில் சம்பந்தப்பட்ட, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் திறன்களை வழங்க "நான் முதல்வன்" திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், இரண்டாம் பருவத்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தால் சான்றளிக்கப்படும் ஆங்கிலத் தொடர்புப் பாடம் வழங்கப்படும். நான்காவது பருவத்தில் மைக்ரோசாப்ட், என்எஸ்இ போன்றவற்றால் சான்றளிக்கப்படும் எண்மத் திறன் பாடம் வழங்கப்படுகிறது.

### 4.7.5. பிற அங்கீகாரம்

கிளாரிவேட் (Clarivate) நிறுவனம் நானோ துகள்களில் சிறந்த ஆராய்ச்சிக்காக அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு India Research Excellence – Citation Awards 2023 வழங்கி அங்கீகரித்துள்ளது.



## 4.8. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

4.8.1. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 1990–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம் தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களைச் சார்ந்து வாழும் மக்களின் கல்வித் தேவைகளான அறிவு மற்றும் ஆராய்ச்சிகளை முன்னெடுக்கிறது.

4.8.2. இப்பல்கலைக்கழகம் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்றினரால் "A" தகுதியுடன் (CGPA–3.13) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்திய தரவரிசைப் பட்டியலின்படி (NIRF) 2023 ஆண்டில் இந்தியப் பல்கலைக்கழகங்களில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 83–ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

4.8.3. இப்பல்கலைக்கழகத்தில் 29 துறைகளும், 10 பள்ளிகளும், நாகர்கோவிலில் முதுகலை விரிவாக்க மையமும் செயல்பட்டு வருகின்றன. ஆழ்வார்குறிச்சியில் ஸ்ரீ பரமகல்யாணி சுற்றுச்சூழல் அறிவியல் மையமும், இராஜாக்கமங்கலத்தில் கடல்சார் அறிவியல் மையமும், அபிஷேகப்பட்டி பல்கலைக்கழக வளாகத்திற்குள் சமூக விலக்கல் மற்றும் உட்கொணர்வு கொள்கை ஆய்வு மையம், பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப மையம், புவி தொழில்நுட்பவியல் ஆகிய ஐந்து துறைகள் சிறப்பு மையங்களாக செயல்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகத்தில் 52 இளங்கலை, முதுகலை, ஒருங்கிணைந்த முதுகலை பட்டப்படிப்புகள் வாயிலாக சுமார் 2,778 மாணவர்கள் உயர்கல்வி பயின்று வருகின்றனர்.

4.8.4. இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 102 கல்லூரிகள் (11 அரசு கல்லூரிகள், 23 அரசு



உதவிபெறும் கல்லூரிகள், 58 சுயநிதி கல்லூரிகள், 09 தன்னாட்சிக் கல்லூரிகள், 01 சுயநிதி மற்றும் தன்னாட்சிக் கல்லூரி) மற்றும் 06 மனோ கல்லூரிகள் வாயிலாக 1,30,993 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

4.8.5. இப்பல்கலைக்கழகம் H–Index ஆய்வு குறியீட்டின்படி இந்தியாவில் 97–ஆவது இடத்தையும் ஆசியாவில் 525–ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. 2024–ஆம் ஆண்டில் உலக விஞ்ஞானிகள் தரவரிசைப் பட்டியலில் முதல் பத்து விழுக்காட்டில் இப்பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஐந்து பேர் இடம் பெற்றுள்ளனர். 2023–ஆம் கல்வியாண்டில் இப்பல்கலைக்கழகக் கல்வியாளர்கள் 19 அறிவுசார் காப்புரிமைகளை பதிவு செய்துள்ளனர். அறிவுசார் பரிமாற்றத்திற்காக இப்பல்கலைக்கழகம் 29 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

4.8.6. 2022–23–ஆம் கல்வியாண்டில் தமிழக அரசால் தொடங்கப்பட்ட "நான் முதல்வன்" மேம்பாட்டுத் திட்டமானது இளங்கலை பயிலும் இரண்டு, நான்கு, ஆறாம் பருவ மாணவர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.8.7. 2023–24–ஆம் கல்வியாண்டில் புதிய இளங்கலை பட்டப்படிப்புகள் (இளங்கலை செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக்கல்வி, இளங்கலை இணையப் பாதுகாப்பு, இளங்கலை தரவு பகுப்பாய்வுத்துறை) மற்றும் முதுகலை பட்டப்படிப்புகள் (முதுகலை தொல்லியல் மற்றும் முதுகலை பயன்பாட்டு இயற்பியல்) தொடங்கப்பட்டன.

4.8.8. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் பல்வேறு துறைகளின் மூலம் சுமார் ரூ.5.67 கோடிக்கான ஆய்வுத்திட்டங்களை மேற்கொண்டது. அவற்றுள் சுமார் ரூ.1.10 கோடி



மதிப்பிலான 6 ஆய்வு முன்மொழிவுகளுக்கு அனுமதியைப் பெற்றுள்ளது.

4.8.9. தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்களின் பங்களிப்புகள், உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றின் மூலம் முழுமையான கல்வி நிலை அளிக்கப்படுகிறது. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தென் மண்டல ஹாக்கிப் போட்டியில் தங்கப்பதக்கமும், தென்மேற்கு மண்டலங்களுக்கு இடையிலான பல்கலைக்கழக தடகளப் போட்டியில் வெள்ளிப்பதக்கத்தையும் பல்கலைக்கழக மாணவர்கள் பெற்றுள்ளனர்.

4.8.10. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தொலைநெறி தொடர் கல்வி இயக்ககம் 24 கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்புகளை நடத்துவதற்குரிய அனுமதியைப்

பல்கலைக்கழக மானியக் குழு – தொலைதூர கல்விக்குழு (UGC–DEB) 2027–28–ஆம் கல்வியாண்டு வரை வழங்கியுள்ளது.



### 4.9. பெரியார் பல்கலைக்கழகம்

4.9.1. பெரியார் பல்கலைக்கழகம் 1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் சேலத்தில் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம் சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய நான்கு மாவட்டங்களை உள்ளடக்கியதாகும்.

4.9.2. இப்பல்கலைக்கழகத்தில் ஐந்து அறிவியல் பள்ளிகள் மற்றும் மூன்று கலைப் பள்ளிகள் உள்ளன. இதில் 27 துறைகளில் 35 முதுகலை திட்டங்கள், 04 இளங்கலை திட்டங்கள், 03 பட்டயப் படிப்புத் திட்டம், 01 சான்றிதழ் படிப்புத் திட்டங்கள் மற்றும் 27 ஆராய்ச்சி திட்டங்கள் வழங்கப்படுகின்றன. பல்கலைக்கழக துறைகளில், 148 ஆசிரியர்கள் பல்வேறு பிரிவுகளின் கீழ் பணிபுரிகின்றனர். தர்மபுரியில் உள்ள பெரியார் பல்கலைக்கழக பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி

மையம் எட்டு துறைகள் மற்றும் 20 ஆசிரியர்களுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

4.9.3. பெரியார் பல்கலைக்கழகம் பல்துறை ஆய்வு மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் விதமாக குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. துறைகளுக்கிடையிலான செயல்திறனை கூட்ட அவைகள் பள்ளிகளாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

**4.9.4. சாதனைகள்**

- NIRF எனப்படும் தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பு வரிசைப்படுத்திய பட்டியலில் 2023-இல் 59-ஆவது இடமும், தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக 100 இடங்களுக்குள் இருக்கும் பல்கலைக்கழகமாகவும் பெரியார் பல்கலைக்கழகம் திகழ்ந்து வருகின்றது.



- புதுமைக் கண்டுபிடிப்புகளுக்கான ARIIA தர வரிசையில் பெரியார் பல்கலைக்கழகம் 10 இடங்களுக்குள் வந்துள்ளது.
- இந்திய கல்வித்துறை நிறுவனங்களின் கண்டுபிடிப்பு சம்பந்தமான அமைச்சகத்தின் (IIC) நட்சத்திர மதிப்பீடாக 5.00-க்கு 4.00 பெற்ற ஒரே அரசு பல்கலைக்கழகமாக பெரியார் பல்கலைக்கழகம் திகழ்கிறது.
- கணினி அறிவியல் துறை, உயிர் தொழில்நுட்பவியல், இயற்பியல், உயிர் வேதியியல் மற்றும் மருத்துவசார் ஊட்டச்சத்து உள்ளிட்ட துறைகளைச் சார்ந்த ஆறு பேராசிரியர்கள் தமது கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமையினைப் பெற்றுள்ளனர்.
- தமிழக அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் அடைகாப்பு மையத்தின் சார்பில் தொடர் பயிற்சிகள்

நடத்தப்பட்டு, தொழில் முனைவோர்களுக்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

❖ மாணவர்கள் தாங்களாகவே நூல்களை எடுத்துக்கொண்டு திரும்ப ஒப்படைக்கும் நிகழ்வினை எளிமையாக்கும் முகமாக தானியங்கி இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. 5,000–க்கும் மேற்பட்ட புதிய நூல்கள் கொள்முதல் செய்யப்பட்டு, குழந்தைகளுக்கென தனி நூலகம் உருவாக்கப்பட்டுள்ளது. அதே போன்று வாசகர்களின் வாசிக்கும் ஆர்வத்தை தூண்ட வாசகர் வட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

❖ தந்தை பெரியார் இருக்கை, பேரறிஞர் அண்ணா இருக்கை, முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு.கருணாநிதி ஆய்வு மையம் ஆகியனவற்றின் செயல்பாட்டினை



விரைவு படுத்த தனி இயக்குநர் நியமிக்கப்பட்டு பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

❖ சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், இயற்கையோடு இணைந்த பசுமையான வாழ்வியல் சூழலை உருவாக்கவும் மின்கலனில் இயங்கும் வாகனம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

❖ மூலிகைப் பண்ணை, காளான் வளர்ப்பு பண்ணை, மண்புழு உரம் தயாரிக்கும் கூடம், சாண எரிவாயு கலன், ஆற்றல் பூங்கா, அலங்கார பூக்கள் பூங்காக்கள் மற்றும் உயிர்வளிப் பூங்கா எனப்படும் 'ஆக்சிஜன் பார்க்' ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன.

❖ ரூ.95.00 லட்சம் மதிப்புள்ள இரண்டு பல்துறை ஆய்வுத் திட்டங்கள் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் நிதியுதவி பெற்று

பல்கலைக்கழக துறைகளின் ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகிறது.

- ❖ பெரியார் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டுவரும் "முத்தமிழறிஞர் கலைஞர் ஆய்வு" மையத்திற்கான தனிக்கட்டிடம் கட்டுவதற்காக அரசால் ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டு கட்டடம் கட்டப்பட்டுள்ளது.
- ❖ வளாகத்தின் பசுமைச் சூழலை மேம்படுத்தும் வண்ணம் மூங்கில் மரங்களைக் கொண்ட "பிராண வாயு பூங்காக்கள்" அமைக்கப்பட்டுள்ளன.
- ❖ பல்கலைக்கழகத் துறைகளின் ஆசிரியர்கள் 6,216 ஆய்வுக்கட்டுரைகளை பன்னாட்டு மற்றும் தேசிய ஆய்விதழ்களில் வெளியிட்டுள்ளனர். பல்கலைக்கழக ஆசிரியர்கள் தங்களது கண்டுபிடிப்புகளுக்காக 27 காப்புரிமைகளைப் பெற்றுள்ளனர்.



பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரைகளின் h அட்டவணை (h index) 91 ஆகும்.

- ❖ பல்கலைக்கழகத் துறைகளில் கல்வி மற்றும் ஆராய்ச்சி சார்ந்த 85 மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகள் நடத்தப்பெற்றுள்ளன.
- ❖ பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து ஆய்வு முன்னெடுப்புகளுக்காக ரூ.76.00 இலட்சம் பெறப்பட்டுள்ளது.
- ❖ நாட்டின் ஐந்து முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- ❖ பல்கலைக்கழகத்தின் வேலை வாய்ப்பு மற்றும் வழிகாட்டு மையத்தின் சார்பில் எட்டு வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பெற்றுள்ளன.

- ❖ பல்வேறு நிறுவனங்கள் / ஆராய்ச்சி ஆய்வகங்கள் / தொழில்துறைகளுடன் 1,000–க்கும் மேற்பட்ட பல்வேறு கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ❖ திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.



### 4.10. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

4.10.1. தமிழ்நாட்டில் திறந்தநிலை மற்றும் தொலை நிலைக் கற்றல் முறையை அறிமுகப்படுத்தி அதனை மேம்படுத்துதல், புத்தாக்கச் சூழல்களுக்கேற்ப மனித முயற்சிகளுக்குத் தேவையான அறிவை மேம்படுத்துதல், பயிற்சி வழங்குதல், ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளைத் தொடர்ந்து வழங்குவதற்காக தமிழ்நாடு அரசால் 2002–ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

4.10.2. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட நாள் முதல், தொலைதூரப் பகுதி மக்கள், கிராமப்புற மக்கள், பணிசெய்வோர், இல்லத்தரசிகள், மாற்றுத்திறனாளிகள், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியல் இன, பழங்குடியின

கற்போர்களுக்கு குறைந்த கட்டணத்தில் சமகால சமூகத்திற்கு தேவையான படிப்புகளை வழங்கி வருகின்றது.

4.10.3. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தற்போது, பட்டப் படிப்புகள், திறன்மேம்பாடு மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பாடத்திட்டங்களை வழங்கி வருகிறது. குறிப்பாகச் சான்றிதழ், பட்டயம், தொழிற்பட்டயம், மேற்பட்டயம், இளநிலைப் பட்டம், முதுநிலைப் பட்டம், முனைவர் பட்ட ஆராய்ச்சிப் படிப்புகள் என பல்வேறு பாடத்திட்டங்களை வழங்கி வருகின்றது.

4.10.4. தேசிய மதிப்பீடு அங்கீகார கழகத்தின் ஏ+ தகுதி தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் முதல் சுற்றிலேயே பெங்களூரிலுள்ள தேசிய மதிப்பீடு அங்கீகார கழகத்தின் ஒட்டுமொத்த தரவரிசைப் புள்ளியி 3.32/4 புள்ளிகளைப் பெற்று 'A+' தகுதியைப் பெற்று சாதனை படைத்துள்ளது.



இதன்மூலம் இந்தியாவிலுள்ள திறந்தநிலைப் பல்கலைக்கழகங்களில் முதல் சுற்றிலேயே மிக அதிகப் புள்ளிகளுடன் தேசிய மதிப்பீடு அங்கீகார கழகத்தின் 'A+' தகுதியைப் பெற்றுள்ள இரண்டாவது திறந்தநிலைப் பல்கலைக்கழகமாகத் திகழ்கின்றது.

4.10.5. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் புலம், புதுதில்லி, ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய மருத்துவத் தாவரங்கள் வாரியத்திடமிருந்து ரூ.24.90 இலட்சம் திட்ட நிதி நல்கையாகப் பெற்றுள்ளது. இதன்மூலம் "மருத்துவத் தாவரங்களின் முக்கியத்துவம் மற்றும் கல்வி முறையில் அதன் தாக்கம்" என்னும் தேசிய கருத்தரங்கு மற்றும் அஸ்வகந்தா மருத்துவ தாவரத்தின் முக்கியத்துவம் குறித்த பிரச்சாரம் ஆகிய இரு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.

4.10.6. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் சிறப்புக் கல்வி மற்றும் மறுவாழ்வுத் துறை பல வகைப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கும் கல்வி வாய்ப்புகளை அதிகரித்திடும் வகையில் மக்கள் நலன் விரும்பிகளால் அளிக்கப்படும் ரூ.13.24 இலட்சம் நிதியுதவியுடன் கற்றலுக்கான உலகளாவிய அரங்கினை நிறுவியுள்ளது. இந்த அரங்கின் மூலம் மாற்றுத்திறனாளிகள் கற்பதற்கான பல்லூடக மற்றும் மின் கற்றல் பொருள்கள் தயாரிக்கப்படும்.

4.10.7. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மதிப்புமிகு சர்வதேச நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. தைவானிலுள்ள தைவான் மிங் சி தொழில்நுட்பப் பல்கலைக்கழத்துடன் அக்டோபர் 17, 2023 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. மேலும் பிரான்ஸ் நாட்டின் பாரிஸிலுள்ள பன்னாட்டு உயர்கல்வி மற்றும்



ஆராய்ச்சி நிறுவனத்துடன் ஜூலை 29, 2023 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்நிறுவனங்களுடன் ஆசிரியர் மற்றும் மாணவர் பரிமாற்றம் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை இணைந்து மேற்கொள்ள முடியும்.

4.10.8. ஆய்வாளர்கள் திருக்குறள் மற்றும் இலக்கியம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள ஏதுவாக, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து "திருவள்ளுவர் நூலகம்" நிறுவப்பட்டுள்ளது.

4.10.9. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் 5 முன்னணி உயர்கல்வி நிறுவனங்களுடன் [(1) ஜார்கண்ட் மாநில திறந்தநிலைப் பல்கலைக்கழகம், ராஞ்சி, ஜார்கண்ட், (2) கிருஷ்ண காந்த ஹேண்டிக் மாநில திறந்தநிலைப் பல்கலைக்கழகம், அசாம், (3) மிங் சி

தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், தைவான், (4) மகாராஷ்டிரா தேசிய சட்டப் பல்கலைக்கழம், நாக்பூர் மற்றும் (5) பன்னாட்டு உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், பாரிஸ், பிரான்ஸ்] இணைந்து படிப்புகளை வழங்கிட ஏதுவாக புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

4.10.10. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம் சென்னை வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து முதல் தமிழ் வளர்ச்சி மாநாட்டினை நடத்தியுள்ளது.

4.10.11. முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, "கலைஞர் மு. கருணாநிதி எழுத்துக்கள், மொழியியல் மற்றும் பண்பாட்டு நோக்கில்" என்னும் இரண்டு நாள் தேசிய மாநாடு நடத்தப்பட்டது.



4.10.12. கற்போருக்கு 408 தமிழ் வழி 'தானே கற்றல் முறை' பாடநூல்கள் உட்பட மொத்தம் 1,420 தானே கற்றல் முறைப் பாடநூல்கள் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன.

4.10.13. திருநங்கைகள், சிறைக் கைதிகள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு கட்டணமின்றி கல்வி வழங்கப்படுகின்றது.

## 4.11. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

4.11.1. 2002–ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை நிறுவியது. தமிழ், ஆங்கிலம், பொருளாதாரம், கணிதம், விலங்கியல், வேதியியல், உயிரி தொழில்நுட்பம், வணிகவியல், இயற்பியல், கணினி அறிவியல், சுற்றுச்சூழல் அறிவியல், நுண்ணுயிரியல் மற்றும் சமூகவியல் ஆகிய பாடங்களை வழங்கும் 13 துறைகளை பல்கலைக்கழக வளாகம் கொண்டுள்ளது. திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் 80 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இணைவு பெற்றுள்ளன. மேலும், வேலூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள 8 ஆராய்ச்சி நிறுவனங்களும் இணைந்து செயல்படுகின்றன.

4.11.2. பல்கலைக்கழக துறைகளின் ஆராய்ச்சி அறிஞர்களுக்கான திருவள்ளுவர் பல்கலைக்கழக



ஆராய்ச்சி பெல்லோஷிப் (TURF) வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது.

4.11.3. திருவள்ளுவர் பல்கலைக்கழகம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் கண்டுபிடிப்பு நிறுவனம் (EDII, சென்னை) ஆகியவை இணைந்து IEDP–உயர்நிலை மேலாண்மைக் கூட்டம் மற்றும் புதுமை அறிவுசார் விழிப்புணர்வு என இணைவு பெற்ற கல்லூரிகளுக்கு தொழில் முனைவு மற்றும் கண்டுபிடிப்பு பற்றிய விழிப்புணர்வு, ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம், மின்–தலைவர்கள் பட்டறை, வடிவமைப்பு சிந்தனைப் பட்டறை, தொழில்முனைவோர் பற்றிய விழிப்புணர்வு மற்றும் கண்டுபிடிப்பு, சமூக தொழில் முனைவோர் மற்றும் புதுமை பற்றிய புத்தாக்க விழிப்புணர்வு போன்ற 8 நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தன. இதில், 5,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் 100 ஆசிரியர்கள் இத்திட்டத்தின் மூலம் 2023–24–ஆம் கல்வியாண்டில் பயனடைந்தனர்.

4.11.4. திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு UG மற்றும் PG மாணவர்களுக்கான **NASSCOM – SKILLSDA** பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு 2023–ஆம் ஆண்டு மெகா வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் இருந்து 3,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் புகழ்பெற்ற நிறுவனங்களில் வேலைவாய்ப்பினைப் பெற்றனர்.

4.11.5. பல்கலைக்கழகத் துறைகளின் ஆசிரிய உறுப்பினர்களின் மொத்தம் 935 ஆய்வுக் கட்டுரைகள் அறிவியல் மேற்கோள் அட்டவணையிடப்பட்ட அறிவியல் இதழ்களின் வலையிலும், பல்கலைக்கழகத் துறைகளின் ஆசிரிய உறுப்பினர்களின் 1,338 ஆய்வுக் கட்டுரைகள் இதுநாள் வரையில் ஸ்கோபஸ் அட்டவணையிடப்பட்ட இதழ்களிலும் வெளியிடப்பட்டன. பல்கலைக்கழக மைய நூலகத்தில் 1,795 பிஎச்.டி. பட்டம் பெற்றதைத் தவிர



அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய 16,340 தொகுதி புத்தகங்கள் உள்ளன. ஆய்வறிக்கை மற்றும் 5,883 M.Phil. ஆய்வுக்கட்டுரைகள். நூலகம் எட்டு முன்னணி செய்தித்தாள்களுக்கு குழுசேர்ந்துள்ளது. நூலகத்தினுள் இ–ஆதாரங்களை உலவ இணைய உலாவல் வசதிகளும் உள்ளன. இந்த நூலகம் முன்னணி வெளியீட்டாளர்களிடமிருந்து 2,290 + முழு உரை மின்–பத்திரிகைகளுக்கும் குழுசேர்ந்துள்ளது (தயாரிப்பு பெயர் EBSCO – கல்வித் தேடல் எலைட்) மேலும் ஆராய்ச்சியின் தரத்தை மேம்படுத்த திறந்த அணுகல் மின் புத்தகங்கள் மற்றும் மின்–பத்திரிகைகளை அணுகுவதற்கு பல இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக நூலகம் (1) டெல்நெட் (நூலக வலையமைப்பை உருவாக்குதல்) (2) ஷோத்கங்காவில் உறுப்பினராக உள்ளது.

4.11.6. திருவள்ளுவர் பல்கலைக்கழகம் நவம்பர் / டிசம்பர்–2023 பருவத் தேர்வுகளிலிருந்து தமிழ்நாடு அரசின் TANII திட்டத்தில் ரூ.8.00 கோடி செலவில் மையப்படுத்தப்பட்ட ஆன்லைன் டிஜிட்டல் மதிப்பீட்டு முறையை (ODVS) செயல்படுத்தியுள்ளது.



## 4.12. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

4.12.1. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் ஆசிரியர் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்காக 2008–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்ட பொழுது தமிழ்நாட்டில் பல்வேறு பல்கலைக்கழகங்களின் இணைப்பில் இயங்கி வந்த 491 கல்வியியல் கல்லூரிகள் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணைப்புக்குள் கொண்டுவரப்பட்டு, தற்போது 7 அரசு, 14 அரசு உதவிபெறும் மற்றும் 643 சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் உட்பட மொத்தம் 664 கல்வியியல் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் ஆறு கல்வித்துறைகள் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்காக செயல்பட்டு வருகின்றன.

4.12.2. இப்பல்கலைக்கழக வளாகத்தில் இரண்டாண்டு எம்.எட். மற்றும் பி.எச்டி. பட்டப்படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் 12(B) அந்தஸ்து பெற்றுள்ளது. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் தேசிய மதிப்பீட்டு அங்கீகார கவுன்சிலில் (NAAC) இருந்து முதல் சுழற்சியில் 3.17 CGPA உடன் 'A' கிரேடு பெற்றுள்ளது.

4.12.3. மாநிலத்தில் உள்ள அனைத்து ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகள் தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் (NCTE) விதிமுறைகளின் படி நடத்தப்படுகின்றனவா என்பதை இப்பல்கலைக்கழகம் கண்காணிக்கிறது.

4.12.4. ஆசிரியர் கல்வியில் ஆராய்ச்சி வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் ஆசிரியர் கல்வியில் புதிய பாடத்திட்டங்களை அமல்படுத்த தேவையான வழிமுறைகளை கண்டறிகிறது.



4.12.5. NCTE–ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் கல்வியில் பட்டம் மற்றும் கல்வியியலில் தனித்தன்மை ஏற்படுத்தி நடவடிக்கை மேற்கொள்கிறது.

4.12.6. பல்கலைக்கழகத்தால் "குழந்தைகளின் உரிமைகள் மற்றும் அவர்களின் பாதுகாப்பு" என்ற பாடத்திட்டம் பி.எட். பாடத்திட்டத்தில் 2023–24–ஆம் கல்வியாண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

4.12.7. தமிழ் இணைய கல்விக்கழகத்துடன் (Tamil Virtual Academy) இப்பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. மேலும், வெளிநாட்டில் தமிழ் கற்பிக்கும் தன்னார்வலர்களுக்கு இணைய வழியில் ஆசிரியர் பயிற்சி வழங்கும் வகையில் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

4.12.8. மாணவர்களின் நலன் கருதி இப்பல்கலைக்கழகம் ஸ்வயம் பாடப்பிரிவுகளுக்கு

இணையான இரண்டு இணையவழி படிப்புகளை, [1.Women Empowerment 2. Entrepreneurship Development எம்.எட் மாணவர்களுக்கும், 1. Learner Psychology 2. Digital Learning பி.எட். மாணவர்களுக்கும்] பாடத்திட்டத்தில் இணைத்துள்ளது.

4.12.9. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் ஆராய்ச்சி மற்றும் ஆய்வு கல்வியினை மேம்படுத்துவதற்காக இந்தியா மற்றும் வெளிநாடு உள்பட தோராயமாக 98 பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

4.12.10. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட "குழந்தைகளின் உரிமைகள் மற்றும் அவர்களின் பாதுகாப்பு – ஆசிரியர்களின் பங்கு" என்ற பாடம் தொடர்பான வழிகாட்டுதல் நிகழ்ச்சியினை இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும்



ஆசிரியர்களுக்கு தோழமை மற்றும் UNICEF நிறுவனத்துடன் இணைந்து மண்டலவாரியாக வழங்கியுள்ளது.

**4.12.11. செயல்பாடுகள்**

- ❖ பட்டய மற்றும் சான்றிதழ் படிப்புகளை தோற்றுவித்தல்.
- ❖ தேசிய மற்றும் சர்வதேச அளவில் மதிப்பாய்வு செய்யப்பட்ட பல்கலைக்கழக மானியக் குழுவின் பராமரிப்பு பட்டியல் (UGC Care List) மற்றும் ஸ்கோபஸில் தரமாக ஆராய்ச்சி வெளியீடுகளை அதிகரித்தல்.
- ❖ ஆசிரியர் கல்வி மாணவர்களை தமிழ் பாரம்பரியம் மற்றும் பண்பாடுகளை வெளிக்கொணர ஊக்கப்படுத்துதல்.

### 4.13. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**4.13.1.** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம், 1928 (தமிழ்நாடு சட்டம் 1–இன் 1929)–இன்படி நிறுவப்பட்டது, மேலும், மேற்கண்ட சட்டம் மாற்றியமைக்கப்பட்டு, அண்ணாமலைப் பல்கலைக்கழக சட்டம், 2013 (தமிழ்நாடு சட்டம் 20/2013)–ன்படி 25.09.2013 அன்று தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களை அதன் அதிகார வரம்பாகக் கொண்டு "இணைக்கப்பட்ட" பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. தற்போது 81 கல்லூரிகள் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

**4.13.2.** தொலைதூரக் கல்வி முறையில் எண்ணற்ற குடிமக்களுக்குக் கல்வி கிடைக்கச் செய்வதில் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும்



முன்னோடியாக இருந்து வருகிறது. தொலைதூரக் கல்வி இயக்குநரகம் (DDE) வழங்கும் அனைத்து பாடப் பிரிவுகளும் தொலைதூரக் கல்வி வாரியத்தால் (DEB) அங்கீகரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றவை. வளாகத்தில் உள்ள பாடப்பிரிவுகள் NAAC, NBA, ICAR, NCTE, AICTE போன்ற தகுதிவாய்ந்த அமைப்புகளால் முறையாக ஒப்புதல் அளிக்கப்பட்டவை / அங்கீகரிக்கப் பட்டவை. இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் பழமையான பொதுப் பல்கலைக்கழகங்களில் ஒன்றான இது, உயர்கல்வி மையங்களை அணுகுவதற்குத் தொலைவில் உள்ள மக்களுக்குக் கல்வியை எடுத்துச் செல்வதில் சிறந்த சேவையைச் செய்கிறது.

**4.13.3.** ஜூலை 2022–இல் இப்பல்கலைக்கழகம் NAAC ஆல் "$A^{+}$" கிரேடு அங்கீகாரம் பெற்றது. NAAC மதிப்பெண் 4.00–க்கு 3.38 மதிப்பெண்களுடன் பல்கலைக்கழகம் தொலை தூரக் கல்வியை நடத்துவதற்கு தகுதி பெறுகிறது

4.13.4. ஜூலை, 2023–இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் DDE வழங்கும் 27–பட்டப் படிப்புகளுக்கு DEB ஒப்புதல் அளித்துள்ளது.

4.13.5. இந்தியா டுடே தரவரிசை – அரசுப் பல்கலைக்கழகங்களில் இந்தியாவில் 15–ஆவதாக இடம் பெற்றுள்ளது.

**4.13.6. பிற கல்விச் சாதனைகள்**

- 68 காப்புரிமைகள் தாக்கல் செய்யப்பட்டு மூன்று காப்புரிமைகள் பெறப்பட்டுள்ளன.
- பல்கலைக்கழகம் 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.
- 103 மதிப்புக் கூட்டப்பட்ட படிப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.
- இன்ஸ்ட்டிடியூஷன் இன்னோவேஷன் கவுன்சில் (IIC) 2022–23–ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.



- ஸ்காலர்ஷிப்கள் / உதவித்தொகை தொடர்பான கோரிக்கைகளுக்கு மாணவர் பங்களிப்பை அதிகரிக்க ***"மாணவர் ஆதரவு மற்றும் முன்னேற்ற இயக்குநரகம்"*** நிறுவப்பட்டது.
- பார்வையற்ற மாணவர்களுக்கு, மத்திய நூலகத்தில் பிரைலி மென்பொருள் மற்றும் துணைக் கருவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- பல்கலைக்கழகம் H – Index of 140 (Scopus) மற்றும் 125 (Web of Science)–இல் இடம் பெற்றுள்ளது.
- **'திராவிடக்ரிஸ் அண்ணாமலைக்கா'** என்ற புதிய நீண்ட தலையை உடைய வெட்டுக்கிளி இனம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- 2023–24–இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்காக DST PURSE – II

திட்டத்தின் கீழ் ரூ.50.00 லட்சம் மனித ஆற்றலுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**4.13.7. விரிவாக்க செயல்பாடுகள்**

- புவனகிரி தாலுகாவில் 50 சிறு பண்ணை நிலங்களில் அண்ணாமலை ஒருங்கிணைந்த அரிசி–மீன்–கோழி வளர்ப்பு முறை மாதிரி பண்ணை நிறுவப்பட்டது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் பழங்குடியினருக்கு அதிகாரமளித்தல் (TEST) : அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கல்வியாளர்களுக்கு இணையாக விரிவாக்கம் செய்வதைக் கருத்தில் கொண்டு சமூக நலன் சார்ந்த செயல்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. 2015–2022–வரையிலான ஆண்டுகளில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் அருகில் உள்ளவர்களுக்கு அதிகாரமளித்தல் (NEST)



என்பது பல்கலைக்கழகத்தின் சிறந்த நடைமுறையாக இருந்தது, மேலும், இது 2023 முதல் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் (TEST) மூலம் பழங்குடியினருக்கு அதிகாரமளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. பழங்குடியின மக்களுக்கான கணினிப் பயிற்சி பல்கலைக்கழகம் மூலம் வழங்கப்படுகிறது.

**4.13.8. திட்டங்கள்**

- TEST–ன் ஒரு பகுதியாக, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் பழங்குடியினர் நலத்துறையுடன் இணைந்து தமிழகத்தின் பச்சமலை மற்றும் கல்வராயன் மலைகளில் வாழும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த முன்மொழிந்துள்ளது.

## 5. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

5.1. தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை எழும்பூரில் செயல்பட்டு வருகிறது. இங்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முந்தைய அரசுத் துறை ஆவணங்கள் மற்றும் பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆவணங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் உள்ளன. இவை, காலங்காலமாக மாநில அரசால் மேற்கொள்ளப்படும் நிர்வாக நடவடிக்கைகளின் விளைவாக திரட்டப்பட்டவை. மேலும், அரசு நிர்வாகத்தை முழு அளவில் இடைவிடாது பிரதிபலிப்பதாகவும் நம்பகத்தன்மை வாய்ந்ததாகவும் உள்ளவை ஆகும். தற்போதுள்ள ஆவணக் காப்பகக் கட்டடம் 1909–ஆம் ஆண்டில் துவக்கப்பட்டதாகும். எனவே, இது ஒரு வரலாற்று மற்றும் பாரம்பரிய நினைவுச்சின்னமாக மாறியுள்ளது.



ஆவணக்காப்பகத்தின் ஆவணங்கள் பல்வேறு துறைகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசின் நிரந்தரப் பதிவுகள் அனைத்தையும் பெற்று, தொகுத்து, ஒழுங்குபடுத்துவதும், அவற்றை அறிவியல் ரீதியில் பாதுகாப்பதும், வரலாற்று ஆய்வுகளுக்கு வழங்குவதும், அதிகாரப்பூர்வ குறிப்புகளுக்கு அவற்றை உடனடியாகக் கிடைக்கச் செய்வதும் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் முக்கியச் செயல்பாடு ஆகும்.

### 5.2. நூலகம்

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திற்குச் சொந்தமாக ஒரு தனி நூலகம் உள்ளது. இந்நூலகத்தில் 1633–ஆம் ஆண்டு முதலான, 2,31,828 புத்தகங்கள் உள்ளது. இவற்றில் 43,106 ஆவணங்கள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டு

ஆராய்ச்சியாளர்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படுகின்றன.

### 5.3. மாவட்ட விவரச்சுவடிகள்

மாவட்டங்களுக்கான மாவட்ட விவரச்சுவடிகள் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் அங்கமாக விளங்கும் விவரச்சுவடி பிரிவால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆங்கிலப் பதிப்புகளின் தமிழ் மொழிப்பெயர்ப்பு அச்சிடும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

### 5.4. மாவட்ட ஆவணக் காப்பகங்கள்

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் செயல்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக, ஆறு மாவட்ட ஆவணக் காப்பக மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. கடலூர், சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் இவை செயல்படுகின்றன. மாவட்ட



ஆவண காப்பக மையங்கள் அரசின் ஆவணங்களை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

### 5.5. ஆராய்ச்சிக் கூடம்

1930–ஆம் ஆண்டு முதல், ஆவண காப்பகத்தின் ஆவணங்களை, ஆராய்ச்சியாளர்கள் அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகிறது. தமிழ்நாடு ஆவணக் காப்பக வளாகத்தில் அதிநவீன ஆராய்ச்சிக் கூடம் செயல்பட்டு வருகிறது. இங்கு 2023–ஆம் ஆண்டில் 258 ஆராய்ச்சியாளர்களுக்கு அசல் ஆவணங்களை பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 5.6. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் வழங்கிய விவரங்கள்

2011–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு ஆவணக் காப்பகம், தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–இன் கீழ் ஆவணங்களின் நகல்களை பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது. 2023–ஆம்

ஆண்டில் 14,080 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டுள்ளன.

**5.7. ஆராய்ச்சி மாணவர்களுக்கான பயிற்சித் திட்டம் (2022-23)**

தமிழ்நாடு புதுமை முயற்சிகள் (TANII) திட்டத்தின் கீழ், 2022-23-ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஆராய்ச்சி பயிற்சி திட்டங்களை செயல்படுத்துவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி, சென்னை தரமணியில் உள்ள ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் மூலம் ஆராய்ச்சிப் பயிற்சி திட்டங்களை மேற்கொள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 2022-ஆம் ஆண்டில் ரூ.48.62 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இரண்டாவது ஆண்டிற்கும் (2023-24) பயிற்சி திட்டங்களை மேற்கொள்ள ரூ.48.62 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.



**5.8. ஜப்பானிய திசு தொழில்நுட்ப முறையைப் (TISSUE LAMINATION METHOD) பயன்படுத்தி ஆவணங்களைப் பாதுகாத்தல்**

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் ஏற்கனவே மின்மயம் (ஸ்கேன்) செய்யப்பட்ட ஆவணங்களை நவீன ஜப்பானிய திசு தொழில்நுட்ப முறை (TISSUE LAMINATION METHOD) மூலம் பாதுகாப்பதற்கு ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

**5.9. கணினிமயமாக்கல் மற்றும் மின்னுருவாக்கம்**

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தை நவீனமயமாக்கும் பணியை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் ஆவணங்களை மின்னுருவாக்கம் செய்ய "e-Archives" என்ற இணையதளத்தை உருவாக்கி பயன்படுத்துவதற்கு ரூ.1.50 கோடி தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு செய்யபட்டுள்ளது.

இவ்வழியில் ஆவணங்களை எளிதாக பராமரித்து வைப்பதற்கும், அவற்றை எளிதில் பெறுவதற்கு வழி செய்வதோடு, எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான வகையில் ஆவணங்களை கொண்டு செல்வதற்கு துணை புரிகிறது.

**5.10. பாரம்பரிய கட்டடம் – புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு**

சென்னை எழும்பூரில் அமைந்துள்ள பாரம்பரியம் மிக்க தமிழ்நாடு ஆவணக் காப்பக கட்டடத்தை மறுசீரமைப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் ரூ.10.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையினைக் கொண்டு பொதுப்பணித் துறையினர் மூலமாக ஆவணக் காப்பக பாரம்பரிய கட்டடம் மற்றும் இணைப்பு கட்டடத்தில் மின்இணைப்புகளை மாற்றியமைத்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் துவங்கப்பட்டு, பணி முன்னேற்றத்தில் உள்ளது.



**5.11. ஆராய்ச்சி மாணவர்களுக்கான ஊக்கத் தொகை திட்டம்**

ஆராய்ச்சி மாணவர்களுக்கான உதவி தொகை திட்டத்திற்கு ரூ.4.80 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் (2023–24) தகுதி வாய்ந்த 4 ஆராய்ச்சி மாணவர்களுக்கு அதிகபட்சமாக ஒரு வருடத்திற்கு மாதம் ரூ.10,000/– ஊக்க தொகையுடன் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## 6. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

6.1. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் 1992–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

### 6.2. நோக்கங்கள்

- ❖ உயர்கல்வி நிறுவனங்களில் தரத்தை ஒருங்கிணைத்து நிர்ணயித்தல்.
- ❖ மாநிலத்தில் உயர்கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்குதல்.
- ❖ பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.
- ❖ கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கிடையே ஒருங்கிணைப்பை ஊக்குவித்தல் மற்றும்



தொழில்துறை அதன் சார்ந்த நிறுவனங்களிலுள்ள வாய்ப்புகளை தொடர்பு கொண்டு ஆராய்தல்.

- ❖ புதிய உயர்கல்வி நிறுவனங்களைத் தொடங்குவதற்கான வழிகாட்டுதல்களை வரையறுத்தல்.
- ❖ மாநிலத்தில் உயர்கல்விக்கான மதிப்பீட்டு கட்டமைப்பை உருவாக்க பணியாற்றுதல்.

### 6.3. முக்கிய செயல்பாடுகள்

#### 6.3.1. இணைத்தன்மை

பொதுப் பணிகளில் வேலைவாய்ப்பிற்காகவும், உயர்படிப்புகளை மேற்கொள்வதற்காகவும் கல்வி நிறுவனங்கள் வழங்கும் படிப்புகளுக்கு இணைத்தன்மை அளிப்பதற்கு ஏதுவாக பல்வேறு பாடத்திட்டக்குழுத் தலைவர்கள் மற்றும் பாட வல்லுநர்களின் கூட்டங்களை நடத்தி அவற்றின்

பரிந்துரைகளை இணைத்தன்மைக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்து தேவையான அரசாணைகள் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதுவரை நடத்தப்பட்ட 25 இணைத்தன்மைக் குழுவில், பொதுப்பணிகளில் வேலைவாய்ப்பு நோக்கத்திற்காக 868 பட்டங்களும், உயர்கல்வி பயில 142 பட்டங்களும் (மொத்தம் 1,010 பட்டங்கள்) இணையானது / இணையற்றது என அறிவிக்கப்பட்டுள்ளன.

### 6.3.2. நான் முதல்வன் திட்டம்

பாடத்திட்டத்தில் உள்ள பாடங்களை இணைத்தல், பரிந்துரைக்கப்பட்ட மதிப்பீடுகள், ஆசிரியர் மேம்பாட்டு திட்டத்திற்கான கால அட்டவணை அதனை அமுல்படுத்துதல், மதிப்பீடு செய்தல் மற்றும் பயிற்சி வழங்குநர் விவரங்கள் விவாதிக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றி, தடையற்ற செயலாக்கத்திற்காக அனைவருக்கும் அனுப்பப்பட்டது. இம்மன்றம் ஆர்வத்தின் வெளிப்பாடுகளை கண்காணித்து ஒருங்கிணைத்தல், கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பு பாடங்களை பரிசோதித்தல் ஆகிய பணிகளை செய்கிறது. இத்திட்டம் 10 மாநிலப் பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள அரசு, அரசு உதவிப் பெறும் மற்றும் சுயநிதி கல்லூரிகளிலும் மற்றும் 19 அரசு தன்னாட்சிக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநகரத்தோடு இணைந்து தமிழ்நாடு உயர்கல்வி மன்றம், பல்கலைக்கழக பிராந்தியங்களில் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளின் பங்கேற்பாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

### 6.3.3. தேசிய தரவரிசையில் தமிழ்நாடு உயர்கல்வி நிறுவனங்கள் இடம்பெறுவதற்கான முயற்சிகள் இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டன.

### 6.4. நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயல்பாடுகள்

- ❖ சுயநிதிக் கல்லூரிகளில் உதவி / இணைப் பேராசிரியர் நியமனத்தில் தர மேம்பாட்டை தகுதி அங்கீகாரம் மூலம் உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் ஏற்படுத்துதல்.

- ❖ உயர்கல்வி நிறுவனங்களின் கல்வி கற்பித்தல் அணுகு றை அடிப்படையில் மதிப்பீட்டு முறையின் முடிவுகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.

- ❖ தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு, டைம்ஸ் உயர்கல்வியின் உலகப் பல்கலைக்கழக தரவரிசை மற்றும் குவாக்ரெல்லி சைமண்ட்ஸ் தரவரிசையில் பங்கேற்பதையும் மற்றும் தேசிய கல்வி மற்றும் தரமதிப்பீடு மன்ற அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்க பயிற்சி பட்டறைகள் மூலம் ஊக்குவித்தல்.



- ❖ முழு நேர மற்றும் பகுதி நேர ஆராய்ச்சி திட்டங்களின் செயல்திறனை கட்டமைக்கப்பட்ட காலத்தின் மூலம் மேம்படுத்துதல்.

- ❖ பட்டறைகள் வாயிலாக உள்சேவை பயிற்சி அளிப்பதன் மூலம் மதிப்பீட்டில் மாற்றத்தை செயல்படுத்த கற்றல் பலன் அடிப்படையில் பாடத்திட்ட கட்டமைப்பு அடிப்படையிலான மதிப்பீடு செய்தல்.

## 7. தேசிய உயர்கல்வி திட்டம் (ரூசா)

7.1. தேசிய உயர்கல்வித் திட்டம் (Rashtriya Uchchatar Shiksha Abhiyan (RUSA)) என்பது தகுதியான மாநில உயர்கல்வி நிறுவனங்களுக்கு நிதி நல்கும் நோக்கம் கொண்ட திட்டமாகும். இத்திட்டம் ஒன்றிய அரசால் 2013–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் இணைந்து 60 விழுக்காடு ஒன்றிய அரசின் பங்கு மற்றும் 40 விழுக்காடு மாநில அரசின் பங்கு நிதி நல்கையுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநில அளவில் இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமானது உயர்கல்வித் தரத்தினை மேம்படுத்துதல், வெளிப்படைத் தன்மை அதிகரித்தல், சிறப்பான பங்களிப்பு அளித்தல், தர மேம்பாடு ஆகியவைகளாகும். இத்திட்டமிடல் புதிய கல்வி நிறுவனங்களை உருவாக்குதல், தற்போது செயல்பட்டு வரும் கல்வி நிறுவனங்களை மேம்படுத்துதுல் மற்றும் தரமான ஆராய்ச்சி நிறுவனங்களை நோக்கிய கல்வி போன்ற



தற்சார்புடைய நிறுவனங்களாக உயர்த்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இந்த நிதி பங்களிப்பு திட்டமானது, எதிர்கால கல்வி பயன்பாடுகளுக்கு வழிகாட்டியாக திகழ்கிறது. தமிழ்நாட்டில் உள்ள மாநிலப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ரூசா 1.0 மற்றும் 2.0 திட்டத்தின் கீழ் பயனடைகின்றன. மேலும், இந்த நிதிபங்களிப்பு திட்டமானது அரசு கல்லூரிகள் மற்றும் அரசு பல்கலைக்கழகங்களுக்கு பிரதம மந்திரியின் தேசிய உயர்கல்வித் திட்டம் (PM–USHA) என்கின்ற புதிய பெயரில் விரைவில் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### ரூசா 1.0

7.1.1. ரூசா 1.0 திட்டத்தில் 77 கூறுகளுக்கு ரூ.374.00 கோடி (MMER உட்பட) நிதி அனுமதிக்கப்பட்டது. இந்நிதியைப் பயன்படுத்தி

வகுப்பறைகள், ஆய்வகங்கள், விளையாட்டு வசதிகள், திறன்மிகு வகுப்பறைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் வழி கற்றல் ஆகியவைகள் ரூசா 1.0–இல் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அண்ணா பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழகம் போன்ற பல பல்கலைக்கழகங்கள் உட்கூறு – 8 இன் கீழ் ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தர மேம்பாடு ஆகியவற்றிற்கான நிதிகளைப் பெற்றுப் பயனடைந்துள்ளன. மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மற்றும் அண்ணா நிர்வாகப் பணியாளர் (AASC) கல்லூரி ஆகியவைகள் மாணாக்கர்களின் திறன் மேம்படுவதற்கு பல்வேறு தொழில்சார்ந்த பயிற்சிகளை வழங்கியுள்ளன.



**ரூசா 2.0**

7.2. ரூசா 1.0 திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றியதன் பயனாக, ரூசா 2.0 திட்டத்தின் கீழ் 2018–ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை ஒன்றிய கல்வி அமைச்சகம் 23 திட்டங்களுக்கு ரூ.500.96 கோடி(MMER உட்பட) நிதி ஒப்பளித்துள்ளது.

இதுவரை ரூசா 1.0 மற்றும் 2.0 இரு திட்டங்களிலும் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் பங்கையும் சேர்த்து ரூ.874.96 கோடி நிதியளிக்க அனுமதிக்கப்பட்டது. அவற்றுள், 2023–24–ஆம் நிதியாண்டிற்கு விடுவிக்கப்பட வேண்டிய தொகை ஒன்றிய அரசின் பங்கு ரூ.61.53 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.41.02 கோடியாகும் (MMER உட்பட).

### 7.2.1. தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலப் பல்கலைக்கழகங்களின் தரம் மற்றும் சிறப்பை மேம்படுத்துதல்

இத்திட்டத்தில் காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு, தரமேம்பாடு மற்றும் சிறப்பான செயல்பாடுக்காக ரூ.85.00 கோடியும், புதுமை மற்றும் தொழில் முனைவோர் மையம் உருவாக்கத்திற்காக ரூ.15.00 கோடியும் ஆக மொத்தம் ரூ.100.00 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியின் கீழ் உட்கட்டமைப்பு மேம்படுத்துதுல், திறன் மேம்பாடு, பல்கலைக்கழகம் – சமுதாய இணைப்பு, மாணவர்களை மையப்படுத்திய ஆராய்ச்சித் திட்டங்கள் ஆகியவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

### 7.2.2. ஆராய்ச்சி, புதுப்பித்தல் மற்றும் தரமேம்பாடு

ரூசா 2.0 திட்டத்தில் நாட்டிற்குத் தேவையான புதிய கண்டுபிடிப்புகளை வளர்க்கும் நோக்குடன் ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கு



முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலப் பல்கலைக்கழகங்களில் இத்திட்டம் பல்கலைக்கழகம் ஒன்றுக்கு ரூ.50.00 கோடி வீதம் நிதியளிக்க அனுமதிக்கப்பட்டது. இதில் தொழில்முனைவோர் மையம் உருவாக்கிட ரூ.15.00 கோடியும் கருப்பொருள் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு (Themed Research Projects) ரூ.35.00 கோடியும் உள்ளடங்கும். இத்திட்டத்தின் கூறுகள் தமிழ்நாட்டில் உள்ள பின்வரும் 6 மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கு ரூ.300.00 கோடியில் ஆராய்ச்சி, புதுப்பித்தல் மற்றும் தரமேம்பாடுக்காக நிதி அளிக்க அனுமதிக்கப்பட்டது. கீழ்க்காணும் பல்கலைக்கழகங்களில் தொழில்முனைவோர் மையத்தின் கீழ் 130 திறன் மேம்பாட்டு தொடர்புடைய பயிற்சிகள்

நடத்தப்பட்டு 10,012 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்:-

| வ.எண். | பல்கலைக்கழகங்கள் | ஆராய்ச்சித் திட்டத்தின் கருப்பொருள் |
|---|---|---|
| 1 | அண்ணா பல்கலைக்கழகம் | மின் வாகனத்திற்கான மின்னேற்றும் நிலையம் |
| 2 | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | உடல்நலம் மற்றும் சுற்றுப்புற சுகாதாரம் |
| 3 | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | சுகாதாரம், ஆற்றல் மற்றும் நிலையான வளர்ச்சி |
| 4 | பாரதியார் பல்கலைக்கழகம் | புற்றுநோய் தெரோநோஸ்டிக்ஸ் ஆராய்ச்சி மையம் |
| 5 | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | உயிர் மருத்துவ அறிவியல் பள்ளி |
| 6 | சென்னைப் பல்கலைக்கழகம் | உயிர் மருத்துவ பயன்பாடுகள் |

மேலும், இந்த ஒவ்வொரு மாநிலப் பல்கலைக்கழகங்களும் மேற்காணும் கருப்பொருள்களின் கீழ் ஆராய்ச்சித் திட்டங்களை



செயல்படுத்த இதுவரை ரூ.184.88 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

7.2.3. உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட உட்கூறின் கீழ் ரூ.80.00 கோடி செலவில் மூன்று மாநிலப் பல்கலைக்கழகங்கள் மற்றும் பத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கல்வி வளாகங்கள், உள்விளையாட்டு அரங்கம், உடற்பயிற்சிக் கூடம் மற்றும் ஆய்வக உபகரணங்கள் வாங்குதல் போன்ற உட்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுப் பயனடைந்துள்ளன.

### 7.3. ரூசா திட்டத்தின் கீழ் செயல்பாடுகள்

இத்திட்டமானது மாநிலப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு மேம்பாடு, தரம் மற்றும் சிறப்பம்சங்கள் மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகள், தொழில்முனைவோர் மையங்கள் போன்ற மேம்பாட்டுப் பணிகளை செயல்படுத்த

உருவாக்கியதாகும். இவற்றை செயல்படுத்தும் நோக்கில் ரூசா 1.0 மற்றும் 2.0 திட்டத்தின் பல்வேறு உட்கூறுகளின் கீழ் பின்வரும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7.3.1. 19 தன்னாட்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் 13,159 மாணாக்கர்கள் தமிழ்நாடு திறன்மேம்பாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சி படிப்புகள் வாயிலாகப் பயனடைந்துள்ளனர்.

7.3.2. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் சுகாதாரப் பாதுகாப்புக்கான சிறப்பு செயல்பாட்டிற்கான தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் – SPV சுகாதார நலன் மூலமாக, 39 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைச் சார்ந்த 4,930 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர். இதில், சுகாதார மேலாண்மை செயல் அலுவலர், மருத்துவமனை நிர்வாக செயல் அலுவலர்,



மருத்துவக் குறியீடு செய்தல், மருத்துவப் பட்டியலிடல் உள்ளிட்ட பயிற்சிகள் அடங்கும்.

7.3.3. அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில், 150 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் முதல்வர்களுக்கு மூன்று நாட்கள் திறன் மேம்பாடு பயிற்சியாக ஐந்து அணிகளில் 'ஆசிரியர் திறன் செறிவுப் பயிற்சி' என்ற தலைப்பில் வழங்கப்பட்டது. தொழிற்கல்வி உட்கூறின் கீழ், மாநிலத்தின் முதன்மை நிறுவனமான அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி மூலமாக வாழ்க்கைத் திறன்கள் மற்றும் மேம்படுத்தும் பயிற்சிகள் நடத்தப்பட்டன. இப்பயிற்சியில் தலைமைத்துவம், தனித்திறன்கள், வளர்ந்துவரும் தொழில்நுட்பம் போன்றவை பயிற்றுவிக்கப்பட்டன. இதில் 2,800 மாணாக்கர்கள் பங்கேற்றுப் பயனடைந்துள்ளனர்.

7.3.4. பாடத்திட்டம் சாராத பல்வேறு கருப்பொருட்களை உள்ளடக்கிய தொடர் இணையதள அமர்வுகள் 'வாராந்திர இணையதள கருத்தரங்கு' என்ற தலைப்பில் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் வாரந்தோறும் ஓர் உயர்கல்வி நிறுவனம் பங்கேற்கும் வகையில் நடத்தப்படுகிறது. இக்கருத்தரங்கில் அரசு உயர் அலுவலர்கள், சிறந்த நிர்வாகிகள், தொழில்முனைவோர், பெரு நிறுவனங்களின் உயர் அலுவலர்கள், சிறந்த கல்வியாளர்கள் மற்றும் தொழிலதிபர்கள் ஆகிய பல்வேறு நிலைகளில் சாதனை புரிந்தோர் கலந்து கொண்டு தங்களுடைய சிறந்த அனுபவங்களை மாணாக்கர்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

இக்கருத்தரங்குகள் ஒவ்வொன்றும் 500 மாணாக்கர்களுக்கு குறையாமல் கலந்து கொள்ளும் வகையில் நடத்தப்பட்டன. இக்கருத்தரங்குகள் காட்சிப் பதிவு செய்யப்பட்டு, அனைத்து மாணாக்கர்களும் பயன்பெறும் வகையில்



ரூசாவின் வலையொளித் தளத்தில் (You Tube Channel of the TN–RUSA) பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இதுவரை 70 கருத்தரங்குகள் நடத்தப்பட்டு 40,000 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

7.3.5. ரூசா 2.0 நிதியுதவி பெற உயர்கல்வி நிறுவனங்கள் தேசிய மதிப்பீடு மற்றும் தரச் சான்று (NAAC) அங்கீகாரம் பெறுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதற்கான வழிகாட்டும் நோக்கில் தேசிய தர மதிப்பீடு மற்றும் தரச் சான்று அங்கீகார நிறுவனத்துடன் இணைந்து சென்னைப் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் உதவியுடன் தேசிய மதிப்பீடு மற்றும் தரச் சான்று பெறுவதற்கான வழிமுறைகளைக் குறித்து பயிற்சிப் வகுப்புகள் நடத்தப்பட்டன. இப்பயிற்சி வகுப்புகள் நான்கு கட்டங்களாக 115 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் கலந்து கொள்ளும் வகையில்

நடத்தப்பட்டன. இதில் 300 பயனாளர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சி தேசிய மதிப்பீடு மற்றும் தரச் சான்று அங்கீகாரம் பெற விண்ணப்பிக்கும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது.



## 8. அறிவியல் நகரம்

8.1. அறிவியல் நகரம் 1998–ஆம் ஆண்டு, தரமணி பகுதியில் உள்ள அனைத்து கல்வி, ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தென்சென்னை பகுதியில் உள்ள தொழில்நுட்ப கூடங்களையும் ஒருங்கிணைப்பதற்காக தமிழ்நாடு அரசு எடுத்த கொள்கை முடிவின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

8.2. அறிவியல் நகரத்தின் முக்கிய நோக்கம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை தற்போதுள்ள மற்றும் புதிய நிறுவனங்களை உள்ளடக்கி செயல்படுத்துவதற்காக, தொழில்துறை நிறுவனங்கள் மற்றும் பெருமூலதன நிறுவனங்களை உள்ளடக்கிய தொழில்நுட்பப் பரிமாற்ற கூறுகளை ஊக்குவித்தல், உலகளாவிய தொழில்நுட்பக் கண்காணிப்பு மற்றும் முன்கணிப்பு மற்றும் அறிவியல் நகரத்தின் உறுப்பு நிறுவனங்களின் நன்மைக்காக ஒரு முழுமையான

அறிவியல் வளாகத்தை (Convention Centre) நிறுவுதல் போன்றவையாகும்.

## 8.3. விருதுகள்

அறிவியல் நகரம் பின்வரும் விருதுகளை நிறுவியுள்ளது. அவை நிபுணர் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

### 8.3.1. சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது

அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் இருந்து அறிவியல் ஆசிரியர்களை அங்கீகரிப்பதற்காக அறிவியல் நகரம் "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருதை" நிறுவியது. மாணவர்களின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்காக அளப்பரிய பங்காற்றிய அறிவாற்றலும் சிறந்த முயற்சியும் கொண்ட அறிவியல் ஆசிரியர்களுக்கு இவ்விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது. 2023–ஆம் ஆண்டில் 8 சிறந்த அறிவியல்



ஆசிரியர்களுக்கு "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது" வழங்கப்பட்டது.

### 8.3.2. ஊரக கண்டுபிடிப்பாளர் விருது

சமுதாயத்தின் நலனுக்காக குறைந்த செலவிலான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கிராமப்புற மக்களால் உள்நாட்டு கண்டுபிடிப்புகள் உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இரண்டு கண்டுபிடிப்பாளர்கள் அடையாளம் காணப்பட்டு கிராமிய கண்டுபிடிப்பாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறார்கள்.

## 8.4. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை பிரபலப்படுத்துதல்

### 8.4.1. பள்ளி மாணவர்களுக்கு அறிவியல் அடிப்படையிலான நிகழ்ச்சிகள்

அறிவியல் நகரம், சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள அரசுப் பள்ளிகளுக்கு அறிவியல் அடிப்படையிலான நிகழ்ச்சிகளை அந்தந்த பள்ளி வளாகத்திலேயே ஏற்பாடு செய்கிறது.

இந்நிகழ்ச்சிகளில் அறிவியல் விரிவுரைகள் மற்றும் அறிவியல் சார்ந்த செய்முறை விளக்கங்களும் அடங்கும். செப்டம்பர் – அக்டோபர் 2023–இல் ஏற்பாடு செய்யப்பட்ட "வெப்பம் மற்றும் வெப்ப இயக்கவியல் மற்றும் கணக்கீடுகளை தீர்வுகாணல்" மற்றும் "அன்றாட வாழ்வில் காந்தவியல் மற்றும் காந்தங்களின் பயன்பாடுகளை பற்றிய அடிப்படைக் கருத்துக்கள்" ஆகிய நிகழ்ச்சிகளில் அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 250 மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

### 8.4.2. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் கருத்தரங்குகள்

அறிவியல் நகரம், சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் நலனுக்காக, இயற்பியல், வேதியியல், உயிர் அறிவியல், உயிரி தொழில்நுட்பம், அதிநுண் அறிவியல் மற்றும் அதிநுண் தொழில்நுட்பம் மற்றும் நீர்வள



மேலாண்மை போன்ற பல்வேறு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறைகளில் கருத்தரங்குகளை நடத்துகிறது. மரபணு பொறியியல், ஸ்டெம் செல், தகவல் தொழில்நுட்பம் போன்ற முன்னோடி தொழில்நுட்பங்கள் பற்றிய தலைப்புகளிலும் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அறிவியல் நகரம் நடத்திய பல்வேறு கருத்தரங்குகளில் சுமார் 1,050 மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

### 8.4.3. ஆய்வகத் தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி முகாம்

அறிவியல் நகரம், சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மற்றும் அதை சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு "ஆய்வக நுட்பங்கள்" குறித்த பயிற்சி பட்டறைகள் நடத்துகிறது. 2023–ஆம் ஆண்டில் அறிவியல் நகரத்தால் நடத்தப்பட்ட பயிற்சி

பட்டறைகளில் 402 மாணவர்கள் / விவசாயிகள் பயனடைந்தனர்.

## 8.5. கோடைக்கால பயிற்சி முகாம்

அறிவியல் நகரம், இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் கணிதம் போன்ற அடிப்படை அறிவியல் துறைகளில் 21 நாட்கள் கோடைகால பயிற்சி முகாம்கள் நடத்துகிறது. 75 விழுக்காடு பங்கேற்பாளர்கள் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் முதுகலை பயிலும் மாணவர்களில் இருந்து தேர்வு செய்யப்படுகின்றனர். மே–ஜூன் 2023 மாதங்களில் இணையவழி முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட கோடைக்காலப் பயிற்சித் திட்டங்களால் 150 முதுகலை மாணவர்கள் பயனடைந்தனர்.

## 8.6. சென்னை அறிவியல் விழா

அறிவியல் நகரம், பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே அறிவியல் தாக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஆண்டுதோறும் அறிவியல்



விழாவை நடத்தி வருகிறது. இவ்விழாவினில் பிரம்மாண்ட அறிவியல் கண்காட்சி, குழு விவாதம், பிரபல விரிவுரை, செயல்முறை விளக்கம், அறிவியல் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்த பொம்மலாட்டம் போன்ற அறிவியல் பொழுது போக்கு மற்றும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான வினாடி வினா, கட்டுரை, பேச்சு, ஓவியம் போன்ற போட்டிகள் ஆகியவை அடங்கும்.

பிப்ரவரி–மார்ச், 2023–இல் ஏற்பாடு செய்யப்பட்ட சென்னை அறிவியல் விழாவில், இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம் (DAE). அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக் கழகத்தின் துறைகள், இந்திய மருத்துவ இயக்குநரகத்தின் அனைத்துப் பிரிவுகள், தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம் போன்றவை, பார்வையாளர்களுக்கு கல்வி கற்பதற்காக, கண்காட்சி கூடங்களை பார்வைக்கு வைத்தனர். பிப்ரவரி 28 முதல் மார்ச் 1,

2023 வரை ஏற்பாடு செய்யப்பட்ட சென்னை அறிவியல் விழாவில் சுமார் 10,000 பேர் பயனடைந்தனர்.



## 9. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

9.1. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது 1983–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அறிவியல் கருத்துக்களைக் கற்றுணர்ந்த சமுதாயத்தை கட்டமைக்க அறிவியல் மையங்கள் இன்றியமையாதவை. அறிவியல் தொழில்நுட்பக் கோட்பாடுகளையும் அன்றாட வாழ்வில் அவற்றின் செயலாற்றல்களையும் பற்றி விவரிக்க, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் அறிவியல் மையங்களை நிறுவியுள்ளது. தமிழக மக்களுக்கு அறிவியல் கருத்துக்களின்மீது நெருக்கத்தை உண்டாக்க அறிவியல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை இம்மையம் அவ்வப்போது தொடர்ந்து நடத்துகிறது.

சென்னையில் பி.எம்.பிர்லா கோளரங்கத்துடன் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தையும், திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையம் மற்றும் கோளரங்கத்தையும், வேலூரில் டாக்டர்

கலைஞர் கருணாநிதி மாவட்ட அறிவியல் மையத்தையும் கோயம்புத்தூரில் மண்டல அறிவியல் மையத்தையும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் நிறுவியுள்ளது. சென்னையிலும், திருச்சிராப்பள்ளியிலுமுள்ள கோளரங்கங்கள் வானவியல் கற்பிப்பதில் ஈடுபட்டுள்ளன.

9.2. அறிவியல் ஆர்வம் கொண்ட சமுதாயத்தை தோற்றுவிக்க வேண்டும் என்ற உன்னதமான தொலைநோக்குணர்வுடன் தமிழ்நாட்டின் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 1990 செப்டம்பர் 17–ஆம் நாள் சென்னை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தையும், 1999 ஜூன் 10–ஆம் நாள் திருச்சிராப்பள்ளி – அண்ணா அறிவியல் மையம் மற்றும் கோளரங்கத்தையும் துவக்கி வைத்தார்கள். 2011 ஜனவரி 25–ஆம் நாள் தமிழ்நாட்டின் மாண்புமிகு முன்னாள் துணை முதலமைச்சர் அவர்கள் வேலூர் டாக்டர் கலைஞர் கருணாநிதி



மாவட்ட அறிவியல் மையத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார்கள். 2013 மே 6–ஆம் நாள் கோயம்புத்தூர் மண்டல அறிவியல் மையம் துவக்கி வைக்கப்பட்டது.

**9.3. செயல்பாடுகள்**

- ❖ அறிவியல் மையங்கள், அறிவியல் காட்சிக்கூடங்கள், கோளரங்கங்கள் ஆகியவற்றை நிறுவுதல், அறிவியல் காட்சிப்பொருட்களை வடிவமைத்து உருவாக்க ஆய்வுகள் மேற்கொள்ளுதல் மற்றும் மாநிலம் தழுவிய அறிவியல் பரப்புரை நிகழ்ச்சிகளை நடத்துதல் ஆகிய பணிகளில் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது ஈடுபட்டுள்ளது.

- ❖ நவீன கால தொழில்நுட்பத்திற்கு ஏற்ப புதிய உயர் தொழில்நுட்பம் கொண்ட ஒன்றிணைந்த எண்ணிலக்கக் கோளரங்கம் புதிய அரைக்

கோள விதானத்துடன் பி.எம்.பிர்லா கோளரங்கத்தில் பயன்படுத்தப்படுகிறது. இங்கு, புதிய தலைமுறை இயந்திர ஒளிப்பட கருவிகளுடன் நவீன எண்ணிலக்க திரைப்படக் கருவிகள் இணைந்து துல்லியமான வண்ணப் படங்களை திரையிடுகின்றன. இவற்றின் மூலம் கோளரங்கத்தில் விண்மீன்களின் நிகழ்நிலை தோற்ற நகர்வு, விண்வெளிப்பயணம், கோள்கள், வாயுத்திரள்கள், அண்டங்கள் மற்றும் பல்வேறு விதமான வானவியல் படங்களைத் திரையிட முடிகிறது.

❖ "கோளத்தில் அறிவியல்" என்பது அமெரிக்க தேசிய கடலாய்வு மற்றும் வளிமண்டல நிறுவனம் உருவாக்கிய கோள வடிவ திரையீடு கருவியாகும். ஆச்சரியத்தை உண்டாக்கக் கூடிய உயர் தொழில்நுட்பமான இதனை கணிப்பொறிகள், ஒளிப்படக் கருவிகள்



போன்றவற்றின் மூலம் 6 அடி விட்டம் கொண்ட கோளத்தில் வளிமண்டலம், கடலாய்வு மற்றும் பூமியைப் பற்றிய நிகழ்நிலை படக்காட்சிகளை திரையிட முடியும். பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைந்துள்ள இந்த 'கோளத்தில் அறிவியல்' எனும் கருவியின் மூலம் மிகவும் சிக்கலான சுற்றுச்சூழல் நிகழ்வுகள், வரும் பார்வையாளர்களுக்கு செயல்வகைக் கல்வியாக விளக்கப்படுகிறது.

❖ 2023–24–ஆம் ஆண்டில் 6,22,000–க்கும் மேற்பட்ட பொதுமக்கள், பெரும்பாலும் மாணவர்கள், அறிவியல் மையங்களின் அறிவியல் காட்சிக்கூடங்களுக்கும், அறிவியல் பூங்காக்களுக்கும் மற்றும் கோளரங்கங்களுக்கும் வருகை புரிந்து பயன்பெற்றனர்.

- ❖ நடமாடும் அறிவியல் கண்காட்சி, சொற்பொழிவுகள், அறிவியல் செயல்முறை விளக்கங்கள், பயிற்சி மற்றும் பயிற்சிப்பட்டறைகள், நூல் வெளியீடுகள் ஆகியவற்றின் வாயிலாக அறிவியல் கருத்துக்களை பொதுமக்களுக்கு கொண்டு செல்லவும் அவர்களுக்குக் கற்பிக்கவும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் இடைவிடா முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.
- ❖ குறுகிய கால பயிற்சிகள், வானவியல் முகாம்கள், வினாடி வினா போட்டிகள் ஆகியவை அவ்வப்போது நடத்தப்பட்டு ஆண்டுதோறும் பல ஆயிரம் மாணவர்களும் பொதுமக்களும் பயன் பெறுகின்றனர்.
- ❖ தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது அறிவியல் பூங்கா காட்சிப்பொருட்கள் பலவற்றை உருவாக்கி



தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களில் அறிவியல் பூங்காக்களை நிறுவியுள்ளது.

- ❖ இரவு வானைத் தொலைநோக்கிகள் வழியே பொதுமக்கள் காண்பதற்கு தொடர் நிகழ்வாகவும் அரிய வானவியல் நேர்வுகளின் போது சிறப்பு நிகழ்வாகவும் வான் கூர்நோக்கு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இவை பொதுமக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

**9.4. சாதனைகள்**

**9.4.1. திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மைய கோளரங்கத்தை புதுப்பித்தல்.**

அண்ணா அறிவியல் மையம் – கோளரங்கம் 1999–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. கோளரங்கத்தில் வான்பொருட்களின் படங்களைத் தெளிவாகக் காண்பிப்பதற்கும், வானவியல் நிகழ்வுகளின் இயங்குபடங்களை பொதுமக்களுக்குக்

காண்பிக்கும் வகையிலும் எண்ணிலக்க ஒளிப்படக் கருவி அமைப்புடன் அண்ணா அறிவியல் மையம்–கோளரங்கம் ரூ.3.00 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டது. இந்த எண்ணிலக்கக் கோளரங்கமானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14.08.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**9.4.2. திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையத்தில் "மாதிரி அணுக்கரு காட்சிக்கூடம்" அமைத்தல்**

அணுசக்தியின் பல்வேறு சாதகமான அம்சங்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் மற்றும் எளிமையாக கற்பிக்கும் வகையில், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் இந்திய அணுமின் கழகத்துடன் இணைந்து திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையத்தில் "மாதிரி அணுக்கரு காட்சிக்கூடம்" அமைக்கப்பட்டு, 21.12.2023 அன்று பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டது.



**9.4.3. வேலூர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட அறிவியல் மையத்தில் "மாதிரி அணுக்கரு காட்சிக்கூடம்" அமைத்தல்**

அணுசக்தியின் பல்வேறு சாதகமான அம்சங்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் மற்றும் எளிமையாக கற்பிக்கும் வகையில், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் இந்திய அணுமின் கழகத்துடன் இணைந்து வேலூர் டாக்டர். கலைஞர் கருணாநிதி மாவட்ட அறிவியல் மையத்தில் "மாதிரி அணுக்கரு காட்சிக்கூடம்" அமைக்கப்பட்டு, 22.12.2023 அன்று பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டது.

## 9.5. மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகள்

### 9.5.1. பள்ளி மாணவர்களுக்கான தொழில்நுட்பப் பயிற்சி

மாணவர்கள் அறிவியல் தொழில்நுட்பக் கருத்துக்களை மேற்கொள்ள ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், புத்தாக்க மையங்களை சுமார் ரூ.1.80 கோடி செலவில் கோயம்புத்தூர் மண்டல அறிவியல் மையத்திலும் மற்றும் ரூ.1.50 கோடி செலவில் திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையத்திலும் நிறுவியுள்ளது. புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடிக்க உதவும் வண்ணம் இங்கு பலதரப்பட்ட அறிவியல் கருவிகளும், ஆய்வகக் கருவிகளும், கணினிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இப்புத்தாக்க மையத்தில் மாணவர்களுக்கான 9 மாத STEM Robotics Camp நடத்தப்பட்டது. இதில் குறியீடுகள், 3D அச்சடித்தல், ரோபோடிக்ஸ், டிரோன்ஸ் மற்றும் மின்னணுவியல் வகுப்புகள்



நடைப்பெற்றன. இதில் 120 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, 3 மாத உயர்நிலைப் பயிற்சி வகுப்புகள் இந்த ஆண்டில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 9.5.2. மானக் புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுத் திட்டம்

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், இந்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறை மற்றும் தேசிய புத்தாக்க ஆய்வு நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து தமிழகத்தில் பள்ளிக் கல்வித்துறை உதவியுடன், 2009–ஆம் ஆண்டு முதல் மானக் புத்தாக்க ஆய்வு உதவித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அறிவியல் ஆய்வுகளில் பள்ளி மாணவர்கள் ஈடுபட ஊக்கப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு மாணவருக்கும் அவருடைய அறிவியல் கண்டுபிடிப்பு மாதிரிகளை வடிவமைக்கவும், போட்டிகளில் கலந்துகொள்ளவும்

ரூ.10,000/-, மாணவர்களின் வங்கிக் கணக்கில் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 14 ஆண்டுகளில் தமிழகத்தில் இருந்து 83,987 மாணவர்களுக்கு ரூ.47.77 கோடி மதிப்பிலான விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய அளவிலான புத்தாக்க அறிவியல் ஆய்வு விருது 2023 அக்டோபர் மாதம் புதுதில்லியில் நடைப்பெற்றது. இந்தியா முழுவதிலுமிருந்து 441 மாணவர்கள் இப்போட்டியில் பங்கேற்றனர். போட்டியின் முடிவில் அனைத்து நடுவர்களாலும் சிறந்த 60 காட்சிப்பொருட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது. இவற்றில், தமிழ்நாட்டிலிருந்து பங்கேற்ற 13 காட்சிப்பொருட்களில் 3 காட்சிப்பொருட்கள் சிறந்தவையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மாணவர்கள் சான்றிதழ்கள் மற்றும் நினைவுப்பரிசுகளைப் பெற்றனர்.



### 9.5.3. சகுரா மாணவர் பரிமாற்றத் திட்டம்

ஜப்பானிய அரசின் அழைப்பின்படி, சகுரா மாணவர் பரிமாற்ற திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் புதுதில்லியில் நடக்கும் தேசிய அளவிலான புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுகளைப் பெற்ற மாணவர்கள் ஜப்பான் நாட்டு அறிவியல் ஆய்வுக்கூடங்களை சுற்றிப்பார்க்க அழைத்துச் செல்லப்படுவர். இதுவரை இந்த மாணவர் பரிமாற்ற திட்டத்தின் கீழ், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய உதவியுடன் தமிழ்நாட்டிலிருந்து 16 மாணவர்கள் ஜப்பான் நாட்டிற்கு சென்று வந்துள்ளனர்.

இந்த மாணவர் பரிமாற்ற திட்டத்தின் கீழ், 2022-ஆம் ஆண்டு நடைப்பெற்ற தேசிய அளவிலான புத்தாக்க ஆய்வு விருது கண்காட்சியில் சேலம் மாவட்டம் வாழப்பாடி தாலுக்காவில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலை பள்ளியில் பயிலும் ஒரு மாணவி தேர்ந்தெடுக்கப்பட்டு, 2023-ஆம் ஆண்டு

நவம்பர் மாதம் ஜப்பான் நாட்டு அறிவியல் ஆய்வுக்கூடங்களை சுற்றிப் பார்த்துவிட்டு வந்துள்ளார்.



## 10. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

10.1. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம், 1984–ஆம் ஆண்டு தமிழக அரசால் ஒரு தன்னாட்சி பெற்ற தலைமை நிறுவனமாக உருவாக்கப்பட்டு, மாநிலத்தின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு இயங்கி வருகிறது. இதற்காக, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, மனிதவள மேம்பாடு மற்றும் களப்பணிகள் சார்ந்த பல அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

10.2. இம்மன்றம் பல்துறைசார் மக்களுக்கு நன்மையளிக்கும் வகையில் பயனுள்ள அறிவியல் தொழில்நுட்பத் திட்டங்களை செயல்படுத்தி, அதன் மூலம் அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி, வளர்ச்சி, பயிற்சியளிக்கப்பட்ட மனிதவள மேம்பாடு, தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் விளக்கம், அறிவியல் பரவலாக்கம் மற்றும் அறிவுசார் சொத்துரிமைகளைப்

பாதுகாத்தல் போன்றவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது.

### 10.3. மாநில அரசின் உதவியோடு செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

#### 10.3.1. மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் இலக்கு, மாணவர்களிடையே இருக்கும் அபரிமிதமான திறமைகளை அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு பயன்படுத்துவதாகும். இத்திட்டத்தின் கீழ் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் இறுதியாண்டில் பயின்றுவரும் பொறியியல் மாணவர்களுக்கும் மற்றும் மருத்துவயியல், வேளாண்மையியல், உயிரியல், சுற்றுச் சூழலியல், இயற்பியல், கால்நடை மருத்துவயியல் மற்றும் சமூகவியல், போன்ற துறைகளில் முதுநிலை பட்டப்படிப்பில் இறுதியாண்டில் பயின்றுவரும் மாணவர்களுக்கும் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு



அதிகபட்சமாக ரூ.10,000/- வரை நிதி உதவி வழங்கப்படுகிறது.

#### 10.3.2. அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுத் திட்டங்கள்

வேளாண்மை, உயிரியல், வேதியியல், மருத்துவம், சுற்றுச்சூழல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், இயற்பியல், சமூகம் மற்றும் கால்நடை அறிவியல் போன்ற முக்கியத் துறைகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக இத்திட்டத்தின் கீழ் ரூ.3.00 இலட்சம் முதல் ரூ.5.00 இலட்சம் வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. நமது மாநிலத்திற்கு நன்மை பயக்கும் மற்றும் சமூக முக்கியத்துவம் வாய்ந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. 2023-24-ஆம் ஆண்டில், 15-20 திட்டங்கள் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**10.3.3. இளம் மாணவ அறிவியலறிஞர்கள் செயல் திட்டம்**

இந்தத் திட்டம் பள்ளி மாணவர்களை எதிர்காலத்தில் அறிவியல் ஆராய்ச்சியை மேற்கொள்ளத் தூண்டுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 9–ஆம் வகுப்பு படிக்கும் 40 மாணவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர். பல்வேறு மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் ஆராய்ச்சி வசதிகளுடன் கூடிய புகழ்பெற்ற கல்லூரி / பல்கலைக்கழகத்தில் தங்க வைக்கப்பட்டு பயிற்சியளிக்கப்படுகின்றனர். 2023–24–ஆம் ஆண்டில் 720 பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில், 18 மாவட்டங்களை உள்ளடக்கிய 9 மையங்களில் இத்திட்டத்தை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



**10.3.4. இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல்**

நமது மாநிலத்தைச் சார்ந்த 40 வயதுக்குட்பட்ட இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அறிவியலாளர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொழில்நுட்பங்களின் நுணுக்கங்களை நன்கு கற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, மாதந்தோறும் ரூ.10,000/– இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும். இதற்காக ஒரு முதுநிலை அறிவியலறிஞருடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்யவும், அதிநவீன கருவிகளின் செயல்முறை தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்ளவும் இத்திட்டத்தின் வாயிலாக ஊக்கப்படுத்தப்படுகிறது.

**10.3.5. கருத்தரங்கு, அறிவியல் மாநாடு மற்றும் பயிற்சி பட்டறை நடத்துவதற்கு பகுதி நிதியுதவி அளித்தல்**

இத்திட்டம் நமது மாநிலத்திலுள்ள கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அறிவியல் ஆய்வு குறித்து பரிமாற்றங்கள் செய்யவும்,

கலந்துரையாடவும், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்தவும் பகுதி நிதியுதவி வழங்க வழிவகை செய்கிறது. 2023–24–ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சம் செலவில் சுமார் 9,500 ஆய்வாளர்கள் பயனுறும் வகையில் 125 நிகழ்வுகளுக்கு நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**10.3.6. அறிவியல் தொழில்நுட்பத்தைப் பரப்புதல்**

அறிவியல் தொழில்நுட்பத்தைப் பரப்புதல் திட்டம் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், அரசு சாரா தன்னார்வ அமைப்புகள் வாயிலாக மாநிலம் முழுவதும் நடத்தப்படுவதாகும். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 40 முதல் 50 நிறுவனங்களுக்கு நிதியுதவியளிக்கப்படுகிறது. பள்ளி மாணவர்கள், விவசாயிகள், சுயவுதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் இதன் பயனாளிகளாவர். சுமார் 5,000 நபர்கள் நேரிடையாகவே பயனடைகின்றனர்.



**10.3.7. இளம் அறிவியலறிஞர்களுக்கு பயணநிதியுதவி அளித்தல்**

இத்திட்டம் இளம் அறிவியலறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள ஆசிரியர்கள் தற்போதைய அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ள வசதியாகவும் தங்களது கண்டுபிடிப்புகளை பகிர்ந்து கொள்ளவும், தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்குகளில் பங்கேற்றிட பயண நிதியுதவி அளிக்கிறது. இதன்படி 40 வயதுக்குட்பட்டோருக்கு பன்னாட்டு மாநாடுகளில் கலந்து கொள்வதற்கு தேவையான விமான பயணத்தொகையில் 50 விழுக்காடு வரை நிதி உதவியும் மற்றும் அத்தகைய தேசிய அளவிலான மாநாடுகளில் பங்கு கொள்வதற்கு 100 விழுக்காடு இரயில் பயணக்கட்டணமும் (அதிகபட்சம் ரூ.30,000/–) நிதி தவியாக வழங்கப்படுகிறது. 2023–24–ஆம் ஆண்டில் 5 ஆராய்ச்சியாளர்கள்

மற்றும் ஆசிரியர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### 10.3.8. அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி அளித்தல்

(அ) மாணாக்கர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் தமிழில் அறிவியல் வெளியீடுகளை வெளிக்கொணரும் நிறுவனங்கள், (ஆ) தமிழில் அறிவியல் நூல்களை வெளிக்கொணரும் அறிவியலறிஞர்கள் மற்றும் ஆசிரியர்கள் போன்றோருக்கு பகுதி நிதியுதவி வழங்கப்படுகிறது.

### 10.3.9. தமிழக அறிவியலறிஞர்கள் விருது

தமது துறை சார்ந்த ஆய்வுப்பணியில் மிகச்சிறந்த பங்களிப்பை வழங்கும் ஆராய்ச்சியாளர்கள் தமிழக அறிவியலறிஞர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டு ரூ.50,000/- ரொக்கமும், சான்றிதழும் வழங்கி



கௌரவிக்கப்படுகிறார்கள். 1) வேளாண்மை 2) உயிரியல் 3) வேதியியல் 4) பொறியியல் தொழில்நுட்பம் 5) சுற்றுப்புறச்சூழலியல் 6) மருத்துவம் 7) கணிதவியல் 8) இயற்பியல் 9) சமூகவியல் 10) கால்நடை மருத்துவயியல் போன்ற 10 துறைகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன.

### 10.3.10. புதுமையாக்கம் மற்றும் பொருள் உருவாக்கம்

இத்திட்டத்தின் நோக்கம் படைப்புகள் மற்றும் புதுமையான யோசனைகள் போன்றவற்றை மாணவர்கள் மற்றும் சமுதாயத்தின் மற்ற கண்டுபிடிப்பாளர்களை ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றம், முறையான கல்வி மற்றும் தொழில்துறை நிறுவனங்களுடன் இணைத்தல் ஆகும். மேலும், கண்டுபிடிப்பாளர்களின் மத்தியில் புதுமையான யோசனைகள், முறைகள் மற்றும் தயாரிப்பு மேம்பாடு ஆகியவற்றை கண்டறிவது. 2023-24-ஆம் ஆண்டில் 10 முதல் 15

புதுமைகளுக்கு உதவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**10.3.11. கிராமப்புற பள்ளிகளில் அறிவியல் கல்வியின் தரத்தை உயர்த்துதல்**

தற்போதைய பாடத்திட்டம் மற்றும் புதிய பகுதிகள் பற்றிய அறிவை மேம்படுத்த, ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை அறிவியல் பாடங்களைக் கையாளும் அரசுப்பள்ளி அறிவியல் ஆசிரியர்களுக்கு தர மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படுகிறது. இத்திட்டம் தற்போதைய அறிவியல் பாடத்திட்டம் மற்றும் செய்முறையை உள்ளடக்கி ஐந்து நாட்களுக்கு நடத்தப்படுகிறது. 2023–24–ஆம் ஆண்டில் 10 மாவட்டங்களில் 500 ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



**10.3.12. புதுமைத் தொழில்நுட்பமும் பரவலாக்கமும்**

வேலைவாய்ப்புகளை மேம்படுத்த பயனுள்ள புதுமையான தொழில்நுட்பங்கள் கல்வியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளால் பயிற்சி திட்டங்கள் மற்றும் பட்டறைகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 2023–24–ஆம் ஆண்டில் சுமார் 900 விவசாயிகள், சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், பெண்கள் மற்றும் பிற மக்களுக்கு உதவும் வகையில் 18 பயிற்சித் திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**10.3.13. தொழில்துறைக்கான அறிவியல் மற்றம் தொழில்நுட்ப திறன் வளர்த்தல்**

இறுதியாண்டு பயிலும் பொறியியல் மற்றும் பட்டய மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கும், தொழில்முனைவோர்களாகவும் மற்றும் சிறு தொழில் தொடங்குவதற்கும் இத்திட்டம் உதவுகிறது. மேலும் மாணவ சமுதாயம் தொழில்துறைக்கேற்ற திறமைகளை மேம்படுத்திடவும் பயிற்சியையும்

ஊக்கமும் அளிக்கிறது. 2023–24–ஆம் ஆண்டில் 15 மாவட்டங்களில் ரூ.22.50 இலட்சம் செலவில் 4,500 மாணவர்கள் பயனடையும் வகையில் தொழில்துறையினர் கல்லுரிகளுடன் இணைந்து பயிற்சியளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**10.3.14. கல்லூரிகளின் ஆய்வு மாணவர்களுக்கான அறிவியல் ஆய்வு நிதியுதவி பற்றாக்குறையை களையும் திட்டம்**

தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் அறிவியல் தொடர்பான முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் ஆய்வாளர்களுக்கு நிதி பற்றாக்குறையை களையும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கல்லூரி ஆய்வு மாணவர்களிடமிருந்து ஆய்வுத்திட்டங்கள் பெறப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2023–24–ஆம் ஆண்டில், 10 ஆய்வு மாணவர்களுக்கு ரூ.30.00 இலட்சம் செலவில் நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



**10.3.15. அரசு கல்லூரிகளின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வு கட்டமைப்பை மேம்படுத்துதல்**

"அரசு கல்லூரிகளின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வு கட்டமைப்பை மேம்படுத்துதல்" என்ற திட்டம் அறிவியல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பை வழங்குவதன் மூலம் புதிய மற்றும் வளர்ந்து வரும் பகுதிகளில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி செயல்பாடுகளை மேம்படுத்துவதையும், அரசு கல்லூரிகளில் திறமைகளை ஈர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது, இதனால் ஆராய்ச்சி வெளியீடு குறிப்பாக அதன் தரத்தின் அடிப்படையில் மேம்படும். 2023–24–ஆம் ஆண்டில் 3 அரசுக் கலைக் கல்லூரிகளில் ஆய்வுக் கட்டமைப்புகளை ரூ.15.00 இலட்சம் செலவில் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 10.4. மத்திய அரசின் உதவியோடு செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 10.4.1. காப்புரிமை தகவல் மையம்

மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், பேராசிரியர்கள், அறிவியலறிஞர்கள், தொழில் முனைவோர் மற்றும் புதுமைப் படைப்பாளர்கள் ஆகியோர் பயனடையும் விதமாக, நமது மாநில மன்றத்தில் காப்புரிமை தகவல் மையம் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் நிதியுதவியுடன் செயல்பட்டு வருகிறது. இந்த மையமானது, அறிவுசார் சொத்தினை பாதுகாப்பது தொடர்பான உதவிகளை வழங்கி வருகிறது. அறிவுசார் சொத்துரிமை பாதுகாப்பை ஊக்குவிக்கவும், எளிதாக்கவும், பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் 40 அறிவுசார் சொத்துரிமை பிரிவுகளை இம்மையம் நிறுவியுள்ளது. 2023–24–ஆம் நிதியாண்டில் 19 அறிவு சார் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் 39 பயிற்சி



பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், காப்புரிமை தகவல் மையமானது 139 காப்புரிமைகள், 48 தொழில்துறை வடிவமைப்புகள், மற்றும் 8 பதிப்புரிமைகள் பெறுவதற்கான உதவிகளை பல்வேறு நிலைகளில் உள்ள மக்களுக்கு வழங்கியுள்ளது. திருநெல்வேலி மாவட்ட பனைமரப் பொருட்கள் கூட்டுறவு கூட்டமைப்பு மற்றும் அன்னை தெரசா பல்கலைக்கழகத்துடன் இணைந்து காப்புரிமை தகவல் மையத்தால் தாக்கல் செய்யப்பட்ட "உடன்குடி பனங்கருப்பட்டி" புவிசார் குறியீடாக பதிவு செய்யப்பட்டுள்ளது. புவிசார் குறியீடு தொடர்பான நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, ஜவ்வாது புளி உற்பத்தியாளர்களின் நலன்களைப் பாதுகாக்க, ஜவ்வாது மலைவாழ் மக்கள் மேம்பாட்டு சங்கம், திருப்பத்தூரிலுள்ள தூய நெஞ்சகக் கல்லூரி மற்றும் காப்புரிமை தகவல் மையமும் இணைந்து "ஜவ்வாது புளி" யை புவிசார் குறியீடாக பதிவு

செய்வதற்கான விண்ணப்பத்தை (எண்: 1141 நாள் 11.09.2023) சமர்ப்பித்துள்ளது.

இந்திய அரசின் வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தால் வழங்கப்படும் **"காப்புரிமை தகவல் மையத்திற்கான சிறப்பு விருது"** பிரிவின் கீழ் "தேசிய அறிவுசார் சொத்துரிமை விருது–2023" நமது காப்புரிமை தகவல் மையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.



## 11. தமிழ்நாடு மாநில உருது கழகம்

**11.1.** மாநிலத்தில் உருது மொழியை வளர்ப்பதற்கு தமிழ்நாடு மாநில உருது கழகம் தமிழ்நாடு அரசால் 2000–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தமிழ்நாட்டில் உருது மொழியினையும் உருது இலக்கியத்தையும் பிரபலப்படுத்துவதும் உருது ஆராய்ச்சி மாணாக்கர்கள், கவிஞர்கள் மற்றும் உருது மொழி படிக்கும் மாணாக்கர்களை ஊக்குவிப்பதும் தமிழ்நாடு மாநில உருது கழகத்தின் முக்கிய பணிகளாகும்.

**11.2.** சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து உருது மாணாக்கர்கள், கவிஞர்கள், ஆராய்ச்சி மாணாக்கர்கள் ஆகியோரை ஊக்குவிப்பதற்காக விழாக்கள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றை தமிழ்நாடு மாநில உருது கழகம் நடத்தியுள்ளது. அவர்களுக்கு சான்றிதழ்கள், பரிசுகள் மற்றும் பாராட்டு பதக்கங்கள் வழங்கப்பட்டன.

11.3. தமிழ்நாடு மாநில உருது கழகம், குடியரசு மற்றும் சுதந்திர தின விழாக்களில் கவிதை கருத்தரங்கங்கள் (Mushaires) நடத்தியது. உருது மொழியில் சிறந்து விளங்கும் கவிஞர்கள் மற்றும் அறிஞர்கள் அழைக்கப்பட்டு அவர்களது செயல்திறன்களுக்காக விருதுகள் வழங்கப்பட்டன.

11.4. 11–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கான புத்தகங்கள் ஆங்கிலத்திலிருந்து உருது மொழியில் மொழிபெயர்க்க இக்கழகம் உதவியுள்ளது.



## 12. தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்

12.1. தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சியினை முன்னோக்குத் திட்டத்துடன் கண்காணிப்பதற்கு தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டம், 2010, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 17.06.2010 அன்று நிறைவேற்றப்பட்டு உருவாக்கப்பட்டது.

12.2. ஒருங்கிணைந்த உற்பத்தி வளர்ச்சியில் "அடிப்படைத் திறன்" எனும் "பயிற்றுநர்களுக்கான பயிற்சி" பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது.

12.3. ஆங்கில மொழி போதனையில் பிற மொழிச் சொல் பயன்பாடு முறைமைகளில் இன்றைய வளர்ச்சி" குறித்து கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழக பேராசிரியர்களைக் கொண்டு பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

12.4. "மின் வாகன தொழில்நுட்பம்" மற்றும் "மின் வாகனக் கொள்கை" எனும் தலைப்பில் இணைய தளம் வழியாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கு பட்டறை நடத்தப்பட உள்ளது.

12.5. பலவகை தொழில்நுட்பக் கல்வியின் பாடதிட்டத்தை மறுசீரமைக்க பகுதி நிதி உதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.



## 13. தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம்

13.1. தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகமானது (Tamil Nadu Unmanned Aerial Vehicles Corporation) தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் ட்ரோன் அடிப்படையிலான தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அண்ணா பல்கலைக்கழகத்தின் சென்னை தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து நிறுவப்பட்ட கழகமாகும். பல்வேறு துறைகளான, சட்ட அமலாக்கம், சுரங்கம், வருவாய் மற்றும் நகராட்சி நிர்வாகம், நகர்ப்புற மேம்பாடு, நீர் மேலாண்மை, விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகள், பேரிடர் மேலாண்மை, சுகாதாரம், வனவியல், தொல்லியல், சுற்றுச்சூழல் ஆய்வுகள் போன்றவற்றை இது உள்ளடக்கும். தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் நூறு விழுக்காடு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக, நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து வகையான ட்ரோன்களை வடிவமைத்தல், உற்பத்தி

செய்தல் மற்றும் வர்த்தகம் செய்வதைத் தவிர விவசாய பூச்சிக்கொல்லி தெளித்தல், கண்காணிப்பு, வரைபடம் உருவாக்குதல், தேடல் மற்றும் மீட்பு, அளவீட்டு பகுப்பாய்வு போன்ற சேவைகளையும் இக்கழகம் பல்வேறு துறைகளுக்கு வழங்கும். பல்வேறு நிறுவனங்களுக்கு இக்கழகத்தால் வழங்கப்படும் தீர்வுகள்/சேவை மற்றும் தயாரிப்புகள் மாநிலத்தில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

13.2. 2023–ஆம் ஆண்டில், தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம், தமிழ்நாடு மாநில ஈரநில ஆணையத் துறைக்கு ட்ரோன் RGB மற்றும் LiDAR தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பள்ளிக்கரணை சதுப்பு நிலக் காடுகளை வரைபடமாக்குதலை செய்து முடித்தது, பூச்சிக்கொல்லி தெளிக்கும் நடவடிக்கைக்காக சென்னை மாநகராட்சிக்கு 6 ட்ரோன் விமானிகளை வழங்கியது, கடலோர பாதுகாப்பு குழுவிற்கு ஒரு டெலிவரி ட்ரோன் வழங்கப்பட்டது. சென்னை



ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையத்திற்கு (Chennai Unified Metropolitan Transport Authority (CUMTA)) முன்னோடி ஆய்வாக அண்ணா நகர் பகுதியின் வரைபடமாக்குதல் பணியினை செய்து முடித்துள்ளது. புவியியல் மற்றும் சுரங்கத் துறையிலிருந்து சுரங்க ஆரம்ப ஆய்வாக வரைபடமாக்குதல் பணிக்காக சுரங்க ஆய்வு நிறுவனம் சமர்ப்பித்த, வழங்கக்கூடியவைகளை தரவு ஆய்வு செய்து முடித்துள்ளது.

13.3. தற்போது, புவியியல் மற்றும் சுரங்கத் துறையிலிருந்து சுரங்க வரைபடமாக்குதல் பணிக்காக சுரங்க ஆய்வு நிறுவனம் சமர்ப்பித்த வழங்கக்கூடியவைகளை தரவு ஆய்வு செய்து வருகின்றது, தமிழ்நாடு அரசு வனத்துறைக்கு நடமாடும் கட்டளைக் கட்டுப்பாட்டு நிலையம் வழங்குதல் மற்றும் மகாபலிபுரம் பகுதியின் வரைபடத்தை சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையத்திற்கு முன்னோடி

ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கிடையில், தமிழ்நாட்டில் ட்ரோன் RGB மற்றும் LiDAR தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட 12 ராம்சார் தளங்களை வரைபடமாக்குவதற்கும், தமிழ்நாடு கடலோர பாதுகாப்புக் குழுவிற்கு டெலிவரி மற்றும் கண்காணிப்பு ட்ரோன்களை வழங்குவதற்கும், சிறப்புப் படைக்கு ஆளில்லா வான்வழி வாகனம் வழங்குவதற்கும் தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**முனைவர் க. பொன்முடி**
உயர்கல்வித் துறை அமைச்சர்



**தொழில்நுட்பக் கல்வி**

**2023–24–ஆம் கல்வியாண்டில் பொறியியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பி.ஈ. / பி.டெக். / பி.ஆர்க். மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்**

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | சேர்க்கை விவரம் | | | | | | | | | | | | | | | | மொத்த சேர்க்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொது | | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (மற்றவர்) | | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) | | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் | | ஆதிதிராவிடர் | | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | | பழங்குடியினர் | | மொத்தம் | | |
| | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசு கல்லூரிகள் | 11 | 4,320 | 28 | 21 | 973 | 828 | 109 | 61 | 679 | 466 | 383 | 222 | 78 | 48 | 26 | 8 | 2,276 | 1,654 | 3,930 |
| அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகள் | 3 | 3,263 | 107 | 75 | 1,080 | 735 | 79 | 40 | 409 | 254 | 224 | 150 | 55 | 31 | 17 | 7 | 1,971 | 1,292 | 3,263 |
| அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் உறுப்புக் கல்லூரிகள் | 20 | 8,350 | 171 | 105 | 1,598 | 1,268 | 187 | 90 | 1,174 | 723 | 592 | 424 | 80 | 58 | 26 | 13 | 3,828 | 2,681 | 6,509 |
| சுயநிதி கல்லூரிகள் | 472 | 2,05,593 | 6,434 | 3,147 | 43,818 | 27,690 | 5,285 | 1,916 | 26,879 | 14,353 | 13,493 | 8,621 | 2,053 | 1,541 | 580 | 375 | 98,542 | 57,643 | 1,56,185 |
| மொத்தம் | 506 | 2,21,526 | 6,740 | 3,348 | 47,469 | 30,521 | 5,660 | 2,107 | 29,141 | 15,796 | 14,692 | 9,417 | 2,266 | 1,678 | 649 | 403 | 1,06,617 | 63,270 | 1,69,887 |
| ஆக மொத்தம் | | | 10,088 | | 77,990 | | 7,767 | | 44,937 | | 24,109 | | 3,944 | | 1,052 | | 1,69,887 | | |

2023–24–ஆம் கல்வியாண்டில் மொத்தம் 9 மூன்றாம் பாலின மாணாக்கர்கள் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெற்றுள்ளனர்

## தொழில்நுட்பக் கல்வி

### 2023–24–ஆம் கல்வியாண்டில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பட்டய வகுப்பு மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | சேர்க்கை விவரம் | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொது | | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (மற்றவர்) | | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) | | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் | | ஆதிதிராவிடர் | | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | | பழங்குடியினர் | | மொத்தம் | | மொத்த சேர்க்கை |
| | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசு கல்லூரிகள் | 54 | 18,669 | 83 | 30 | 3,472 | 471 | 508 | 43 | 4,341 | 349 | 2,183 | 308 | 241 | 51 | 96 | 7 | 10,924 | 1,259 | 12,183 |
| அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகள் | 32 | 13,490 | 203 | 21 | 3,197 | 308 | 590 | 36 | 2,160 | 188 | 872 | 112 | 170 | 19 | 31 | 16 | 7,223 | 700 | 7,923 |
| இணைப்புப் பயிலகங்கள் | 4 | 253 | 13 | 1 | 33 | 1 | 5 | 0 | 27 | 0 | 23 | 1 | 0 | 0 | 2 | 0 | 103 | 3 | 106 |
| சுயநிதி கல்லூரிகள் | 401 | 1,21,947 | 1,171 | 194 | 10,311 | 948 | 1,903 | 109 | 9,794 | 756 | 13,752 | 1,849 | 1,609 | 355 | 473 | 108 | 39,013 | 4,319 | 43,332 |
| உணவு மேலாண்மை மற்றும் உணவு வழங்கல் பயிலகங்கள் | 1 | 30 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 | 3 | 0 | 12 | 0 | 0 | 0 | 0 | 0 | 17 | 0 | 17 |
| மொத்தம் | 492 | 1,54,389 | 1,470 | 246 | 17,015 | 1,728 | 3,006 | 188 | 16,325 | 1,293 | 16,842 | 2,270 | 2,020 | 425 | 602 | 131 | 57,280 | 6,281 | 63,561 |
| ஆக மொத்தம் | | | 1,716 | | 18,743 | | 3,194 | | 17,618 | | 19,112 | | 2,445 | | 733 | | 63,561 | | |

2023–24–ஆம் கல்வியாண்டில் 1 மூன்றாம் பாலின மாணாக்கர் சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்க்கை பெற்றுள்ளார்

## கல்லூரிக் கல்வி

### 2023–24–ஆம் கல்வியாண்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | சேர்க்கை விவரம் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | இளநிலை | | முதுநிலை | | ஆராய்ச்சி படிப்பு | | கல்வியியல் | | ஆராய்ச்சி மேற்படிப்பு | | மொத்தம் | | ஆக மொத்தம் |
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசு கல்லூரிகள் | 171 | 45,817 | 59,441 | 5,630 | 11,933 | 21 | 73 | 326 | 584 | 321 | 450 | 52,115 | 72,481 | 1,24,596 |
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | 162 | 27,692 | 36,921 | 4,563 | 10,017 | 42 | 76 | 71 | 1,384 | 146 | 593 | 32,514 | 48,991 | 81,505 |
| சுயநிதி கல்லூரிகள் | 1,293 | 81,318 | 1,12,988 | 11,422 | 25,905 | 210 | 322 | 7,740 | 49,516 | 192 | 582 | 1,00,882 | 1,89,313 | 2,90,195 |
| மொத்தம் | 1,626 | 1,54,827 | 2,09,350 | 21,615 | 47,855 | 273 | 471 | 8,137 | 51,484 | 659 | 1,625 | 1,85,511 | 3,10,785 | 4,96,296 |
| ஆக மொத்தம் | | 3,64,177 | | 69,470 | | 744 | | 59,621 | | 2,284 | | 4,96,296 | | |

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.